
# திருக்கோயில்

தூன் 1975 ரு. 1


TAMIL NADU ARCHIVES
LIBRARY
14 JUL 1975
MADRAS-8

# நீடூழி வாழ்க!



செந்தமிழ்த்தாய் ஈன்றளித்த திருப்புதல்வர்! அறிவு
திருஆற்றல் நலங்களெல்லாம் ஒருங்கிணைந்த செல்வர்!
அந்தமில்சீர்ப் பேரறிஞர் அண்ணாவின் அன்பிற்கு
அமைந்தபெருஞ் சீர்த்தம்பி! அரியசெயல் வீரர்!
சந்ததமும் தமிழ்,தமிழர் நலம்குறித்துச் சற்றும்
தளராமல் உழைத்துவரும் சால்புடைய தலைவர்!
நந்தம்அரும் பெரும்கலைஞர்! நல்லதமிழ் முதல்வர்!
நலங்களெலாம் சிறந்தோங்கி நீடூழி வாழ்க!

— ஆசிரியர்.

R.R.No.1217
TAMIL NADU ... UNIVERSITY 14 JUL 1975 MADRAS-5
99

**முகப்பு :**

மதுரை அருள்மிகு மீனட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் தேர்த் திருவிழாக் காட்சி.

வண்ணப்படம் உதவியவர் :
திரு. கே. இராமச்சந்திரன், பி. காம்., மதுரை.

# திருக்கோயில்

மாலை 17 | இராக்கத, வைகாசி — ஜூன், 1975 | மணி 9

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

* 'திருக்கோயில்' திங்கள் இதழின் 'சந்தாதாரர்கள்' ஆகச் சேர விருப்பமுள்ளவர்கள் ''திரு. ஆணையர், அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034'' என்னும் முகவரிக்கு ரூபாய் பன்னிரண்டு அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

* அந்தந்த வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் சந்தாவைச் செலுத்திச் சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

* இதழ்கள் தவருது கிடைத்திடச் சந்தாதாரர்கள் முழு முகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

* எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

ஆண்டுச் சந்தா ரூ. 12/- தனி இதழ் ரூ. 1/-

## பொருளடக்கம்

1. இராமநாதபுரம் மன்னர்களின் இராமேசுவரத் திருப்பணி
—திரு, எஸ். பி. முனுசாமி
2. கேசரியோகம்
—திரு. ஜி. வரதராஜ பிள்ளை, B.A.,
3. கண்ணைப் பறிகொடுத்த சீடர்
—திரு. கே. இ. பார்த்தசாரதி, B.A.,
4. நால்வர் தமிழ்
—சிவத்திரு. தத்புருட தேசிகர்
5. மண்வாகு
—திரு. ம. அ. முருகேசன், B.A., B.L.,
6. சமயச் சடங்குகள்
—நீதிபதி திரு. எஸ். மகராஜன்
7. பன்னிரு திருமுறைகள்
—புலவர் திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L.
8. கந்த புராணம்
—திருமுருக கிருபானந்தவாரியார்
9. திருவள்ளூர் அருள்திரு வீரராகவப்பெருமாள் திருக்கோயில்
—திரு. கே. எஸ். நரசிம்மன், B.A.,B.L., I.A.S.,
10. திருவாரூர்க் காமாட்சியம்மை திருக்கோயில்
—திரு. என். எஸ். ஐயாக்கண்ணு பத்தர்
11. இறைவனைப் பிரார்த்திப்போம்
—நீதிபதி திரு. மு. மு. இஸ்மாயில்
12. சைவ சித்தாந்தம்
—திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.,
13. உலகம் வாழ
—தவத்திரு. முத்துக்குமாரசுவாமித்தம்பிரான் சுவாமிகள்
14. ஆணவாசுரன்
—திரு. டி. ஆர். சுப்பிரமணியம்
15. நினைப்பது நிறைவேறும்
—திரு. கே. எஸ். ஜெகன்னுதன்
16. இதற்குமேல் ஒரு பணி இருக்கமுடியாது
—திருமுருக கிருபானந்தவாரியார்
17. சித்தாந்த சைவம்
—திரு. சி. அருணை வடிவேல் முதலியார்
18. உமாபதி சிவமும் சைவசித்தாந்தமும்
—புலவர் திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

ஆசிரியர்: ந. ரா. முருகவேள் M.A., M.O.L.
துணை ஆசிரியர்: கே. எஸ். ஜெகன்னுதன்

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"


158603
JL
Q2-m211,N58
N75.17.9

# இராமநாதபுரம் மன்னர்களின் இராமேசுவரத் திருப்பணி

திரு. எஸ். பி. முனுசாமி

மூர்த்தி, தலம், தீர்த்தம், ஆகிய மூன்றினாலும் சிறப்பும் புனிதமும் பெற்றுள்ள திருத்தலம், இராமேசுவரம் அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில் ஆகும். தேசீய ஒருமைப்பாட்டிற்கு மட்டுமின்றி, சைவவைணவ ஒருமைப்பாட்டிற்கும் சின்னமாக இத்திருக்கோயில் விளங்குகின்றது. இனம் மொழி மதம் முதலிய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டுத் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தேசத்தின் பல பாகங்களிலிருந்து வந்து தரிசித்துப் பேரின்பம் அடைகின்றனர்.

இந்தத் திருக்கோயில் திருப்பணிகள் ஒரு தனி மனிதனின் காலத்திலோ அல்லது ஒரு தனிமனிதனாலோ செய்து முடிக்கப்பட்டன அல்ல. இந்தத் திருக்கோயில் திருப்பணிக்காகப் பலர் பல வகைகளில் உதவியிருந்தபோதிலும், இராமநாதபுரம் மன்னர்களின் பங்கு பெரும் பகுதியாகும். நான்கு பக்கங்களிலும் கடலால் சூழப்பெற்ற இராமேசுவரத் தீவில் அமைந்துள்ள அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயில், ஆரம்பத்தில் கருங்கற்களால் அமைக்கப்பட்டிருக்கவில்லை. சுண்ணாம்புக்கல் என்று சொல்லப்படும் மிருதுவான வெள்ளைக் கற்களினாலேயே உருவாக்கப்பட்டுள்ளன. கருங்கல் திருப்பணியில் காணப்படும் நுணுக்கமான சிற்பவேலைகள் செய்யப்பட்டிராவிட்டாலும், புராதன வேலைப்பாடுகள் யாவும் வெள்ளைக் கல்லில் செய்யப்பட்டிருப்பது உற்றுநோக்கினால் காணப்படும். அவ்வேலைப்பாடுகள் அனைத்தும் மிக்க அழகு வாய்ந்தனவாகவும், பிரம்மிப்பு அடையச்செய்வனவாகவும் இருக்கின்றன. 1434-ஆம் ஆண்டில் உதயன் சேதுபதி இத்திருக்கோயிலின் 75 அடி உயரமுள்ள மேலக்கோபுரமும், பிரம்மாண்டமான திருமதில் சுவர்களும் கட்டக் காரணமாக இருந்ததாகத் தெரிகின்றது. இவரே இரண்டாம் பிராகாரத்தின் கிழக்குப் பாகம் பகுதிகளைக் கட்டியதாகத் தெரிய வருகிறது. இந்தத் திருக்கோயிலில் அமைக்கப்பட்டுள்ள நந்தி, மிகப் பெரிய உருவமுடையதாகும். இந்த நந்தி மண்டபமும், இதர திருப்பணிகளும் சின்ன உதயன் சேதுபதி கட்டித் தேவரால், 5168-ஆம் ஆண்டு செய்யப்பட்டதாகத் தெரிகிறது. 1904-ஆம் ஆண்டில் தேவகோட்டை ஜமீன்தார் ஏஎல். ஏஆர். சோமநாதன் செட்டியார் குடும்பத்தினரால் ஒன்பது அடுக்குகளும், 126 அடி உயரமும் உள்ள கிழக்குக் கோபுரம் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும், இந்தக் கோபுரம் 1649-ஆம் ஆண்டு தளவாய் சேதுபதி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு ஒரு பகுதி பூர்த்தி செய்யப்பட்டதாகத் தெரிகிறது. 1702-ஆம் ஆண்டில் இரண்யகர்ப்பயாஜி ரவிகுல விஜய ரகுநாத சேதுபதி அவர்கள், இத்திருக்கோயிலின் அம்மன் சந்நிதியில் பள்ளியறையையும், முன் மண்டபத்தையும் கட்டி முடித்துள்ளார்கள். உலகத்திலேயே அதிக நீளமானதும், நேர்த்தியான வேலைப்பாட்டுடன் அமைக்கப்பட்டதுமான புகழ்பெற்ற மூன்றாம் பிராகாரம் முத்துராமலிங்க சேதுபதி அவர்களால் 1740-ல் ஆரம்பிக்கப்பட்டு, 1770-ல் பூர்த்தி செய்யப்பட்டதாகத் தெரிகிறது. சுமார் 23 அடி உயரமும், 2400 அடி நீளமும் உடைய 1212 பெரிய தூண்கள் கொண்ட, இந்த மூன்றாம் பிராகாரத்தின் அமைப்பும் அழகும், எவரையும் வசீகரித்துப் பிரமிப்படையச் செய்வதாகும். உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் யாத்திரீகர்கள் வந்து இந்தப் பிராகாரத்தைப் பார்த்து மிக்க, வியப்பும் மகிழ்ச்சியும் அடைகின்றனர்.



இத்திருக்கோயிலின் கிழக்குப் பகுதியில், சுவாமி சந்நிதிக்கு எதிரில் அனுப்பு .மண்டபத்தை அடுத்து, சிமெண்டு அட்டைகளால் ஒரு கொட்டகை அமைக்கப்பட்டிருந்தது. இது திருக்கோயிலின் புராதனத்தையும் அழகையும் பாதிக்கக் கூடியதாக இருந்தது. இதனைக் கண்ணுற்ற தற்போதைய தர்மகர்த்தாக் குழுத் தலைவரும், இராமநாதபுரம் மன்னருமான திரு ச. இராமநாத சேதுபதி அவர்களின் உதவியால் மேற்படி கொட்டகை அப்புறப்படுத்தப்பட்டுக் கருங்கல் மண்டபம் ஒன்று, 1974-ல் நிர்மாணிக்கப்பட்டு, சேதுபதி மண்டபம் என்று பெயரிடப்பட்டுள்ளது. காலம் சென்ற திரு பாஸ்கர சேதுபதி அவர்களின் கம்பீரமான திருவுருவம் இந்த மண்டபத் தூண்களில் ஒன்றில் செதுக்கப்பட்டுள்ளது. புகழையும் செல்வாக்கையும் எதிர்பார்த்தே உதவ முன்வரும் பெரியோர்களுக்கு மத்தியில், சிந்தனை செயல் பேச்சு எல்லாவற்றிலும் இறைவனைக் காணும் தற்போதைய மன்னர் திரு. ச. இராமநாத சேதுபதி அவர்கள் இத்திருக்கோயிலுக்கு எவ்விதப் பயனையும் எதிர்பாராது அளித்துவரும் உதவி பலவகைகளிலும் பெருமை பெற்றதாகும். பண்டைக் காலத்தில் சேதுபதி அரசர்கள் திருக்கோயில் பராமரிப்புக்காக ஏராளமான நிலங்களையும், கிராமங்களையும் நகைகளையும் அளித்துள்ளார்கள். சேதுபதி அரசர்களின் தெய்வ பக்தி எல்லையற்றது; தொண்டுகள் இணையற்றவை. அவர்களின் பணி தொடர எல்லாம் வல்ல அருள்மிகு இராமநாதப் பெருமானையும், அருள்மிகு மலைவளர் காதலியம்மையையும் பிரார்த்திப்போமாக!

## இராமேசுவரம்


# திருக்கோயிலும் திருவிழாக்களும்

திரு. ச. இராமநாத சேதுபதி, B. A.,

இமயம் முதல் சேதுவரையில் பாவம் போக்கி மக்களுக்குப் பெருவாழ்வும், பேரின்பமும் அளிக்கும் பல புண்ணியத் தலங்களைத் தன்னகத்தே தாங்கித் திகழும் பாரதநாட்டில் வேதங்கள்—இதிகாசங்கள்—புராணங்கள் முதலியவற்றால் புகழப்படும் பெருமை வாய்ந்த புண்ணியத் தலங்களில், இராமேச்சுரம் முக்கியமானதாகும்.

இத்திருக்கோயிலில் முறைப்படி நடைபெற்றுவரும் ஆறுகால பூசைகளைத் தவிர, முக்கிய நாட்களில் சிறப்பு வழிபாடும், வாரபட்ச மாதாந்திர, வருடாந்திரத் திருவிழாக்களும், மிகவும் விமரிசையாக நடைபெற்று வருகின்றன. அவைகளில் தங்கப்பல்லக்குப் பவனி, பிரதோஷம், திருவிளக்குப் பூசை, சத்திய நாராயணபூசை, வசந்த உற்சவம், இராமலிங்கப்பிரதிட்டை உற்சவம், நவராத்திரித் திருவிழா, கந்தசஷ்டி விழா, ஆருத்திரா தரிசனம், திருக்கல்யாண உற்சவம், மகா சிவராத்திரி உற்சவம் ஆகியவை மிகவும் சிறப்பானவையாகும்.

பிரதி வெள்ளிக் கிழமையும் அம்பாளை, நவசக்தி மண்டபம் என்றும் சுக்கிரவார மண்டபம் என்றும் சொல்லக்கூடிய இடத்திற்கு எழுந்தருளச் செய்து, முறைப்படி தீபாராதனை செய்து அதன்பின் தங்கப் பல்லக்கில் மூன்றாம் பிராகாரத்தில் பவனிவரச் செய்வது முக்கியமானதொன்றாகும். இம்மாதிரி கொலுமண்டபப் பூசையில் தங்கப்பல்லக்கு பவனியும், சாத்திர சம்பிரதாய முறைகளும், வேறு எந்தத் திருக்கோயிலிலும் இல்லை என்றே சொல்லலாம். மரத்தினால் செய்யப்பட்ட பல்லக்கின் மீது தங்கத் தகடு போர்த்தப்பட்டுள்ளது. இதன் மதிப்பு சுமார் 25 லட்சமாகும்.



திரு. ச. இராமநாத சேதுபதி, B.A.,

பிரதி ஆங்கிலமாதமும் இரண்டாவது வெள்ளிக்கிழமையன்று சுவாமி அம்பாளைக் கிழக்கு மூன்றும் பிராகாரத்தில் சபாபதி சந்நிதிக்கு எதிரே எழுந்தருளச் செய்து, ஒரே உயரம் உள்ள ஐந்துமுகக் குத்துவிளக்குகள் 108, சுவாமிக்கு முன்னால் இரண்டு வரிசைகளில் வைத்து, சுமங்கலிப் பெண்களையும், கன்னிப் பெண்களையும் கொண்டு, அர்ச்சனை வழிபாடு செய்யப்படுவது கண்கொள்ளாக் காட்சியாகும். இந்த வழிபாட்டில் கலந்து கொள்ளத் தாய்மார்களுக்கிடையே ஏற்படும் போட்டியானது அவர்களின் பக்தியையும், வழிபாட்டில் உள்ள ஆர்வத்தையும் நன்கு எடுத்துக் காட்டும். இந்த விசேட பூசைக்காகப் பக்தர்களால் நன்கொடை வழங்கப்பட்டுத் தவணை வைப்பில் வைக்கப்பட்டுள்ள முதலீட்டிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு, இந்தப் பூசை நடத்தப்படுகிறது.

சேதுவைக் காக்கவும், விருப்பங்களைப் பூர்த்தி செய்யவும், இங்கு சாந்நித்தியம் பெற்றுத் தன்னை வந்து தரிசிப்பவர்கள் எல்லோருக்கும் சகல செளபாக்கியங்களையும் வாரி வழங்கும் அருள்மிகு சேதுமாதவர் சந்நிதியில் பிரதி பௌர்ணமி தினத்தன்றும், சத்தியநாராயண பூசை நடத்தப்படுகின்றது.

பிரதி வருடமும் வைகாசி மாதத்தில் வசந்த உற்சவம் நடத்தப்படுகின்றது. சுவாமி அம்மன் சேதுமாதவர் தீர்த்தக்கரைக்கு எழுந்தருளி முறைப்படி வாத்தியங்கள், வேத பாராயணம், தேவார திருவாசகம் மற்றும் சங்கீத சேவைகளுடன், சேதுமாதவ தீர்த்தக் கரைகளில் வலம் வருவதும், அதை அடுத்துச் சொக்கட்டான் மண்டபத்தில் தீபாராதனை நடைபெறுவதும் கண்கொள்ளாக்காட்சியாகும்.

பிரதி வருடமும் ஆனிமாதம் விபீடணர் சரணாகதி பட்டாபிஷேக உற்சவம் தனுஷ்கோடி செல்லும் சாலையில் பத்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயிலில் நடைபெறுகிறது. அதைத் தொடர்ந்து இந்தத் தலத்தின் மகாத்மியத்தைச் சித்திரிக்கும் இராமலிங்கப் பிரதிட்டை உற்சவம், திருக்கோயிலில் சிறப்பாக நடத்தப்படுகிறது.


பிரதி வருடம் நவராத்திரி விசேட நாட்களில் அம்மன் சந்நிதிக்குத் தென்புறம் அலங்காரப் பந்தல் அமைத்துக் கண்கவரும் மின் விளக்குகளால் அலங்கரித்து, அம்பாள் கொலு இருப்பதும், தினசரி சிறப்பு அலங்காரங்களுடன் முறையான தூப தீப ஆராதனைகள் செய்யப்படுவதும், கண்டுகளிப்புற்றுப் பேரின்பம் எய்தக் கூடியதாகும்.

மார்கழி மாதத்தில் திருவாதிரை நாளன்று, கிழக்கு மூன்றும் பிராகாரம் சபாபதி சந்நிதிக்கு முன்பு, ஏழு திரைகளை அமைத்து ஆருத்திரா தரிசனம் தந்து செய்யப்படும் வழிபாடு சிறப்புடையதாகும். தமிழ்நாட்டில் வேறு எந்தத் திருக்கோயிலிலும் இல்லாத ஒரு சிறப்பு அம்சமாகக்கூட இதனைச் சொல்லலாம்.

ஆடிமாதம் திருக்கல்யாண உற்சவம், பதினேழு நாட்கள் நடத்தப்படுகின்றது. இந்தத் திருவிழாவின்போது நடைபெறும் தவசுக் காட்சி, புஷ்பப் பல்லக்கு சேவை, திருக்கல்யாணக் காட்சி முதலியன, சிறப்பு அம்சங்கள் ஆகும். தமிழ்நாட்டில் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் இலட்சக் கணக்கில் வந்து வழிபட்டுப் பேரின்பம் அடைகின்றனர்.

பிரதி மாசி மாதம் சிவராத்திரியை அனுசரித்துப் பத்துநாட்கள் பிரம்மோற்சவம் நடத்தப்படுகிறது. அதுசமயம் இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து, குறிப்பாக வட இந்தியாவில் இருந்து இலட்சக்கணக்கான பக்தர்கள் வந்து கூடுகிறார்கள். பிரம்மோற்சவங்கள் இரண்டிலும் சுவாமி அம்மனை எழுந்தருளச் செய்யும் ரிஷபம், குதிரை, பூதம், யானை, கைலாச பருவதம், காமதேனு, கற்பக மரம், முதலிய வாகனங்களும் வெள்ளித் தேரும் மிகவும் சிறப்பானவையாகவும், நுட்ப வேலைப் பாடமைந்தவையாகவும் உள்ளன. இத்திருக் கோயிலில் பணியாற்றிய அறங்காவலர்களும், நிர்வாகஸ்தர்களும் பெரும் முயற்சி எடுத்து மிகுந்த அக்கறையுடனும்—கவனத்துடனும், இந்தத் திருக்கோயில் வாகனங்களையும், விலை உயர்ந்த நகைகளையும் செய்து வைத்திருப்பது, பாராட்டத்தக்கதும், போற்றத்தக்கதுமாகும்.

# கேசரியோகம்



திரு. கு. வரதராசபிள்ளை. திருச்சி

அட்டாங்க யோகம் என்ற தலைப்பில் யோகத்துக்குரிய எட்டு உறுப்புக்களைக் கூறிய பின் யோக வகைகளில் சிலவற்றை எடுத்து விளம்புகிறார் ஆசிரியர் திருமூலர். முதலில் கேசரி யோகத்தைப் பற்றிக் கூறுகிறார். யோகம் என்றால் சேர்க்கை என்று பொருள். கேசரி என்றால் ஆகாயம் சிங்கம் என்று பொருள். கேசரியோகமாவது, சிங்கத்தைப் போன்று மேல்நோக்கிப் பார்வையைச் செலுத்தியிருப்பதாகும். இவ்யோகத்தால் சீவன் ஆகாயத்தில் சஞ்சரிக்கும் ஆற்றலைப் பெறுவதால், இது கேசரி யோகம் எனப் பெறுகிறது என்றும் கூறலாம்.

கேசரியோகத்தை மூன்று வகையாகப் பயிலும் முறையை ஆசிரியர் விளக்குகிறார். அது அடயோகம், இலம்பிகாயோகம், இராஜ யோகம் என்ற மூன்று பிரிவில் அடங்கும். உடலை வருத்திப் பிராணாயாமப் பயிற்சி செய்து தேகசித்தி அடைந்து சமாதி நிலையைப் பெறுதல் அடயோகமுறை. இலயயோக முறையில் இலம்பிகா யோகப் பயிற்சியால் நாக்கை மடித்து உள்நாக்குப் பிரதேசந்திலுள்ள துவாரத்தை அடைத்துப் பிராணசெயம் பெற்றுச் சமாதிநிலை பெறுதல் இரண்டாவது வகை. இனி மூன்றாவதாக அறிவினால் அகண்டப் பொருளைத் தியானம் செய்து கண்டப் பொருளாகிய தேகத்தின் சக்தியை மாற்றிவிடுவதில் சமாதிநிலை அடைதல் இராஜயோக நெறியாம். ஆக இம்மூன்று வகைப் பயிற்சியாலும் அடையும் பயன் சமாதிநிலை என்ற ஒன்றேயாகும். இம்முறை சாதகனின் தகுதி நோக்கி அமைவதாகும்.

இனி கேசரியோகத்தில் அடயோகமுறையைத் தெரிந்து கொள்வதற்கு முன் மூலபந்தம், உட்டியான பந்தம், ஜாலந்தர பந்தம் ஆகிய மூன்று பந்தங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். மூலபந்தமாவது, இருவிலாப் பக்கங்களையும் நன்றாய் அழுந்தப் பிடித்துக் குதத்தை (எருவாய்) வலிந்து மேலெழச் செய்தல். இவ்விதப் பயிற்சியால் பிராண அபானன்கள் ஐக்கியத்தை அடைந்து அடயோக சித்திகள் சாதகருக்கு உண்டாகின்றன. உட்டியான பந்தமாவது, அடிவயிற்றை நாபிக்குமேல் ஏறச் செய்தல். இப்பயிற்சியால் அபானன் கீழ் நோக்குதல் தடுக்கப்பட்டுப் பிராணனுக்கு உந்துசக்தி உண்டாகி உயரப்போகிறது. அப்போது பிராணன் சுழுமுனை வழியில் மேல் நோக்கிச் செல்லும். இனி ஜாலந்தர பந்தனமாவது, கழுத்தை மார்பில் அழுந்தவைப்பது. இப்பயிற்சி காற்றைக் கீழ்நோக்கிச் செல்லாதவாறு கண்டத்தில் தடுக்கிறது. இஃது அமிர்தத்தைப் பெருகச் செய்யும். கழுத்தைச் சுருங்கச் செய்வதற்கான ஜாலந்தர பந்தனத்தாலும், குதத்தை மேலுந்துவதான மூலபந்தத்தாலும், அடிவயிற்றை மேலேறச் செய்வதான உட்டியான பந்தத்தாலும் பிராணன் விரைந்து சுழுமுனை நாடியில் பாயும் என்று 'யோகசிகோபநிஷத்து' என்னும் நூல் கூறுகிறது.

ஆசிரியர் திருமூலர் கேசரியோகம் என்ற பகுதியில் இவ் அடயோகமுறையை முதல் மந்திரத்தில் விளக்குகிறார்.

''கட்டக் கழன்று கீழ்நான்று வீழாமல்
அட்டத்தைக் கட்டி அடுப்பை அணைகோலி
விட்டத்தைப் பூட்டி மேற்பையைத் தாட்கோத்து
நட்ட மிருக்க நமனில்லை தானே.'' மந்—799

சாதகர் பத்மாசனத்தில் சாதனையைத் தொடங்க வேண்டும். முதலில் பிராணன் கீழே செல்லாது பிரமரந்திரம் நோக்கிச் செல்லுமாறு கழுத்தை நெஞ்சில் அழுந்த வைத்திருக்க வேண்டும். பின்னர் அபானன் குதம் வழியாகவோ குறிவழியாகவோ போகாது குதத்தைச் சுருக்கி நிறுத்த வேண்டும். அத்துடன் முழங்காலை மடக்கி முழங்கையையும் முழங்காலையும் வயிற்றுடன் பொருத்தி நேராக நிமிர்ந்திருக்க வேண்டும். இவ்வாறு ஜாலந்தர பந்தனமும், மூலபந்தமும், உட்டியான பந்தமும் முறையே அமையுமாறு பயிற்சி செய்து வந்தால் காலனை வெல்லலாம் என்கிறார் ஆசிரியர்.

அவ்வாறு பயிற்சி செய்து வந்தால் பிராணன் இடைகலைபிங்கலை வழியாக இயங்காது சுழுமுனை வழியாக இயங்கும். இப்பயிற்சியைப் பொழுது விடிவதற்கு ஆறு நாழிகை முன்னதாகச் செய்து வரவேண்டும். அதனால் சாதகர்க்குப் பிராணசெயம் அமைந்து உடம்புக்கு அழிவில்லையாம்.

''இடக்கை வலக்கை இரண்டையும் மாற்றித்
துதிக்கையால் உண்பார்க்குச் சோரவும் வேண்டாம்
உறக்கத்தை நீக்கி உணரவல் லார்கட்கு
இறக்கவும் வேண்டாம் இருக்கலு மாமே.''
மந்—801

இவ்வாறு சுழுமுனைத் தியானத்தை அதிகாலையில் தொடங்கிச் செய்து வருவார்க்கு அமுதம் பொங்கி வருவதோடு நாதம் உண்டாகிச் சிரசின்மேல் சந்திரமண்டலம் விளங்கி அருள் சுரக்கும் என்க.

''ஆய்ந்துரை செய்யில் அமுதம்நின் றூறிடும்
வாய்ந்துரை செய்யும் வருகின்ற காலத்து
நீந்துரை செய்யில் நிலாமண் டலமதாய்ப்
பாய்ந்துரை செய்தது பாலிக்கு மாறே.'' மந்—802

அடுத்துக் கேசரியோக சாதனையில் இன்னொரு வகைப் பயிற்சியை ஆசிரியர் அருளுகிறார். அஃதாவது சாதகர் ஆசனத்தில் அமர்ந்து நாவின்நுனியை அண்ணாக்கின் மேல் வீசியிருக்க வேண்டும். இங்கு நாக்கை மடித்து அண்ணாக்கில் ஏற்றிச் செய்யும் இலம்பிகா யோகத்தைக் குறிப்பிடுகிறார். அவ்வாறு சாதனை செய்யின் பிராணன் அண்ணாக்கின் வழியாகப் பிரமரந்திரம் செல்லும். அதுவே சீவ

னும் சிவனும் உறைகின்ற இடமாகும். அங்கே பிரமனாதி மூவரும், முப்பத்துமுக்கோடித் தேவரும் உள்ளனர். அந்நிலை அடைந்தவர் மரணமிலாப் பெருவாழ்வு வாழ்பவராவர்.

''நாவின் நுனியை நடுவே சிவிறிடிற்
சீவனும் அங்கே சிவனும் உறைவிடம்
மூவரும் முப்பத்து மூவருந் தோன்றுவர்
சாவதும் இல்லைச் சதகோடி யூனே.'' மந்-803

இவ்வாறு நாவை மடித்து மேலேற்றி யிருக்கும்போது பிராண அபானன்களாகிய இரண்டும் அண்ணாக்கின் வழியாக மேற்செல்லச் சுழுமுனை திறக்கும் என்கிறார். அச்சாதகர் நரை திரையின்றிப் பாலனாய் வாழ்வார்.

''மேலையண் ணாவில் விரைந்திரு காலிடிற்
காலனும் இல்லைக் கதவுந் திறந்திடும்
ஞாலம் அறிய நரைதிரை மாறிடும்
பாலனு மாவன் பராநந்தி ஆணையே.'' மந்—805

இம்முறையில் சிவனை முன்னிட்டுக்கொண்டு நாவினை மேலேறும்படி செய்து அங்கே நடு நாடியின் உச்சியில் சந்தித்திருப்பின் அச்சாதகர் உலகமுழுதும் ஆள்வார். அவரது பிராணன் இலயமடைந்து உடலோடு பொருந்தியிருக்கும் அறிவு விடுபட்டு நிற்கும். நடுநாடியின் உச்சியில் பொருந்தி உடலறிவு நீங்கிநிற்கும் சாதகரே உண்மையான அக்கினி காரியம் செய்தவராவார்.

''நந்தி முதலாக நாமேலே யேறிட்டுச்
சந்தித் திருக்கில் தரணி முழுதாளும்
பந்தித் திருக்கும் பகலோன் வெளியாகச்
சிந்தித் திருப்பவர் தீவினை யாளரே.'' மந்—896

நாவினால் சாதனை செய்து இன்பத்தைக் கண்டவர் நடுநாடியின் கோணலை நிமிர்த்துத் திறக்கச் செய்து இவ்வூனுடலிலேயே அமுதத்தைக் காண்பர். அவ்வழியாகச் சென்று அமுதத்தைப் பருகிச் சிவாயநம எனச் சிந்தித்திருப்பார்க்குக் கங்காப் பிரவாகம் போன்ற ஒளி முகத்தின்முன் பெருகும். அவ்வாகாய கங்கையில் மூழ்கித் திளைத்திருங்கள் என்று ஆசிரியர் அருளுகிறார்.

''ஊனீர் வழியாக வுண்ணவை யேறிட்டுத்
தேனீர் பருகிச் சிவாயநம வென்று
கானீர் வரும்வழி கங்கை தருவிக்கும்
வானீர் வரும்வழி வாய்ந்தறி வீரே.'' மந்—800

அந்நிலை எய்தியவரது உடம்பே சிவனுறையும் கோயிலாகும்.

''எந்தையே யீசா உடலிடங் கொண்டாய்''

என்ற மாணிக்கவாசகரது வாக்காலும் இவ்வுடம்பு சிவனுறையும் கோயிலாகும் என்பது புலனாகிறது. இவ்வுடம்பில் அறிவுமயமான சிவனுக்கேற்ப ஆற்றலையுடைய சத்தியும் சாதகருக்கு விளங்குவாள். அப்போது உண்மை ஞானம் விளங்கிச் சாதகர் சிவசக்தியோடு பொருந்தியிருக்கும் நிலை உண்டாகும். இச்சாதகர்க்குப் பிராணன் கண்டத்திலிருந்து உள்முகமாக மேல்நோக்கிச் செல்லும். அவரது சிரசின் மேலுள்ள சகஸ்ரதளம் விரிந்து விளங்கிப் பூமண்டலத்தில் நெடிது வாழ்வர்.

இனி மூன்றாவதாக அறிவினால் அகண்டப் பொருளை எண்ணித் தேகத்தின் சக்தியை மாற்றிவிடும் உபாயத்தை ஆசிரியர் அருளுகிறார்.

''வண்ணான் ஒலிக்குஞ் சதுரப் பலகைமேற்
கண்ணாறு மோழை படாமற் கரைகட்டி
விண்ணாறு பாய்ச்சிக் குளத்தை நிரப்பினால்
அண்ணாந்து பார்க்க அழுக்கற்ற வாறே.'' மந்-800

அஃதாவது இராஜயோகம் புரியும் சிவயோகி இரு கண்பார்வையையும் மூளையின் முன்புறம் (நெற்றிப் பிரதேசம்) செலுத்தியிருக்க வேண்டும். அப்பார்வையால் பெருகும் ஒளியைக் கொண்டு சகஸ்ரதளமாகிய குளத்தை நிரப்பியிருந்தால் சாதகரது குற்றமாகிய இருள் விலகித் தூய்மை உண்டாகும். இதனை ஆசிரியப் பெருமகனார் ஓர் உவமையால் விளக்குகிறார்.

வண்ணான் அழுக்காடையை உவர்மண் கலந்து வேக வைத்துக் கல்லில் துவைப்பதால் அழுக்கு ஆடையினின்றும் நீங்குவதுபோல் சாதகர் மூலபந்தம் என்ற காரத்தில் தவம் என்ற அக்கினியில் வேக வைத்து முன்புற மூளையில் நாதத்தால் மோதி ஆகாயத்தில் நிலைபெற்ற போது அதன் குற்றமாகிய மலம் நீங்கும் என்பது அவ்வுவமையாகும்.

அவ்வாறு அண்ணாந்து பார்ப்பதால் சகஸ்ரதளம் விரிந்து விளங்கி மனம் அங்கே பதிவுண்டிருக்கும். மனம் சலியாது சிரசின்மேல் நின்றபோது இயல்பான ஜாலந்திரபந்தனம் அமைந்து சுவாசம் தடைப்படும் என்க. இச்சாதகர்க்குப் பிறப்பிறப்பு இல்லையாம்.

''மண்டலத் துள்ளே மனவொட்டி யாணத்தைக்
கண்டகத் தங்கே கருதியே கீழ்க்கட்டிப்
பண்டகத் துள்ளே பகலே ஒளியாகக்
குண்டலக் காதனும் கூத்தொழிந் தானே''.
மந்—818

மனம் ஒளியாகிய திருவடியைப் பற்றி நிற்கும்போது உடம்பின் பற்று தானே விடுபடும். பற்றுவிடவே இருளில் நிலைபெற்றிருந்த சீவன் ஒளியோடு பொருந்தி விளங்குவான். மேலும் பிராண அபானன் சேர்க்கை உண்டாகும். அவர்கள் இருந்தபடி இருந்த இடத்திலேயே எல்லாவற்றையும் அறிவர். பராசக்தியின் துணைகொண்டு சிவஞானம் பெற்றமையால் நிலம் முதலானவை பகலில் காணப்படுவதுபோல் அவரது காட்சிக்கு விளங்கும்.

''தூர தரிசனஞ் சொல்லுவன் காணலாங்
காராருங் கண்ணி கடைஞான முட்பெய்தி
ஏராருந் தீபத் தெழிற்சிந்தை வைத்திடிற்
பாரா ருலகம் பகன்முன்ன தாமே.'' மந்—823

''எவன் கேசரி முத்திரையால் அண்ணாக்கின் அடியிலுள்ள துவாரத்தை அடைத்து விடுகிறானோ அவனுக்கு அழுதவடிவான வீரியமானது யோனிவடிவ அக்கினியில் வீழ்வதில்லை. பிராண அபானன்களாகிய காற்றும் அலையாது நிலைபெறுகின்றது. மற்றும் அவனுக்குப் பசி உண்டாவதில்லை. அவன் மறிப்பதே இல்லை என்று அறிக. இக்கேசரி முத்திரையை ஆசாரியனிடத்துக் கேட்டு அதன்படி நன்றாய்ப் பயின்று அதன் உண்மையைத் தெரிந்தவனுக்கே இவ்விதப் பயன் கூடுமென்று அறிக.''

—யோகசிகோபநிஷத்து.

இதுகாறும் கூறியவாற்றால் கேசரியோகத்தை அடயோகமுறை பற்றியும், இலம்பிகா யோகமுறை பற்றியும், இராஜயோக முறை பற்றியும் பயிலலாம் என்றும், எல்லாவற்றுக்கும் பயன் மனமடங்கிப் பிராணசெயம் பெறுதலே என்றும், பிராணசெயம் பெற்று எல்லாப் பொருளும் விளங்கியிருந்து நெடிது வாழலாம் என்றும் உணரப் பெறுவனவாகும்.

*

# கண்ணைப் பறிகொடுத்த சீடர்



திரு. கே. இ. பார்த்தசாரதி. பி. ஏ.

கூரத்தாழ்வான் இராமானுசரின் பிரதம சீடர். இவர் தை மாதத்தில் அஸ்த நட்சத்திரத்தில் அவதரித்தார். ஆசாரியபக்தி, பகவத்பக்தி, வைராக்கியம், பாண்டித்தியம், சத்கர்மானுனுஷ்டானம் முதலியன ஒருங்கே பொருந்தியவர். ''இராமானுசரின் மகிமையைப் பற்றிப் பேசித் தலைக்கட்டலாம்; ஆனல் கூரேசரின் மகிமையைப் பற்றிப் பேசித் தலைக்கட்ட முடியாது'' என்பது, பல பரம வைணவ ஆசாரியர்களின் கொள்கை. இதற்கு அடிப்படை அவர் அற்புதமான வாழ்க்கையும், ஒப்பற்ற குணங்களுமேயாம். அவர் வாழ்க்கையில் ஏற்பட்ட ஒவ்வொரு நிகழ்ச்சியும் நெஞ்சை உருக்கும். சில வற்றை மட்டும் இங்கெடுத்துக் கூறுவோம்.

இவர் காஞ்சிபுரத்திற்கு வடமேற்கிலுள்ள கூரம் என்ற ஊரின் தலைவராக விளங்கியதால் கூரேசர் எனப்பட்டார். இவருக்குத் தமிழில் ''திருமறு மார்பன்'' என்றும் சம்ஸ்கிருதத்தில் ''ஸ்ரீவத்ஸாங்கமிச்ரர்'' என்றும் பெயர் வழங்கப் பெற்று வந்தது. நம்மாழ்வாரின் திருவாய்மொழியில் மிக்க உருக்கமுடையவராயிருந்ததாலும், ஆழ்வாரைப்போலச் சில சமயங்களில் மோகித்ததாலும், இவருக்கு இராமானுசரால் 'ஆழ்வான்' என்ற பெயர் அளிக்கப்பட்டது.

திருமணமின்றிப் பிரம்மசாரியாகவே காலம் கழிக்க எண்ணியிருந்தார். மிகப்படித்தவளாயிருந்த ஒரு பெண்ணை மணம் செய்து கொள்பவர்க்கு அப்போதே மரணம் சம்பவிக்கும் என்று சோதிடர் கூறியதன் பயனாக அவளை மணக்க எவரும் முன் வரவில்லை. இதனால் அவள் பெற்றோர் மனம் புழுங்கி வருந்தினர். ஆழ்வான் அப்பெண்ணை மணம் புரிந்துகொள்ள முன் வந்து விவாகம் செய்து கொண்டார். இது ஒப்பற்ற தியாகமாகும். அவள் பெயர் ஆண்டாள். அவளும் சிற்றின்பத்தில் மனம் சிறிதும் செல்லாதவளாய் ஞானம், பக்தி, வைராக்கியம் நாள்தோறும் வளரப் பெற்று, அவருக்குத் தகுந்த மனைவியாகஇருந்துவந்தாள். சாஸ்த்திரார்த்தங்களில் தமக்கு ஏதாவது ஐயம் தோன்றிடின் தேவியாரைக் கேட்டுத் தெளிந்து கொள்வது வழக்கமென்று பெரியோர் பகர்வர்.

தம்முடைய செல்வத்தை எல்லாம் தானம் செய்துவிட்டு, சீலராக வாழ்ந்த இவர் திருக்கச்சி நம்பிகள் மூலம் ஆழ்வார்களைப்பற்றிக் கேட்டு இராமானுசரை ஆசாரியராகப் பெற்று அவர் திருவடிகளின் கீழே, நிழலும் அடிதாறும் போல் ஒருகாலமும் பிரியாமல் அத்தாணிச் சேவகராய் சாத்திரங்களையும் சம்பிரதாயங்களையும் ஓதுவித்துக்கொண்டு, இதுவே போது போக்காக எழுந்தருளியிருந்தார்.

பிரம்மசூத்திரத்திற்கு ஸ்ரீபாஷ்யம் செய்வதில் இராமானுஜருக்குப் பேருதவியாக ஆழ்வான் இருந்தார். தாம் சொல்லிக் கொண்டு வருவதை எழுதிக்கொண்டே வரும்படி ஆழ்வானுக்குப் பணித்தார். அந்த நேரத்தில் பொருத்தமாகப்பட்டாலொழிய அவற்றை எழுத வேண்டாமென்றும் கூறினர். ஆழ்வாரின் கொள்கைகளை மனத்தில் பதிய வைத்துக் கொண்டு நாதமுனிகள் முதலான ஆசாரியர்கள் அபிப்பிராயங்களைப் பின்பற்றி எதிரிகள் கொள்கைகளைக் கண்டித்து விளக்கம் செய்து கொண்டே சென்றார் குரு. அப்படியே எழுதிக் கொண்டு வந்த ஆழ்வான் ஒருநாள் ஓர் இடத்தில் எழுதாமல் நிறுத்தினர். கவனக்குறைவுடன் இருக்கிறார் என்றெண்ணி மறுமுறையும் இராமானுஜர் அதைத் திரும்பவும் கூறினர். ஆனல் ஆழ்வான் எழுதவில்லை. குருகோபங் கொண்டு 'இனி நீரே பாஷியம் செய்யும்' என்று கூறி வெளியேறினர். அவருடன் இருந்த சீடர்களெல்லாம் மனம் பதறி ஆழ்வான் மீது கோபித்தனர். ஆனல் சிறிது நேரத்திற்கெல்லாம் இராமானுஜரே திரும்பி வந்து 'நான் கூறிய பொருள் முன்னுக்குப் பின் முரணானது தான்; கோபத்தில் உண்மை அறியாமல் உம்மை நிந்தித்தேன்'' என்று கூறி அவரைக் கட்டி அணைத்துக் கொண்டாராம். இச்சம்பவத்தினின்று ஆழ்வானின் மகிமை நன்கு விளங்கும்.

இராமானுசர் திருவரங்கம் ஆலயத்தில் சீர்திருத்தங்கள் செய்வதிலும், கூரத்தாழ்வான் சிறந்த பங்கெடுத்துக் கொண்டார். அந்நாளில் அரங்கன் ஆலயம் திருவரங்கத்து அமுதனார் என்ற பெருஞ் செல்வர் நிர்வாகத்தில் இருந்து வந்தது. அமுதனாரின் தாய் இறந்த பின் நடந்த ஏகாஹத்துக்கு ''நியமந்த்ரண சுவாமியாக ஒருவரை நியமித்தருளவேணும்'' என்று இராமாநுஜரை வேண்டிக்கொள்ள, ஆழ்வானும் தன்னுடைய குருவின் கட்டளைப்படி பிதிர் நிலையில் இருந்து உணவு உண்டார். அமுதனார் அப்போது ஆழ்வானுக்குப் பெருஞ் செல்வத்தைக் காணிக்கையாகக் கொடுத்தார். ஆனல் ஆலய நிர்வாகத்தின் அறிகுறியாக ஆலயத் திறவுகோலை அளித்தபோதுதான் கூரேசர் தமது மனச்சாந்தியைத் தெரிவித்தாராம். அந்தத் திறவுகோலை இராமாநுசர் பாதத்தில் வைத்துப் பணிந்தாராம் கூரேசர். இவ்வாறு திருவரங்கம் ஆலயம் இராமானுசர் கைக்கு வருவதற்கு உதவியாக இருந்தார்.

தினமும் உபாதானம் செய்து உண்டுகொண்டிருந்த இவர் ஒரு நாள் கடுமழையால் வெளியே செல்லவில்லை. ''உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன் எம்

பெருமான்'' என்ற நம்மாழ்வார் வாக்கின்படி அரங்கனைத்தாரகனென்று இவரும் இவர் மனைவியும் பகல் முழுவதும் பட்டினி கிடந்து இரவில் திருவாய்மொழி அநுசந்தானம் செய்து கொண்டே களைப்பால் உறங்கிவிட்டார். அரசனைப்போல் வாழ்ந்த இவர் பட்டினி கிடப்பதை நினைந்து இவர் மனைவி வருந்தினாள். இரவில் அரங்கநாதனுக்குத் தளிகை நடப்பது காரணமாக வாத்தியங்கள் முழங்கின. பக்தர் பட்டினி கிடக்க அரங்கநாதன் சாப்பிடுவதா என்று மனம் ஏங்கினாள், மனைவி ஆண்டாள். சிறிது நேரத்திற்கெல்லாம் கோயில் அர்ச்சகர்கள் பிரசாதங்களுடன் கூரத்தாழ்வானை அணுகி அவற்றை ஏற்றுக் கொள்ளும்படி கூறினார்கள். அது அரங்கனது ஆணை என்றனர். அன்று உண்ட பிரசாதத்தின் மகிமையால் ஆழ்வானுக்கு இரண்டு புதல்வர்கள் பிறந்தனர்.

இராமானுசர் காலத்திய சோழ மன்னன் குலோத்துங்கன் பரம சைவனாயிருந்தான். சிவபெருமானுடைய பரத்துவத்தை நிலைநாட்ட இராமானுசருடைய அநுமதியையே பெற விரும்பினான். இராமானுசரைத் தன்னுடைய அவைக் களத்திற்கு அழைத்து வரும்படி காவலாளரை ஏவினான். அவர்கள் மடத்திற்கு வந்த போது, சீடர்கள் குருவின் உயிருக்கே கேடு விளையும் என்று பயந்தனர். இராமானுசர் என்று தம்மைக் கூறிக்கொண்டு கூரேசர் பெரிய நம்பிகளுடன் சோழன் அவைக்களத்திற்குச் சென்றார். இராமானுசர் மாறு வேடத்துடன் சில சீடர்களுடன் ஒய்சள நாட்டிற்குச் சென்று விட்டார்.

இராமானுசரின் மதத்தைச் சார்ந்த நாலூரான் சோழ மன்னனின் அமைச்சனாக இருந்தான். ஆனால், சுயநலம் கருதி, அரசனின் நல்லெண்ணத்தைப் பெற இராமானுசரின் அநுமதிபெற்றுச் சைவமதத்திற்கு ஆதரவு தேடும்படி கூறினான். 'சிவம் பெரியது' என்பது பற்றி ஆட்சேபணை இன்மையால் அது கண்ட முறியில் கையெழுத்திடும்படி அரசன் கூரேசரைக்கேட்டான். சிவத்தை விடத் துரோணம் பெரியது என்று கூரேசர் கூறினார். 'சிவம்', 'துரோணம்' இரண்டும் அளவைகள். இந்த வேடிக்கை வார்த்தை அரசனுக்குக் கோபம் மூட்டியது. அங்கே போந்தவர் இராமானுசர் அல்லரென்றும் ஆனால் அவருக்குச் சமமாகத் திறமும் அறிவும் பெற்ற சீடர் என்றும் நாலூரான் கூறினான். அரசன் கோபத்துடன் அவர்களுடைய கண்களைப் பிடுங்கிவிடும்படி கட்டளையிட்டான்.

அவ்வளவிலே கூரேசரும் அரசனைக் கடைசியாக ஒரு பார்வை பார்த்து விட்டு ''கொடுங்கோலனாகிய உன்னைப் பார்த்த கண்கள் எனக்குத்தான் ஆகுமா' என்று தாமே கண்களைப் பிடுங்கி எறிந்து விட்டாராம். பின்பு பெரிய நம்பியைப்பிடித்துக்கொண்டுபோய் சேவகர்கள் அரசனுடைய கொடுமையான உத்திரவை நிறைவேற்றினார்கள். அவர் நோயைப் பொறுக்க மாட்டாமல் இறந்து விட்டார். கூரேசரோ தாம் இராமானுசரைக் காப்பாற்றியதற்காக சந்தோஷமடைந்தார். கண்களுக்காக எள்ளளவும் கவலைப்படவில்லை. தமது குருவைக் காப்பாற்றி வைணவம் முன்னேறக் கூரேசர் செய்த தியாகம் மகத்தானது. இது வைணவத்தின் வெற்றியாகும். இத்தகைய தியாகம் வேறெவரும் வைணவத்தில் செய்ததாகத் தெரியவில்லை.

மேலே சொன்ன சோழ அரசன் மரணம் அடைந்த பின், இராமானுசர் திரும்பியதும், கூரேசருக்காக மிகவும் அனுதாபம் கொண்டு ''வரதராஜப் பெருமாளை ஸ்தோத்திரம் செய்து நீர் இழந்த கண்களை மீண்டும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினாராம். கூரேசர் வரதராஜனை ஸ்தோத்திரம் செய்தார். ஆனால் தமக்குக் கண் வேண்டுமென்று கேட்கவில்லை. 'நான் பெற்ற பேறு நாலூரானும் பெற வேண்டும்!' என்ற வேண்டுகோளோடு பிரார்த்தனை முடிந்து விட்டது. தாமும் பெரிய நம்பிகளும் கண்களை இழப்பதற்குக் காரணமாக இருந்த துரோகிக்காகப் பரிந்து செய்தபிரார்த்தனைஇது. இராமானுசரையே இது திடுக்கிடச் செய்தது.

''மொழியைக் கடக்கும் பெரும்புகழான்
வஞ்சமுக் குறும்பாம்
குழியைக் கடத்தும் நம் கூரத்தாழ்வான்''

என்று கூரேசருடைய புகழைப்பற்றி இராமானுச நூற்றந்தாதியில் அமுதனார் அமுதமொழியில் குறிப்பிட்டுள்ளார். வாய் கொண்டு வருணிக்க முடியாத பெரிய புகழையுடையவரும், கல்விச் செருக்கு, செல்வச் செருக்கு, குலச் செருக்கு என்னும் மூவகைக் குறும்புகளாகிற படுகுழியைக் கடந்தவர் கூரத்தாழ்வான். மகா துரோகியான நாலூரானைக் குறித்து ''நான் பெற்ற பேறு நாலூரானும் பெற வேணும்'' என்ற வரம் வேண்டிக் கொள்ளும்படி பரந்த திருவுள்ளம் பெற்ற ஆழ்வானுடைய புகழ் சொல்லுக்கடங்காது. ''மொழியைக் கடக்கும் பெரும்புகழான்'' என்ற வாசகமே சாலப் பொருந்தும்.

*

# நால்வர் தமிழ்



சிவத்திரு தத்புருட தேசிகர்

சித்தாந்த சைவ சம்பிரதாயத்துக்கும் நான்கு என்ற எண்ணுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. சைவம் வேத சிவாகமங்களைப் பிரமாண நூல்களாகக் கொண்டது. வேதம் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்காக வகுக்கப் பெற்றது. வேதத்தில் உணர்த்தப் பெறுவனவும் மக்கள் அடைய வேண்டுவனவும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய உறுதிப் பொருள்கள் நான்கு.

சிவாகமங்களில் சிவ பெருமானது சொரூபம், அருவம், அருவுருவம், உருவம் ஆகிய நால்வகைத் திருமேனிகள் கூறப்பெறும். ஆகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களை உடையன. இப்பாதங்களில் நின்று ஒழுகுபவர்கள் சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்னும் நான்கு வகை முத்திகளைப் பெறுவார்கள்.

சிவபெருமான் தென்முகக் கடவுளாயெழுந்தருளியிருந்து சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய நான்கு பெருமுனிவர்களுக்கு அருளுபதேசம் செய்தார். சிவபெருமானிடம் ஞானோபதேசம் பெற்ற அகச்சந்தான குரவர் பரம்பரை நந்தியம் பெருமான், சனற்குமார முனிவர், சத்திய ஞானதரிசினி, பரஞ்சோதி முனிவர் என்னும் நால்வரில் நிலைபெற்றது. நிலவுலகத்தில் அந்தப் பரம்பரை மெய்கண்டசிவம், அருணந்தி சிவம், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவம் ஆகிய நான்கு புறச் சந்தான குரவர்களால் வளர்ந்து வருகிறது. மந்திரங்கள் மூலம், பிரமம், அங்கம், தேகம் என்னும் நான்கு வகையில் அமைவன. நிலைபேறுகிய பேரின்பத்தை எளிதில் வழங்குகின்ற தமிழை—சித்தத்தினிக்கும் தேவார திருவாசகத் தீந்தமிழைத் தந்தருளியவர்கள் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் என்னும் நால்வர்.

மக்கள் வழங்குகின்ற எல்லா மொழிகளிலும் சிறந்தது, ''செந்தமிழ் மொழியே'' என்பதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்பெறுகின்றன. அவையனைத்தும் ஏற்றுக் கொள்ளத் தக்கனவே என்றாலும், அவை எல்லாவற்றிற்கும் சிகரமாகத் தலைசிறந்த ஒரு காரணம் உள்ளது என்பதை மறந்து விடுதல் கூடாது. அதுதான், கடவுளோடு நெருங்கியும் இடையீடில்லாமலும் தமிழ்மொழி கொண்டிருக்கிற பெருந்தொடர்பு. எழும்புகின்ற ஓசை யொலிகள் அனைத்தும் இறைவனது சங்கற்ப அடிப்படியை உடையன. அதனால் இறைவனே ஓசையொலி வடிவினனாய் இருக்கின்றானென்று அருள் நூல்கள் கூறுகின்ற பொழுது, மக்கள் வழங்குகின்ற மொழிகளில் ஒன்றுக் கொன்று ஏற்றத்தாழ்வு உண்டா என்ற ஐயம் எழலாம். மூலநிலையில் எல்லா ஒலிகளும் இறைவனது சங்கற்பம் என்று ஒற்றுமை காண்பதுடன், மற்ற மொழிகளில் பாலில் நெய்போலப் பரம்பொருள் மறைந்தும், தமிழ் மொழியில் தயிரில் நெய்போல் வெளிப்பட்டும் விளங்குகிறது என்ற வேற்றுமையையும் கண்டுகொள்ள வேண்டும்.

பல கோணங்களில் புகுந்து பரம்பொருளைத் தேடிய வேதம், இறுதியில் இது இல்லை. இது இல்லை என்றே கூறி இளைத்து விட்டது. ''வேதங்கள், ஐயா என வோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே'' என்பது திருவாசகம். சிவாகமங்கள் சிவ பரம்பொருளின் சொரூப தடத்த இலக்கணங்களைத் தெளிவு செய்வனவே யெனினும் கோடிக்கணக்கான கிரந்தங்களை யுடையனவாய் ஒருவனது ஆயுள் நாளில் கற்றுணர்ந்துதெளிந்து கொள்ள முடியாதனவாய் விரிந்து கிடக்கின்றன. அதனால் கருணைக் கடலாகிய சிவபெருமான் சமய குரவர் நால்வரையும் நிலவுலகத்தில் அவதரிக்கச் செய்து தேவார திருவாசகமாகிய தமிழ் அருள் நூல்களை அவர்களை அதிட்டித்து நின்று வெளிப்படுத்தி, வேத சிவாகம உண்மைகளை நாம் எளிதில் உணரும் வண்ணம் வைத்தருளினார். தேவார திருவாசகமாகிய அருள் நூல்களைக் கொண்டுள்ளமையினாலேயே செந்தமிழ் மொழி நிலையான சிறப்பைப் பெற்று விளங்கிக் கொண்டிருக்கின்றதென்பதைச் சிந்தித்து உணர்கின்ற திறமுடையவர் நன்கு அறிவர்.

வேத சிவாகமங்களையும், தேவார திருவாசகங்களையும் 'மந்திரங்கள்' என்று கூறுவது மரபு. 'மந்திரம்' என்ற சொற்றொடர் 'நினைப்பவனைக் காப்பது' என்னும் பொருளையுடையது. விரிந்து கிடக்கின்ற வேத சிவாகம மந்திரங்கள் தன்னை நினைப்பவனைக் காக்கின்ற தகுதியுடையனவே யாயினும், பல்காலும் ஓதிச் சேமம் செய்து கொண்டவனுக்கே அவை விரைந்த பயனை வழங்கி வருவது கண்கூடு. தேவார திருவாசகமாகியனவோ, காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, ஒரு முறை ஓதியவனுக்குங் கூட உண்மைப் பயனை உடனடியாகத் தருவனவாம். 'கண்ட பெரு மந்திரமே மூவர் பாடல், கைகாணு மந்திரம் கண்ணுதலோன் கூறல்' என்பது உமாபதி சிவம் திருவாக்கு. மேலும் வேத சிவாகம மந்திரங்களைத் திருமுறைப் பயிற்சி இல்லாதவர் ஓதுகின்ற பொழுது தாழ்ந்த பயனையும், அவற்றையே திருமுறைப் பயிற்சி உடையார் ஓதுகின்றபொழுது விரைந்த பயனையும் பெறுவர் என்பது, நூலறிவானும் அநுபவ அறிவானும் புலப்படுபவையாகும். ஆளுடைய பிள்ளையார் புராணத்தில் அத்திர

மந்திரத்தை ஓதிப் புத்தநந்தி தலையில் ஓதிய மாத்திரத்தில் இடிவிழச் செய்தவர் பிள்ளையாரது திருவாக்கை ஏட்டிலெழுதி வந்த அன்பர் என்பது இவ்வுண்மையை நன்கு தெளிவு செய்யும்.

மந்திர வடிவமாய் விளங்கி, மக்களுக்கு இம்மை மறுமை நலங்கள் அனைத்தையும் வழங்கி வருகின்ற தேவார திருவாசகமாகிய அருள் நூல்களைத் தன்னிடத்திலே கொண்டிருக்கிற தமிழ் மொழி, மற்ற மொழிகளை விடச் சிறந்த தாயிருப்பது உண்மையேயாகும். தேவார திருவாசகமாகியவற்றை அருளிச் செய்த ஆசிரியர் நால்வரும் தம்மையிழந்து தலைவனேயாகிய பெரு மக்கள். அதனாலேயே அவர்கள் வாக்கைப் பதிவாக்கென்று சமய சம்பிரதாயம் போற்றி வருகின்றது.

சமய குரவர் நால்வரையும் தவங்கள் அனைத்திலும் மேம்பட்டனவாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நற்றவங்கள் நான்கையும் உபதேசிக்க வந்த ஞானசிரியர்களென்று ஆன்றோர் கூறுவர். ஆளுடைய பிள்ளையாரருளிய பதிகங்கள் எல்லாம் 'திருக்கடைக் காப்பு' என்னும் பயன் கூறும் இறுதிப் பாடலை உடையவை. அவரது முதற் பதிகத் திருக்கடைக் காப்பு ''ஒரு நெறிய மனம் வைத்துணர் ஞான சம்பந்தன் உரை செய்த, திரு நெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே'' என்று நிறைவுறுகின்றது. இதில் அவரது தமிழ் ''திருநெறிய தமிழ்'' என்றும், அதில் வல்லவர்கள் தொல்வினை எளிதில் தீருமென்றும் குறிக்கப் பெறுகிறது. வினையால் அசத்து விளைகிறதென்றும், வினை தீர்ந்தாலன்றி ஞானம் விளையாதென்றும் சொல்லப் பெறுகிற ஞான சாத்திர உண்மையை நினைவு கொண்டு ''தொல்வினை தீர்தல் எளிது'' என்னும் பிள்ளையார் திருவாக்குக்குப் பொருள் காணுதல் வேண்டும். வினைத் தீர்வு மலபரிபாகத்துக்கும், மலபரிபாகம் சத்தி நிபாதத்துக்கும், சத்தி நிபாதம் சிவப்பேற்றுக்கும் முறையே காரணங்களாயிருப்பவை. எனவே தொல்வினைத் தீர்வு, சிவப்பேற்றை வழங்குவது என்பது தெளிவு. அச்சிவப் பேறு பிள்ளையாரது தமிழ் வன்மையால் நிகழுமாயின் அதன் சிறப்புப் பற்றிப் பேச யாரால் இயலும்.

நம்பியாண்டார் நம்பிகள்,

''பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனும் தோற்றோணி கண்டீர்—நிறையுலகில்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ்.''

என்று பிறவிப் பிணி நீங்கிச் சிவப்பேறு பெறுவதற்கு ஆளுடைய பிள்ளையாரின் அருந்தமிழ் துணை செய்கின்றது என்பதைத் தெளிவு செய்கின்றார்.

''சைவப் பெரு நெறிக்கே அணியன நாவுக்கரையர் பிரான் தன் அருந்தமிழே'' என்பது அப்பர் தமிழைப் பற்றி அவர் நமக்கு அறிவிப்பதாகும். சுந்தரரது செந்தமிழ் 'அருச்சனை' என்று ஆண்டவனால் ஏற்றுக் கொள்ளப் பெற்றது. மணிவாசகர் தமிழாகிய திருவாசகம் அம்பலவாணரது திருக்கரத்தால் எழுதப் பெற்ற சிறப்புடையது.

''அருள்வாத வூரர்சொல அம்பலவர் தாமெழுதும்
திருவா சகத்தைத் தெளிந்தால்—கருவாம்
பவகதியும் நீங்கிப் பரமகுரு வாலே
சிவகதியும் உண்டாம் சிவம்''

என்று வரும் திருவாசகச் சிறப்புப் பாடலின் பொருள் நோக்குக.

நால்வர் பெரு மக்களது தேவார திருவாசகமாகிய ஞான நூல்கள் நம்மை வாழ்விக்கக் கிடைத்த அருட் செல்வங்களாகும். அவற்றை உரிய வகையில் ஓதி, ஓதச் செய்து எல்லா இன்பங்களையும் எய்துவோமாக.

நலமே தழைக.

புனலி லேடெதிர் செல்லெனச் செல்லுமே
புத்தனார்தலை தத்தெனத் தத்துமே
கனலி லேடிடப் பச்சென் றிருக்குமே
கதவு மாமறைக் காட்டி லடைக்குமே
பனையி லாண்பனை பெண்பனை யாகுமே
பழைய என்புபொற் பாவைய தாகுமே
சினவ ராவிடந் தீரெனத் தீருமே
சிறந்த சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே.

—தனிப்பாடல்.

# மண்வாகு

திரு. ம. அ. முருகேசன், B.A., B.L.

பாஞ்சாலங்குறிச்சியிலே வீரபாண்டியக் கட்டபொம்மன் கோட்டை அமைத்ததைப் பற்றி ஒரு கதை உண்டு. கட்டபொம்மன் வேட்டையாடுவதற்காகப் பாஞ்சாலக்குறிச்சி எல்லையை அடைந்த போது, அது வரை அவனுடைய வேட்டை நாய்களால் துரத்தப்பட்டு ஓடிக் கொண்டு இருந்த முயல்கள், திரும்பி நின்று வேட்டை நாய்களை எதிர்த்து விரட்டியதாம். இதைக் கண்ட வீரபாண்டியக் கட்டபொம்மன் அந்த மண்ணில் ஏதோ விசேடம் இருக்க வேண்டுமென்று எண்ணித் தன்னுடைய கோட்டையை அங்கு அமைத்தானும். இதே போலச் சோழர்களின் தலைநகராக இருந்த உறையூரைப் பற்றியும் ஒரு கதை சொல்வார்கள். சோழன் ஏறி வந்த பட்டத்து யானையை, உறையூர்த் தெருவிலே இருந்த ஒரு கோழி எதிர்த்ததாம். யானையைக் கோழி எதிர்த்ததால் உறையூருக்குக் ''கோழி'' என்ற பெயரும் உண்டு.

இதனை,

''முறஞ்செவி வாரணம்
முன்சமம் முருக்கிய
புறஞ்சிறை வாரணம்
புக்கனர் புரிந்தென்''

என வரும் சிலப்பதிகார வரிகள், தெளிவுற வலியுறுத்தும். இப்படி சில இடத்து மண்ணுக்குச் சில தனிச் சிறப்புகள் உண்டு.

வளம் நிறைந்த மண்ணிலே வாழும் உயிர்கள் செழிப்புடன் இருக்கின்றன. வளம் குன்றிய நிலத்தில் விளையும் பயிர் பச்சைகள் கூடச் செழிப்பாக இருப்பதில்லை. எனவே, மண்ணினுடைய உரத்துக்கும் அதில் வாழும் உயிர்களின் உரத்துக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. இதை மாற்றியும் சொல்வதுண்டு. எங்கு மக்கள் நல்லவர்களாக இருக்கிறார்களோ அங்கு நிலமும் நல்லதாக இருக்குமாம். எங்கு மக்கள் நல்லவர்களாக இல்லையோ, அங்கு நிலம் நல்லதாக இருந்தாலும் தீயதாக மாறிவிடுமாம். ''எவ்வழி ஆடவர் நல்லவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே'' என்பது ஔவையார் வாக்கு. எப்படிச் சொன்னாலும் ஒன்றுதான். மண்ணுக்கும் அதில் வாழும் உயிர்களுக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. மண்ணினுடைய வாகு அதில் வாழும் உயிரினத்தில் பிரதிபலிக்கிறது. சில ஊர்களைச் சொல்லும் போது அந்த ஊர் மக்களுக்கே உரிய தனியாய குணங்களாகச் சிலவற்றைச் சொல்லக் கேட்கிறோம். ஒரு ஊரை வைத்து அந்த ஊரில் வாழும் மக்களின் தன்மைகளை எடை போடுவதும் உண்டு. தஞ்சை மண்ணிலே இருந்து வருபவர்கள் அதிபுத்திசாலி (குயுக்தி)யாக இருப்பார்கள் என்றும், பாண்டி நாட்டு மறவர்கள் வீரம் மிகுந்தவர்களாக இருப்பார்கள் என்றும், அது போலவே உழைப்பை முதன்மையாகக் கொண்ட கொங்கு நாட்டு மக்கள் கபடு இல்லாத வெள்ளை உள்ளம் படைத்தவர்கள் என்றும் சொல்லக் கேட்டிருக்கிறோம். இலக்கியத்தில் கூட இப்படி மண் வாகு பேசப்படுகிறது.

ஆம்பல் சந்திரனைக் கண்டவுடன் மலரும். விடியற்கால நேரத்தைக் கூற வந்த ஆண்டாள் ''உங்கள் புழைக்கடை வாவியுள் செங்கமலம் வாய்திறந்து ஆம்பல் வாய் கூம்பின காண்'' என்கிறார். அதாவது சந்திரன் மறைந்து கதிரவன் உதயமாகும் நேரமாகிவிட்டதால் ஆம்பல் கூம்பி விட்டது என்கிறார். இதிலிருந்து ஆம்பல் சந்திரனைக் கண்டு மலர்கிறது என்பது உறுதிப்படுகிறது. சந்திரனுக்குக் 'குமுத நாயகன்' என்று ஒரு பெயர் கூட உண்டு. நெய்தல் நிலத்தில் அலை வீசும் கடற்கரை. அந்தக் கடற்கரைக்கு அருகில் ஒரு சிறு நீர்நிலை. அந்த நீர்நிலையில் ஓர் ஆம்பல். அலைகளினாலே உந்தப்பட்ட ஒரு சங்கு மெதுவாகத் தவழ்ந்து கரையேறி வருகிறது. அதைச் சுற்றி முத்துக்களும் கிடக்கின்றன. இதைக் கண்ட ஆம்பல், 'விண்மீன்கள் சூழச் சந்திரன் உதயமாகிவிட்டான்'' என்று எண்ணி மலர்ந்து விடுகிறது. இது ஒரு ஏமாளித்தனந்தானே!

நீர் வளமும் நில வளமும் நிறைந்த ஓர் ஊர். நீல மலர்களையும் கயல் மீன்களையும் போன்ற அழகிய கண்களை உடைய இளம் மங்கையர், அந்த ஊரிலே வாழ்கின்றனர். நீர்நிலைகளிலே நீல மலர்கள் மலர்ந்து கிடக்கின்றன. வானத்திலே முழு நிலவு ஒளி வீசுகிறது. அந்த முழு நிலவின் பிரதிபிம்பம் நீரிலே தோன்றுகிறது. அந்தப் பிரதி பிம்பத்தின் இடையிடையே நீலோற்பல மலர்கள் பூத்து நிற்கின்றன. பெண்களின் முகமும், திங்கள் போன்று குளிர் நிலவு வீசுகிறது. அதில் அவர்களுடைய கண்களாகிய நீலமலர்கள் மலர்ந்து இருக்கின்றன. தேனை உண்ண வந்த வண்டு எது கண்? எது மலர்? என்று தெரியாமல் இரண்டுக்கும் இடையே ஊசலாடுகின்றது. இது வண்டு ஏமாந்த கதை.

இன்னொரு காட்சி. கடற்கரையிலே, உலகம் அறியாத, கள்ளம் இல்லாத, சிறு பெண்கள் மணல் வீடு கட்டி விளையாடுகிறார்கள்.

தங்கள் படைப்புத் திறனை எல்லாம் காட்டி அந்தச் சிறு வீட்டை அமைக்கிறார்கள். ஏதோ பெறற்கரிய செல்வத்தைப் பெற்று விட்டது போல், அவர்களுக்கு ஒரு மகிழ்ச்சியும், நிறைவும் ஏற்படுகின்றன. அந்த வேளையில் அலைகளினாலே வீசி எறியப்பட்ட ஒரு சங்கு வருத்தத்துடன் வாய் விட்டுப் புலம்பிக் கொண்டு கரை மீது ஊர்ந்து வருகிறது. அப்படி வந்த சங்கு இந்த மணல் வீட்டின் மீது ஊர்ந்து செல்கிறது. சிறுமிகள் கட்டிய மணல் வீடு சிதைந்து விடுகிறது. ஏதோ ஊழிக்காலமே வந்து தங்களுடைய செல்வமெல்லாம் கொள்ளை போய் விட்டதாக, அந்தச் சிறுமிகளுக்குப் படுகிறது. கவலையால் மனம் வருந்துகிறார்கள். சங்கின் மேல் கோபம் கொள்ளுகிறார்கள். கோபத்தில் தங்களுடைய அழகையே குலைத்துக் கொள்கிறார்கள். தாங்கள் அணிந்துள்ள மாலையை அறுத்து அதை ஒச்சி, அந்தச் சங்கை அடிக்க முயல்கிறார்கள். இருந்தாலும் அடிப்பதில்லை. கண்டிக்க வேண்டும் என்று எண்ணுகின்ற உள்ளம், தண்டனை கொடுக்கும் அளவுக்கு முற்றவில்லை. கள்ளமறியாச் சிறு உள்ளங்கள் தம்மைத் தாமே நொந்து கொள்கின்றன. அப்படி அவர்கள் ஒச்சிய மாலையில் உள்ள குவளை மலர்கள் சிறங்கணித்துக் கிடக்கின்றன. தூரத்தே செல்லும் ஆண்மகன் ஒருவன் அந்தக் குவளை மலர்களைத் தன் காதலியின் கண்கள் என்று எண்ணி மேலே போகாமல் நின்று விடுகிறான். இது ஆறறிவு படைத்த மனிதன் ஏமாந்த நிகழ்ச்சி.

இப்படி ஆம்பலும், வண்டும், மனிதனும் தாம் தாம் கொண்ட பரிவினால் ஏமாற்றப்பட்டு ஏழையாய் இருக்கின்றனராம் புகார் நகரத்தில். இப்படி ஏமாற்றப்பட்டு நிற்கும் உயிரினங்கள் நிரம்பிய புகாரிலே பெண்கள் மட்டும் எப்படி இருப்பார்களாம்? அவர்களுக்கும் அதே நிலை தான்.

ஒரு நாள், கடற்கரைச் சோலையில் தலைவன் ஒருவன் கை நிறைய முத்துக்களையும் மலர்களையும் ஏந்தித் தலைவியின் அன்பை இரந்து, அவள் பின்னே தொடர்கிறான். ''உன்னைப் பிரியேன் பிரியில் தரியேன்'' என்று சூளுரைக்கிறான். உலகம் அறியாத அந்தத் தலைவி, அவனுடைய சூளுரைகளை மெய்யென்று நம்பி, தன்னை அவனுக்குத் தந்து விடுகிறாள். அவளுடைய கன்னிமை பறிபோகிறது. தலைவன் பிறகு பிரிந்து விடுகிறான். பிரிந்து சென்ற தலைவன் திரும்பி வருவான் என்று எதிர்பார்த்து ஏமாற்றமடைகிறாள் தலைவி. களவொழுக்கத்தில் நின்ற தலைவன் கற்பு நிலைக்கு வராமல் நின்று விடுகிறான். இப்போது நிலைமை மாறிவிடுகிறது. கையுறை கொண்டு ''பிரியேன், பிரியில் தரியேன்'' என்று சூளுரைத்தவனின் பின்னே, இப்பொழுது தலைவி இரந்து நிற்கிறாள். காதலனாக நடித்த தலைவன் இன்று ஏதிலான் போல நிற்கிறான். திங்கள் என்று எண்ணி வாய் மலர்ந்த ஆம்பலும், பெண்ணின் கண்ணுக்கும் குவளைக்குமிடையே ஊசலாடிய வண்டும், சங்கு ஊர்ந்து சென்று மணல் வீடு சிதைக்கப்பட்டதனாலே, ஏதோ ஊழிக் காலமே வந்து விட்டதுபோல், தம்மைத் தாமே வருத்திக்கொண்ட சிறுமிகளும், அவர்கள் பிய்த்து எறிந்து மாலையிலுள்ள குவளை மலரையே கண்கள் என்று மயங்கி நிற்கும் மக்களும் நிறைந்த பூம்புகாரிலே உள்ள அந்தத் தலைவிக்கு, இந்தக் காதலன் ஏதிலான் போல நிற்பது கூடத் தெரியவில்லை. அவன் என்றுமே காதலன்தான். அன்றும் காதலன் தான். இன்றும் காதலன்தான். ஆனால், இன்று ஏதிலான் போல நடிக்கின்றானே என்று எண்ணுகிறாளாம். களங்கமற்ற உள்ளத்துடன் உண்மையே பேசிப் பிறரை நம்பி ஏமாந்து போவது அந்தப் புகார் நகரிலுள்ள ஆம்பல், வண்டு, மக்கள், இவர்களின் இயல்பாகி விடுகிறது. இது தான் புகாரின் இயல்பு என்கிறது சிலப்பதிகாரம்.

''கரியமலர் நெடுங்கட் காரிகைமுன்
கடற்றெய்வங் காட்டிக் காட்டி
அரியசூள் பொய்த்தார் அறனிலரென்று
ஏழையம்யாங் கறிகோம்? ஐய!
விரிகதிர் வெண்மதியும் மீன்கணமும்
ஆம்என்றே விளங்கும் வெள்ளைப்
புரிவளையும் முத்துங்கண்டு ஆம்பல்
பொதியவிழ்க்கும் புகாரே எம்மூர்.''

''காதலராகிக் கழிக்கானற் கையுறை கொண்டு
எம்பின் வந்தார். ஏதிலார் தாமாகி யாமிரப்ப
நிற்பதையாங் கறிகோம்? ஐய! மாதரார் கண்ணும்
மதிநிழல்நீ ரிணைகொண்டு மலர்ந்த நீலப் போதும்
அறியாது வண்டூச லாடும் புகாரே எம்மூர்.''

''மோதும் முதுதிரையால் மொத்துண்டு
போந்தசைந்த முரல்வாய்ச் சங்கம்
மாதர் வரிமணல்மேல் வண்டல்
உழுதழிப்ப மாழ்கி ஐய
கோதை பரிந்தசைய மெல்விரலாற்
கொண்டோச்சும் குவளை மாலைப்
போது சிறங்கணிப்பப் போவார்கண்
போகாப் புகாரே எம்மூர்.''

# சமயச் சடங்குகள்

நீதிபதி எஸ். மகாராஜன்

பிரான்ஸ் நாட்டிலே பத்தொன்பதாவது நூற்றாண்டில் ஒரு டி. கே. சி. வாழ்ந்தார். அவருடைய பெயர் மல்லார்மே (Mallarme). மிகச் சிறந்த ரசிகர்; கவியுங் கூட. ''கவிதையே என்னுடைய சமயம்'' என்று துணிந்து கூறியவர். கவிதையின் உளப்பாட்டை உள்ளுணர்வோடு அறிந்த காரணத்தால் அவர் அப்படித் துணிந்து கூறினார். அதோடு நிற்கவில்லை. உணர்வற்றவர்கள் கவிதையோடு பழகும்போது கவிதா தேவிக்கே அபாயம் ஏற்படும்என்றுணர்ந்தவர் அவர். ஆகவேதான், அவர் சொன்னார்: ''கவிதைக் கென்று தனிச் சடங்குகள் உண்டாக்கி அதை மூடாக்குப் போட்டுப் பாதுகாக்க வேண்டும். இல்லாவிட்டால், கவிதை யுணர்வற்றவர்கள் கவிதையில் கை வைத்து அதைத் திட்டுப்படுத்தி விடுவார்கள்.'' என்று.

உண்மைகளைக் கண்டு அனுபவித்த நம் முன்னோர்களுக்கும், மல்லார்மேக்கு ஏற்பட்ட அதே அச்சம் ஏற்பட்டது. புல்லர்கள் அவ்வுண்மைகளின் புனிதத் தன்மையை உணராமல் அவற்றை உதாசீனம் செய்துவிடுவார்களே, அல்லது கேவலப்படுத்தி விடுவார்களே என்று பயந்தார்கள். ஆகவே, அவர்கள் அழகிய சடங்குகளைக் கற்பனை செய்து, அச்சடங்குகளுக்குள் உண்மைகளைப் பொதிந்து வைத்துக் காபந்து செய்திருக்கிறார்கள்.

ஆனால், நாளாவட்டத்தில், சடங்குகளின் பொருள் நமக்குப் புலப்படாமல் போய்விட்டது சடங்குக்குள்ளிருக்கும் உண்மையையும் நாம் அனுபவிக்க இயலாமல் போய்விட்டோம். டி. கே. சியைப் போன்ற ஞானிகள் அவற்றை விளக்கும் போதுதான் நமக்குச் சடங்குகளின் மர்மம் தெரிகிறது. தெரிந்ததும் தெளிவும் ஆனந்தமும் ஏற்படுகின்றன.

''நம்முடைய வீட்டுச் சடங்குகள், கோயில் வழிபாடுகள், சமயக் குறியீடுகள், இவைகளில் எல்லாம் (மக்கள் எவ்வளவு தவறாக எண்ணி நடந்த போதிலும்) ஒரு அடிப்படையான உண்மை, அதாவது, பயன் இருக்கவேசெய்யும். கால தேச வர்த்தமானங்களுக்குரிய 'டிஸ்கவுண்டுகளைக்' கழித்துப் பார்த்தால் நம் முன்னோர்களை விடக் கிடையாது என்றே சொல்லத் தோன்றும்'' என்று டி. கே. சி. ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

சமுதாய வளர்ச்சியிலே சடங்குகளுக்கு ஒரு முக்கியமான ஸ்தானம் உண்டு என்பதைக் கண்டவர்கள் டி.கே.சி. ஆனால், சடங்குகளின் பொருளை இழந்துவிட்டுச் சடங்குகளை மாத்திரம் உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டு தொங்குகிற சமுதாயம் டி.கே.சியின் ஏளனத்துக்கு இலக்காகிறது.

உண்மையில், கிரியைகள் சந்தோஷத்தை உண்டு பண்ண வேண்டும். பொருள் இருக்க வேண்டும். எல்லாரும் அனுபவிக்க வேண்டும். இதற்கெல்லாம் நேர்மாறாக நம்மை இம்சைக்கு உள்ளாக்குகின்றன.

கிரியைகள், அலங்காரமாய் மனத்துக்கு ஆனந்தத்தை விளைக்கக் கூடியனவாய் இருந்துவிட்டால், நம்முடையவர்களுக்கு புத்தியே வந்துவிடும். எல்லாத் துறைகளிலும் நிபுணர்கள் ஆகிவிடுவார்கள். உண்மையோடு ஒட்டிப் பேசுவார்கள். தில்லை நடராசர் கோவில் திருவாதிரை உத்சவத்தில் பக்த ஜனங்களுக்கு இரண்டு மணி நேரம் ஒரு ரிட்டயர்ட் ஜில்லா ஜட்ஜ் ஆங்கிலத்தில் பேசினார் என்ற அபவாதம் ஏற்படுமா!

அர்த்தமில்லாமல் பேசுகிறது என்பது அளவற்ற கேட்டுக்கு விளைநிலம்.

''நயனில சொல்லினும் சொல்லுக, சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.''

என்றார் குறளாசிரியர். இப்போது எங்கே பார்த்தாலும் பயனில் சொல்லைத் தானே காண்கிறோம்.

டி. கே. சி. சொன்னதிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியது மூன்று :—

1. சடங்குகள் பொருள் பொதிந்தனவாயிருக்க வேண்டும்.

2. கேட்பவர்களுக்குப் புரியக் கூடிய மொழியில் சடங்கு மந்திரங்கள் அமைய வேண்டும்.

3. மேற்சொன்னவாறு சடங்குகள் அமைந்துவிட்டால், சமுதாயத்தில் ஆனந்த வளம் பெருகும்; விஞ்ஞானம், தத்துவம், கலை, கல்வி எல்லாம் மேலோங்கி வளரும்.

''மொத்தத்தில், ஆனந்தத்தை வளர்ப்பதற்குரிய வழிகளை அறிந்து ஒரு சிலர் தம் சமுதாயப் பழக்கங்களையும் சடங்குகளையும் அமைத்திருக்கிறார்கள். ஆனால், வேறு சிலரோ, துன்பத்தை நீடிக்கச் செய்யும் வகையில் பல பழக்கங்களை மேற்கொண்டிருக்கிறார்கள்,''

என்று டி. கே. சி. அடிக்கடி சொல்லுவார்கள். ''உதாரணமாக, ஒரு சிலர் தமது விட்டிலே சாவு ஏற்பட்டால் உடனே பிரேதத்தை ரேழியில் இழுத்துக் கொண்டு வந்து போட்டு, அக்கம் பக்கத்தாரை எதிர்பார்க்காமல் தகன காரியங்களை முடித்து விடுவார்கள். ஆனால் வேறு சிலரோ இழவுச் சடங்கை 16 நாள் இழுத்துக் கடத்தி, தம்மைத் துன்புறுத்திக் கொள்வதோடு மற்றவர்களையும் துன்புறுத்துவார்கள். கலியாண காரியம் ஆனந்தத்தைக் கொடுப்பதால் சிலர் அதை நாலைந்து நாள் நீட்டி வைத்து அனுபவிப்பார். ஆனால் ஒரு சிலர் ஒரே நாளிலே அதை, சட்புட்டென்று முடித்து விடுவார்கள் என்று ஆற்றாமைப்படுவார்கள் டி. கே. சி.

ஆனால், சைவ மடங்களிலாவது ஆனந்தம் கொடுக்கும் சடங்குகளைக் காப்பாற்றி வருகிறார்களே என்று டி. கே. சி. திருப்தியடைவார்கள். தருமபுரம் மடத்திலே தங்கியிருந்தபோது அவர்கள் எழுதிய கடிதம் வருமாறு : ''இரண்டு நாளாகமடத்தில் தங்குகிறோம். தமிழ் நாட்டுப் பண்பாடு நிறைந்த நிலையத்தில் தங்குகிறோம். மகா சந்நிதானம் நடத்துகிற பூசையும், பக்தியும் வெகு ரம்மியம் ஆனவை. சைவத்தின் அழகும், ஆனந்தமும் மனசுக்கு உவந்தவை. இத்தகைய சமயப் பண்பாட்டை வேறு எங்கும் காண முடியாதுதான்.

சாந்தி நிகேதனத்துக்குப் போய்த்தானிருக்கிறேன். சமயப் பண்பாடு என்றால், வறண்ட நிலைதான். கிறிஸ்து மார்க்கத்தின் சாயல்தான். பிரார்த்தனைக்கான இடத்தைச் சுற்றிக் கல்லறைகள் இல்லை. அவ்வளவுதான்.

இங்கோ, மூர்த்தி என்ன, தீபாராதனையின் அழகு என்ன, பாடல் என்ன, எல்லாம் கண்ணையும் மனசையும் கவர்ந்துவிடுகின்றன. சாந்தி நிகேதனில் எல்லாம் லெக்சர்தான்.''

கவி ரவீந்திரநாத டாகூர் ஆனந்த அனுபவம் நிறைந்தவர்தான். ஆனாலும் அவருடைய ஆனந்தத்தை அவருக்குப் பின் வரும் சந்ததியாருக்கு அவரால் வழங்க முடியவில்லை. ஆகவேதான் சாந்தி நிகேதனத்தில் எஞ்சி நிற்பதெல்லாம் விருதா லெக்சர் தான் என்பது டி.கே.சி.யின் கருத்து.

அப்படியானால், ஆனந்தத்தை ஒரு சமுதாய அனுபவமாக நிலை நிறுத்துவதற்கு வழியென்ன என்பதை ''சரஸ்வதி அல்லது மனோ தத்துவம்'' என்ற ''இதய ஒலி' கட்டுரையில் மிகுந்த நுணுக்கத்தோடும் கலைப் பாங்கோடும் டி.கே.சி. எடுத்து விளக்கியிருக்கிறார்கள். அவர்களுடைய விளக்கத்தைச் சற்றுக் காதுகொடுத்துக் கேட்போம்.

டி.கே.சி. பேசுகிறார்கள் : ''இயற்கை தன் மடிக்குள் ஒளித்து வைத்திருக்கிற அதிசயங்களைக் கண்டுபிடிக்க முயல்வதிலும், கண்டுபிடிக்கிற திறத்திலும், கண்டு பிடித்தவுடன் உண்டாகும் ஆனந்தத்திலும், மனிதன் தனித்தே நிற்கிறான். இதோடு நிற்கவில்லை; அந்த் ஆனந்தத்தை மற்ற மக்களுடன் கூடி அனுபவிப்பதிலும், தலைமுறை தலைமுறையாக மக்கள் சமுதாயம் அனுபவிக்கும் படியான விழாக்கள் ஏற்படுத்துவதிலும், நூல்கள் எழுதி வைப்பதிலும் அப்படியே தனித்து நிற்கிறான்.

சூரிய கிரகணம் பத்து நாழிகைக்கு ஆரம்பிக்கும் என்றால், ஒன்பதரை மணிக்கே முற்றத்திலும் தெருவிலும் வந்து அண்ணாந்து பார்க்க ஆரம்பித்துவிடுவார்கள்.

கிரகணம் பிடிக்க ஆரம்பித்தவுடன் ஐந்து வயதுப் பேரன் அறுபது வயதுப் பாட்டனுக்குச் சுட்டிக் காட்டுகிறான். அப்படியே மாறிப் பாட்டன் பேரனுக்குக் காட்டிப் பரவசமாகிறான். பெண்கள் தாளிதத்தையே விட்டுவிட்டு முற்றத்துக்கு ஓடி வந்து அண்ணாந்து பார்க்கிறார்கள். அடுத்த வீட்டு அக்காளையும் பாட்டியையும் உரக்கக் கூப்பிட்டுப் பார்க்கச் சொல்லுகிறார்கள். அவர்களும் அண்ணாந்து பார்த்துக் கன்னத்தில் கை வைத்த வண்ணமாய் அதிசயித்து நிற்கிறார்கள். இவையெல்லாம்உண்மை ஒன்றைக் கண்டு கொள்வதில் உண்டாகும் உவகையிலிருந்து நிகழ்கின்றன.

இப்படி உண்டாகிற சமுதாய உணர்ச்சியிலும் உற்சாகத்திலும் இருந்துதான் சூரிய கிரகணத்தையே விழாவாக ஏற்படுத்தி ஆயிரக் கணக்கான வருடங்களாகக் கொண்டாடி வருகிறார்கள்.

சூரியன் தெற்கோரத்திலிருந்து வடக்கு முகமாகச் செல்ல ஆரம்பிக்கும் முறைமையைக் கண்டு அனுபவித்துச் சங்கராந்திக் கொண்டாட்டம் ஏற்பட்டது. அப்படியே ஆடி மாதம் காவேரிக் கரையெல்லாம் பதினெட்டாம் பெருக்கின் விழாக் கொண்டாட்டம்.

ஆகவே, இயற்கையில் நிகழும் நிகழ்ச்சிகளில் பதுங்கிக் கிடக்கும் உண்மையைக் கண்டு கொண்ட மாத்திரத்தில் மக்களுக்கு மனம் பூரிக்கிறது.

மக்கள் ஒழிந்த மற்றப் பிராணிகளிடத்தில் முடியாத காரியம் இது. எந்த மாட்டு மந்தை யாவது சூரிய கிரகணத்தை அண்ணாந்து பார்க்குமா? அண்ணாந்து பார்க்கத்தான்அதைச் செய்ய முடியுமா?

இவ்வாறு விளக்கம் கொடுத்துவிட்டு, சரசுவதியை வெண்தாமரை மலர்மேல் உட்கார்த்தி வைத்திருக்கிறோமே, அந்தச் சடங்கின் மர்மத்தை டி. கே. சி. சொல்லுகிறார்கள். ''பேரண்டத்திலுள்ள பொருள்களிலெல்லாம் சிறந்த பொருள் மனிதன். மனிதனிடத்தில் உள்ள பொருள்களிலெல்லாம் சிறந்தது மனசு. இத்தகைய அதி அற்புதமான பொருள்—மனசு—எப்படி உற்பத்தியாயிற்று, ஏன் மற்ற ஜீவ ராசிகளிடத்துக் காணப்படுதல் இல்லை என்றெல்லாம் மக்களில் சிலர் எண்ண ஆரம்பித்தனர். ஜடப்பொருளான நம் உடலுக்குள் மனசின் தத்துவங்கள் ஒன்றொன்றாக வளர்ந்து தெளிவு அடைந்து பிரகாசிப்பதை நோக்கும்போது, இருள் மயம் என்று சொல்லக் கூடிய தண்ணீர்

தடாகத்திலிருந்து முளைத்து எழுந்து மலர்ந்த வெண்தாமரை மலர் ஞாபகத்துக்கு வருதல் இயல்பு. வெண்தாமரை ஒன்று பூப்பதில் எவ்வளவோ அற்புதம், எவ்வளவோ தெய்வீகத் தத்துவம். அப்படியே, உள்ளுணர்வு முளைத்து எழுந்து வளர்ந்து பிரகாசிப்பதிலும் எவ்வளவோ அதிசயமும் தெய்வீகத் தத்துவமும் நிறைந்து கிடக்கின்றன. இத்தகைய கருத்துக்களிலிருந்து சரசுவதி என்ற தெய்வத்தை உள்ளத்தில் பாவனை செய்யவும், அத்தெய்வத்தைச் சமரசப் படுத்தி அந்த வெண்தாமரை மலரின் மீதே ஏற்றி வைக்கவும் ஏற்பட்டது. நாளாவட்டத்தில் வெள்ளைக் கலையும், வெள்ளைப் பணியும் அவளுக்குக் கிடைத்தன.''

இப்படியாக, சமயக் குறியீடுகளுக்கும், அடையாளங்களுக்கும், சடங்குகளுக்கும் டி.கே. சி. வியாக்யானம் கொடுப்பார்கள். பிறைச் சந்திரனையும், கங்கையையும் சிவன் தலைமேலே ஏற்றி வைத்ததற்குள்ள காரணங்களைத் தெளிவு செய்வார்கள். நடராச மூர்த்தியின் ஆனந்த நடனத்தை விளக்கி விட்டு, அவர் காலடியிலே முயலகனை இடைச்செருகலாகச் செருகிவிட்டார்கள் பிற்காலத்தார் என்று சொல்லிக் கண்டிப்பார்கள்.

ஒரு மரப் பொந்து கிடைத்து விட்டால் போதும். அதற்கு மாணிக்க வசாகர் ஒரு திருவிழாவே நடத்தி விடுவார் என்று சொல்லுவார்கள். மருத மரத்தைப் பார்த்தாராம் திருவாசக ஆசிரியர். அந்த மரத்தில் கடவுள் தத்துவம் நிறைந்திருப்பதை யுணர்ந்தார். மருத மரத்தின் காம்பீரியமும் தொன்மையும் அவருக்குக் கடவுளை ஞாபகப்படுத்தின. அதுவும் பொந்து விழுந்த மிகத்தொன்மையான மரமாக இருந்தது. ஆகையால்தான், பழமைக்கும் பழமையான பழம் பொருளை அது நினைவுறுத்தியது. உடனே பாடுகிறார்:

''அந்த இடைமருதில்
ஆனந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம்
பூவல்லி கொய்யாமோ!''

இப்படியாக, பொந்துக்கும், அறுகம் புல்லுக்கும் விழாக் கொண்டாடினார்கள் நம்முடைய மூதாதையர் என்பதை அடிக்கடி உணர்ச்சியோடு எடுத்துச் சொல்வார்கள் டி.கே.சி.

அவர்கள் மறைவதற்குச் சில நாட்களுக்கு முன் திருவாதிரையன்று காலை 5-30 மணிக்கு, சித்திர சபையிலிருந்து வரும் நாகஸ்வர இசையைக் கேட்டுக்கொண்டே டி.கே.சி. எழுதிய ஒரு கடிதத்தைக் குறிப்பிட்டு இந்தக் கட்டுரையை முடித்து விடுகிறேன்.

கடிதம் கீழ்க்கண்டவாறு பேசுகிறது: ''இன்று இங்கே அழகாகத் திருவாதிரை உத்ஸவம். சித்திர சபையில் நடராச மூர்த்தி பச்சை சாத்தி எழுந்தருளுகிறார். நடன தீபம் எல்லாம் வெகு அழகாய் இருக்கும். பக்த கோடிகளுக்கு என்றே அருவி ஓடி வந்து தத்திம் தித்திம் என்று விழுந்து கொண்டிருக்கிறது. நடனத்துக்கான தாளத்துடன் விழுகிறது.

''அம்பலத்தில் ஆடுகின்றார்
பாங்கிமா ரே—அவர்
ஆட்டங்கண்டு நாட்டங்கொண்டேன்
பாங்கிமா ரே.
இன்பவடி வாய்ச்சபையில்
பாங்கிமா ரே—நடம்
இட்டவர்மேல் இட்டம் வைத்தேன்
பாங்கிமா ரே.

கற்பனைஎல் லாம்கடந்தார்
பாங்கிமா ரே—என்தன்
கற்பனைக்குள் படுவாரோ
பாங்கிமா ரே.
கல்மனம்எல் லாம்கரைப்பார்
பாங்கிமா ரே—மனம்
கரையார்என் அளவிலே
பாங்கிமா ரே.''

மண்ணையும், விண்ணையும் சேர்த்து அனுபவிக்கிறார் இராமலிங்க சுவாமிகள்; பாடலும் விண்ணுக்கும் மண்ணுக்குமாய்த் துள்ளிப் பாய்கிறது. சித்திர சபையில் இருந்து எழுந்தருளிக் கோயிலுக்குள் இறங்குகிறார் நடராசப் பெருமானார்! காலை 5-30 மணி. மேள வாத்தியம் கேட்கிறது.''

*

# அருள்திரு மீனாட்சி சுந்தரேசுவரர் வகையரு திருக்கோயில்

## மதுரை

1. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் மகளிர் உயர்நிலைப் பள்ளி ஒன்று ஆலய நிதியிலிருந்து நடத்தப்படுகிறது. ஏழை மாணவிகளுக்கு இலவச மதிய உணவு, நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்படுகிறது.

2. கல்லுப்பட்டி காந்தி நிகேதனில் மீனாட்சி மாணவர் இல்லம் 30 மாணவர்களுக்கு உணவு, உடை, விடுதி, பள்ளிச் செலவுகளுக்கு நிதி உதவி செய்யப்படுகிறது.

3. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் நூல் நிலையம் ஒன்று தெற்கு ஆடி வீதியில் நடத்தப்படுகிறது. அன்பர்கள் பயன்பெறக் கோரப்படுகிறது.

4. பயணிகள், நவீன வசதிகளுடன் தங்க மேலச் சித்திரை வீதியில் ''பிர்லா விஷ்ரம்'' என்ற பெயரில் நடத்தப்பட்டு வருகிறது. கட்டிடம் கட்டும் செலவில் ஒரு பகுதி தொழில் அதிபர் பிர்லா அவர்களால் நன்கொடையாகக் கொடுக்கப்பட்டது. மதுரையிலுள்ளபோது ''பிர்லா விஷ்ரத்தில்'' தங்கி ஆனந்தமடையுங்கள்.

5. ஆயிரங்கால் மண்டபத்தில் எழில்மிகு கலைக்கூடம் காண வாரீர்.

6. கூடல் செங்குளம் பண்ணை திருக்கோயில் நேரடிப் பார்வையில் விவசாயம் நடைபெறுகிறது.

7. ஏழை மக்களுக்கு ஆலய நிதியிலிருந்து இலவசத் திருமணம் நடத்தப்படுகிறது.

8. திருப்பரங்குன்றத்தில் முதியோர் இல்லம் ஒன்று நடத்தப்படுகிறது. இதில் ஆதரவற்ற பெண்களுக்கு உணவு, இருப்பிடம் வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றது.

9. இத்திருக்கோயிலின் உப கோயில்களில் படைவீடுகளில் ஒன்றான திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயம், இங்கு இரண்டு கலியாண மண்டபங்கள் உள்ளன. மண்டபம் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 125/- வீதம் வாடகைக்குக் கொடுக்கப்படுகிறது.

10. சமய குரவர்களில் ஒருவரான அருள்மிகு மாணிக்கவாசகப் பெருமான் அவதரித்த ஊரான திருவாதவூரிலுள்ள அருள்மிகு திருமறைநாத சுவாமி திருக்கோயில் இத்திருக் கோயிலின் உபகோயிலாகும்.

11. ஆன்மீகப் பெருமக்கள் அனைவரும் தமிழ் வளர்த்த தலைநகர் பாண்டிப் பழம்பதி மதுரை மாநகரில் அன்பர்களுக்கு அருள் வழங்கும் அருள்மிகு மீனாட்சி சொக்கநாதரைக் கண்டு வணங்கி அருள் பெற்று உய்யத் திருவாலவாய்க்கு வருகை தருவீர்களாக.

12. ஆலய நிதியிலிருந்து ஏழைக் குழந்தைகளுக்கு காலை, மாலை இலவசமாகப் பால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

13. இத்திருக்கோயில் வெளியீட்டுப் புத்தகங்கள், திருவிளையாடற் புராணம், கும்பாபிஷேக மலர் மற்ற புத்தகங்களும், கும்பாபிஷேக வெள்ளி டாலர் முதலியன, பிர்லாவிஷ்ரம், திருக்கோயில், கலைக்கூடம், திருக்கோயில் புத்தகக் கடையில் விற்பனைக்குக் கிடைக்கும்.

**திரு. என். பொன்னப்பன்,**
அறங்காவலர் குழுத் தலைவர்.

**திரு. டி. தியாகையா,**
**திரு. ஆர். கோபால்சாமி,**
**திரு. கே. எஸ். இராமகிருஷ்ணன்,**
**எம்.எல்.ஏ.,**
அறங்காவலர்கள்.

**என். எஸ். இராமச்சந்திரன்,**
பி.ஏ., பி.எல்.,
உதவி ஆணையர்—நிருவாக அதிகாரி,

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர்
திருக்கோயில், மதுரை.

# பன்னிரு திருமுறைகள்

புலவர் திரு. ந.ரா. முருகவேள், M.A., M.O.L.

எத்தனையோ பலநூல்கள் எண்ணற்ற நிலையில்
இருக்கின்ற நம்தமிழில் என்றாலும், அவைகள்
அத்தனையும், தெய்வநல அருட்சிறப்பான் மிகும்நம்
அளப்பருஞ்சீர்த் திருமுறைகட்கு ஈடாக மாட்டா!
''இத்தரையில் இவைபோன்ற இலக்கியங்கள் யாண்டும்
இறையருளின் நலம்செழிப்ப இல்லை'' என்றே
வித்தகராம் மேனாட்டார் வியந்துமிகப் புகழ்ந்தார்!
மேதகைய திருமுறைச்சீர் விளம்பற் பாற்றே? (1)

''இலக்கியங்கள் எலாம், நாட்டின் இயல்பை, வர லாற்றை,
இன்கலையை, எழிற்பண்பை இனிதெடுத்துக் காட்டும்;
இலக்கியங்கள் நாகரிகத்து எழில்விளக்கம்; நாட்டை
எழில்வளஞ்செய் இன்னமிழ்தப் பெருவெள்ளம்; நல்ல
இலக்கியங்கள் எழுந்தனவேல் எழுச்சியுறும் நாடும்;
இலக்கியத்தின் தரம்குறைந்தால் சமுதாயம் வீழும்;
இலக்கியங்கள் புரட்சிபல தோற்றுவிக்கும்'' என்பர்.
இணையில்சைவத் திருமுறைக்கும் இவையனைத்தும் பொருந்தும். (2)

ஒருநாளும் காணாத ஒப்பில் பெரும்புரட்சி
உருவாகித், தீங்கொழித்து நன்மையெல்லாம் ஓங்கத்,
திருஞான சம்பந்தர் திருமுறைகள் செய்த;
திசையனைத்தும் ஊரூரும் செந்தமிழை வளர்த்த;
அருள்நாடும் அவர்க்கிணையாம் ஆற்றல்மிக்க தலைவர்
அரியபெரும் பரப்புநர்தாம் தோன்றுகிலர் யாரும்;
மருள்ஓட வைத்தவர் தமிழ்வளம் தான்! வீறும்
வளஞ்செறிந்த தமிழ்என்று மகிழ்ந்துரைத்தார் நம்பி! (3)

ஞானத்தின் திருவுருவாம் ஞானசம்பந்
தப்பெருமான், நற்ற மிழ்க்கண்
தேனத்திற் சிறந்தபல திருப்பதிகம்
முன்பின் இலா வகையிற் செய்து,
கானத்தின் களஞ்சியமாய்க் கலைவளங்கள்
பெருகுவித்தார்! தமிழ்த்தாய்க் கன்னி,
வானத்தின் இலங்குசைவ மணம்புணரச்
செய்தஅவர் மாண்பென் சொல்கேன்? (4)

திருநாவுக் கரசுகள்தம் திருமுறைகள் மூன்றும்
சிறந்தநன்மெய் யுணர்வுவளம் திகழ்ந்தொளிரத் தேற்றும்;
வரு''ஞானப்பாடல்'' எனப் போற்றிமிக மகிழ்ந்தார்
மாதவத்துச் சிவஞான யோகிகள்தாம்; மாண்பார்
குருநாதர் இவர், குறளில் ''மெய்யுணர்வு'' என் றோங்கிக்
குலவும் அதி காரவைப்பாய்க் கூறுகிற்பர் மேலோர்;
ஒருநாவுக்கு உரைசெய்ய ஒண்ணுமோ? 'சொற்கள்
உறுதியினுக்கு அப்பர்' என உலகுரைக்கும் அன்றே! (5)

மெய்யுணர்வு வளஞ்சான்ற மேலோராய் விளங்கும்
வித்தகர்நம் அப்பர்பெம்மான், வியனுலகம் எல்லாம்
உய்யும்வகை உளம்இரங்கி உவந்தருளிச் செய்த
உபதேச வளநலன்தான், உயர்ந்ததிரு விருத்தம்,
செய்யதிரு நேரிசை, சீர்க் குறுந்தொகை, செந் தமிழ்நல்
திருத்தாண் டகம்என்னும் தேன்மழையாய்ப் பெருகித்
தெய்வ அருள் நெறிப்பயிர்தான் செழித்தோங்கச் செய்து,
தேவாரம் எனும்பெயரால் திகழ்ந்தொளிரும் அன்றே! (6)

நந்தம்அருட் பெருங்குரவர் நம்பியா ரூரர்
நவின்றதிரு முறை ஏழாம் திருமுறையா நவில்வர்!
சுந்தரமூர்த் திகள்எனும்அத் தூயவன்போல், யாண்டுச்
சூழினும், ஓர் தலைமகன், நற் பெருங்கவிஞன் உண்டோ?
செந்தமிழிற் சேக்கிழார் திருத்தொண்டர் புராணம்
செப்புதற்குத் திருத்தொண்டத் தொகைசிறக்கப் பாடித்
தந்து, அவர்தம் காப்பியத்தின் தலைமகனாய் வைகித்
தமிழ்கொண்டு, கடவுளையும் பணிகொண்டான் தானே! (7)

(வேறு)

ஆசில்சீர் நம்நம்பி ஆரூரர்
அரும்பெருமை அளத்தற் காமோ?
நேசமிகப் புகழ்ந்துரைத்து நெடிதேத்த
வேண்டும் எனும் நியமம் மாற்றி,
ஏசியும்மிக்கு இகழ்ந்துரைத்தும், இன்றமிழால்
இறையருளை எய்தி நின்ற
தேசுடைய சுந்தரர்தம் செந்தமிழ்ச்சொல்
நயவளம்தான், செப்பற் பாற்றோ? (8)

''தேன்படிக்கும் அமுதாம்நற் றிருப்பாட்டு
சுந்தரர்தம் திருப்பாட்டு'' என்றார்,
வான்படிக்கும் சீர்த்திமிகு வடலூர் நல்
இராமலிங்க வள்ள லார்தாம்!
தான்படிக்கும் தமிழ்மறையின் தனிச்சிறப்பைப்
பொன்மலைக்கும், சங்க தத்தின்
ஊன்படைக்கும் பழிமறையை அணுநிலைக்கும்
ஒப்பிட்டார்! உரைத்தல் என்னே! (9)

இரும்புதரு மனத்தினையும் ஈர்த்துருக்கி,
எழிற்பொன்னாய் இனிது மாற்றிக்
கரும்புதரு சுவைபெருக்கிக் கனிவுவளம்
திருவாச கம்தான் காட்டும்;
இரும்புவியிற் சிற்றின்பை இணையில் பெரும்
பேரின்பாய் இயலச் செய்தே
அரும்புலவோர் புகழ்கோவை, அருள் அனுப
வத்தின்வளம் அமைந்து நிற்கும் (10)

செய்யதிரு மாளிகைநற் றேவர், அருட்
சேந்தனார், கருவூர்த் தேவர்,
மெய்உயர்கண் டராதித்தர், வேணாட்டார்,
காடநம்பி, சேதி ராயர்,
பொய்யில்புரு டோத்தமர், சீர்த் திருவாலி
அமுதர்எனப் புகலும் சான்றோர்,
உய்யும்வகை புகழ்ந்திசைத்த திருவிசைப்பா,
திருமுறையில் ஒன்பஃ தாகும். (11)

கருமூலம் நாம் அனைவோம் கழன்றுய்யக்
கயிலைநின்றும் போந்த சித்தர்,
திருமூல தேவர்அருள் திருமந்தி
ரச்சிறப்பைத் தெரிந்து ரைத்தல்,
அருள்மூலம் இலாதார்க்கும் அமையுமோ?
தமிழ்நூல்கள் அனைத்தி னுள்ளும்
பெருமூல நூல்என்னப் பிறங்குவது
மூலர்நூல்! பிறிதென் சொல்கேம்? (12)

நலன்சிறந்த ஞானமுதல் நால்நெறியும்
நவிற்றுவது; நானி லத்திற்
பலன்சிறந்த மந்திரங்கள் சக்கரங்கள்
பயிற்றுவது; பரிந்தி ரங்கிக்

குலன்சிறந்த அறவுரைகள் கொள்கைகள்தாம்
கூறுவது; குறிக்கொண் டுய்யத்
திறன்சிறந்த நுண்பொருள்கள் தெருட்டுவது;
திருமூலர் திருமந் திரம்! (13)

ஆலவாய் அண்ணல், அருட் காரைக்கால்
அம்மையார், காட வர்கோன்,
சீலமார் சேரமான் பெருமாள், நக்
கீரரொடு, சீர்க்கல் லாடர்,
ஏலஉயர் கபிலரொடு பரணர், இளம்
பிரான், அதிரா அடிகள், ஏத்தி
ஞாலமகிழ் பட்டினத்தார், நம்பியாண்டார்
நவின்ற, பதினொன் றுகும்! (14)

பெருகுபல சிறப்புடைய நாற்பதுநற்
பிரபந்தம் பிறங்கும் இஃதில்;
முருகனுக்கும், விநாயகர்க்கும், முதன்மைமிகும்
அடியவர்க்கும், முதல்வ னுக்கும்,
உருகுசுவை அமைந்தொளிரும் உலாமுதல்நூல்
இருபத்தொன் றிதன்கண் உண்டு;
அரியதமிழ் நூற்பெருக்கில் பதினொன்றும்
திருமுறைச்சீர், ஆற்ற நன்றும்! (15)

சுவைகள்என எட்டினையே சூழ்ந்துணர்தொல்
காப்பியனுர் சொல்லிப் போந்தார்!
நவையறுசீர் நூலினுக்கு நல்லமைதிச்
சுவைஒன்றும் நலக்கச் சேர்த்தே,
உவகைதரும் நூற்சுவைகள் ஒன்பஃதென்
றேபுலவோர் உரைத்துப் போந்தார்!
அவைகளின்மேல் அரியபக்திச் சுவையதனைச்
சேக்கிழார் ஆக்கித் தந்தார்! (16)

''வரலாற்றின் உணர்வுசற்றும் வாய்த்திலது
தமிழ்மக்கட்கு'' என்றே வாய்சோர்ந்(து),
உரையாற்றி மகிழ்வர்சிலர்; உண்மையது
சிறிதெனினும், ஓர்ந்து ணர்ந்தே
நிரலாற்றிற் சேக்கிழார் நெடிதாய்ந்து
வழங்குபெரு நூல்நி னைப்பின்,
திறனுற்றும் தமிழகத்தின் தேசியநற்
காவியம்அஃ தேயாம் அன்றே? (17)

(வேறு)

திருமுறை நூல்களின் தெய்வநலம் சான்ற
பெருமைகள்தாம் எல்லையிலாப் பெற்றித்(து);— அருமைமிகும்
நல்ல மறுமலர்ச்சி நூல்கள்என நாம்அவற்றைச்
சொல்லலாம் உண்மை துணிந்து.

இயற்கைஎழிற் கின்புறுதல், வாழ்வியலைத் தேர்தல்,
மயற்கையறும் மெய்யறிவு வானில்—உயர்ச்சியுறல்,
நல்லொழுக்கில் நின்றருளை நாடல், உடையவர்கட்(கு)
இல்லை திருமுறைபோல் இன்பு.

மனக்கவலை மாற்றும் மருந்தாகும்; எல்லா
நினைப்பரிய தீக்குணமும் நீக்கும்;—தனக்கிணையில்
தெய்வத் திருமுறைநற் செந்தமிழ் நூல்களைப்போல்
வையத் துயர்ந்தனஇல் மற்று.

கலைநிரம்பிக் கற்றற் கினிதாய், அறிவின்
நலம்நிரம்பிச் சொற்பொருள்கள் நன்றாய்,—விலைவரம்பின்று
உள்ளுதொறும் உள்ளுதொறும் உள்ளம் உவப்பிக்கும்
தெள்ளு திருமுறைநூற் சீர்!

"SAKTHI" Phones: 2771, 2881 & 2991

# Sri Sakthi Textiles Limited

POST BOX No. 36,

**POLLACHI - 642001.**

TEXMARK: 3642

| | |
|---|---|
| Total Ring Spindles installed | 25032 |
| Total Ring Spindles at work | 25032 |
| Total Doubling Spindles at work | 3208 |

**Manufacturing yarn in counts :**

| | | |
|---|---|---|
| Carded yarn in hanks | : | 60s. |
| Combed yarn in hanks | : | 60s & 80s. |
| Doubled yarn in hanks | : | 2/20s & 2/60s. |
| Cone yarn in counts | : | 34s. 60s & 80s: |

# கந்த புராணம்

திருமுருக கிருபானந்தவாரியார்



**(7) தட்சன்: சிவம் மாட்டின் மேல் ஏறுமோ?**

ததீசி : உலகமெல்லாம் ஒடுங்கிய போது தருமம் ஒடுங்காமல், எருது வடிவுடன் ஈசனை யடுத்தது. இறைவன் அத்தரும விடை மீது ஆரோகணித்தார். உலகங்களை யெல்லாம் தாங்கும் ஈசனைத் தருமந் தாங்கியது. ஆதலால் அது தருமவிடையாகும். திரிபுரம் எரித்த போது, தேர் அச்சு முறிந்த போது திருமால் விடைவடிவாகி இறைவனைத் தாங்கினர்.

எண்ணும் நம் தொண்டர்கள் இயற்றுபாவமும்
புண்ணியமாம் நமைப்புறக்கணித்துளார்
பண்ணிய அறமெலாம் பாவம் ஆமால்
திண்ணம் ஈதம்மறை தானும் செப்புமே

என்று சிவமூர்த்தி செப்பியருளினர்!

**(8) தட்சன்: விடையவன் விடமும் உண்ணுமோ?**

ததீசி : அமரர்கள் அசுரர்களின் போரினல் மாள்வதால், சாவா மூவா அமுதம் உண்ண வேண்டிப் பாற்கடல் கடைந்தார்கள். மந்தர கிரி மத்தாக, சந்திரன் தூணாக, வாசுகி தாம் பாகப் பிடித்து அசுரரும், அமரரும் நெடுங் காலம் பாற்கடலைக் கடைந்தார்கள். வாசுகி யென்ற நாகம் துன்பம் பொருது ஆலால விடத்தைக் கக்கினன். அவ்விடம் எல்லா உலகங்களையும் வெதுப்பியது. விண்ணவர்கள் வெருவி ஓடினர்கள். அருகில் சென்ற திருமாலின் உடம்பு கருகிக் கருமால் ஆயினர். எல்லாரும் கயிலாயஞ் சென்று கண்ணுதற் கடவுளைப் போற்றி 'ஐயனே! நாங்கள் பாற் கடல் கடைந்தோம். விடம் விளைந்தது. தேவரீர் எங்களைக் காத்தருள வேண்டும்'' என்று வேண்டி நின்றார்கள்.

சிவ பெருமான் தம்மருகே திருநீற்றுக் கோயிலைத் தாங்கி நிற்கும் சுந்தரரைப் பார்த்து, ''சுந்தரனே! அந்தரரை வாட்டும் அவ்விடத்தை இவ்விடத்துக் கொணர்க'' என்று ஆணையிட்டார். அவர் போய்க் கொடிய கடிய நஞ்சைத் திரட்டிக் கொணர்ந்தார். அகில உலகங்களும் உய்ய எம்பெருமான் அந்த நஞ்சை உண்டு நீல கண்டராக ஆனர். இதுஒன்றே அவருடைய கருணையையும், வலிமையையும் பறை சாற்றும்.

**(9) தட்சன்: உமது சிவன் மயானத்தில் நடிக்குமோ?**

ததீசி : சிவன் சர்வ சங்காரம் செய்த மகாமயானத்தில் ஆனந்த நடம் புரிகின்றார். இது அவருடைய தனிப்பெருந் தலைமையை உணர்த்துகின்றது.

**(10) தட்சன்: சிவன் கங்கையைச் சுமக்குமோ?**

ததீசி : ஒரு சமயம் உமாதேவியார் பின் புறமாக வந்து விளையாட்டாகத் தேவதேவருடைய திருக்கண்களைப் பொத்தினர்கள். அவர் திருக்கண்களே சோமசூரியாக்கினியாதலால் உலகம் யாவும் இருண்டு விட்டது. அப்போது அரனர் நெற்றிக் கண்ணைச் சிறிது விழித்து அவ்வொளியால் உலக இருளை மாற்றியருளினர்.

அதனல் அஞ்சிய அம்பிகையின் திருவிரல்களில் வியர்வை யுண்டாயிற்று. அது வெள்ள மாகப் பெருகி உலகை அழிக்க வந்தது. இறைவர் அந்த வெள்ளத்தைத் தமது சடையில் ஒரு உரோமத்தில் அடக்கியருளினர். பின்னர் அமரர்கள் வேண்ட அதில் ஒரு சிறிது தந்தருளினர். அது கங்கையாக மூவுலகிலும் பெருகி உய்வு தந்தது. பகீரதன் தவத்தாலும் வந்து அசுரருடைய எலும்பில் பட்டு அவர்கட்குச் சுவர்க்கம் நல்கியது.

கங்கையைச் சங்கரன் சுமந்தது பேராற்றலையும் பெருங் கருணையையும் உணர்த்துகின்றது.

**(11) தட்சன்: சிவனுக்கு மனைவியும் வேண்டுமோ?**

ததீசி : சிவபெருமானுடைய தனிப் பெருங் கருணையே உமையென்னும் பெண்ணுருக் கொண்டு விளங்குகின்றது. இல்லையேல் உலகம் யோகியாகி அழிந்து போகும்.

உமாதேவியென்பது சிவ மூர்த்தியின் தண் அருளாகும். சிவன் பிரமச்சாரி, உமை கன்னி.

இதைத் தத்துவ ஞானிகள் உணர்வார்கள். மூடனே! இது உனக்கு எவ்வாறு விளங்கும்?

(12) தட்சன் : சிவனுக்கு மகவும் உண்டோ ?

ததீசி : இந்திரன் போரில் அசுரர்களையெல்லாம் மாய்த்துப் பொன்னுலகில் ஆட்சி புரிந்து கொண்டிருந்தான். அதனால் அசுரர்கள் அல்லல் பட்டுச் சுக்கிரரைப் பணிந்து அசுர குலம் அழிந்ததை உரைத்து நின்றான். வெள்ளி பகவான், ''அசுரர் ஏறே! வருந்தாதே. தேய்ந்தவர் வளர்வர். திங்களே சான்று. பிரமதேவரின் அருளால் வந்த வசிட்டர் முனி குலத்துக்குத் தலைவர். அவருடைய மரபில் வந்தவர் ''மாகத'' முனிவர். பெருந்தவம் புரிந்து கொண்டிருக்கின்றார். ஒரு அசுர கன்னிகையை யனுப்பி அவள் மூலம் அசுர குலந் தழைக்குமாறு செய்வாய்.''

அசுர வேந்தன் அது கேட்டு மகிழ்ந்து விபுதை யென்ற அழகிய கன்னிகையை அழைத்து ''அம்மா! உன்னால் இந்த அழிந்த அசுர குலம் தழைக்க வேண்டும். நீ சென்று மாதவத்தில் சிறந்த மாகத முனிவரிடம் மகப் பெற்று உதவி செய்.'' என்றான்.

விபுதை பொன் மேரு கிரியில் அரிய பெரிய தவம் புரியும் மாகதரைக் கண்டாள். அவருடைய தவத்தின் பெரு நிலையைக் கண்டு திகைத்தாள். அம்மா! இவரை ஆயிரம் மேனகை வந்தாலும் மயக்க வொண்ணாது. வட்வைத் தீயைப் பஞ்சு அணுகுமோ? ஆனால் நான் வீணே திரும்பவுங் கூடாது. தவஞ் செய்து இவரைக் கணவனாகப் பெறுவேன் என்று கருதினாள். ஒரு புறத்தில் உள்ளத்தை ஒடுக்கித் தவஞ் செய்துக் கொண்டிருந்தாள்.

ஒரு சமயம் மாகத முனிவருக்கு முன்னே இரு யானைகள் புணர்ச்சி செய்தன. இந்தக் காட்சியைக் கண்ட மாகதருக்கு ஆசை வெள்ளம் பிறந்தது. உள்ளம் நிலை குலைந்தது. இந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துத் தவத்தில் இருந்த விபுதை அவர் முன் வந்து மின்னற் கொடிபோல் நின்றாள். அவளைப் பெண் யானையாகுமாறு செய்து அருந்தவர் ஆண்யானையாகிப் புணர்ந்தார். அவர்களிடம் கயமுகாசுரன் பிறந்தான். பிறந்த அவன் வாளும் பலகையும் ஏந்திச் சுற்றினான். அதனால் உலகம் சுழன்றது. அவனுடைய உரோமங்களில் பல அரக்கர்கள் பிறந்தார்கள். இதனைக் கண்டு முனிவர் நாம் பிழை செய்து விட்டோம் என்று தன்னையே நொந்து கொண்டார். அசுர வேந்தன் அக மகிழ்ந்தான்.

கயமுகாசுரனும் அவனுடைய சேனைகளும் சேர்ந்து உலகத்தை நடுங்க வைத்தார்கள்.

மலையினைப் பொடிப்பர்; ஏனை
மண்ணினை மறிப்பர்; வாரி
அலையினைக் குடிப்பர்; கையால்
ஆருயிர்த் தொகையை அள்ளி
உலையினைப் பொருவு பேழ்வாய்
ஒச்சுவர்; பரிதி யோடும்
நிலையினைத் தடுப்பர்; சேடன்
நெளிதரப் பெயர்வர் மாதோ.

கயமுகன் தவம் :

அசுர வேந்தனுடைய வேண்டுகோளுக்கு இசைந்து அவனிடம் சுக்கிர பகவான் வந்து கூறுவார், ''கயமுகனே! நீ தவஞ் செய்து பேராற்றலைப் பெற வேண்டும். காலத்தை வீணாக்கித் திரியாதே. கூற்றுவன் வரும்போது வலிமை, செல்வம், கல்வி முதலிய யாவும் துணை செய்ய மாட்டா. ஆதலால் அரனாரை வேண்டி அருந்தவம் புரிந்து பெருந்திறல் பெறுவாயாக'' என்று உபதேசித்தார். கயமுகாசுரன் சுக்கிரரிடம் மந்திர உபதேசம் பெற்று, தவத்திற்குரிய வழி வகைகளை யறிந்து மேருகிரி சென்றான். ஐந்தெழுத்தை ஓதி ஐம்புலன்களை யடக்கி, ஐந்தழலுக்கு நடுவே ஐம்முகக் கடவுளைத் தியானித்து ஐந்து கண்டங்களும் வியக்குமாறு தவஞ் செய்தான்.

ஆயிரம் ஆண்டுபுல் லடகு மேயினன்
ஆயிரம் ஆண்டுசில் புல்லை அருந்தினன்
ஆயிரம் ஆண்டள வனிலம் நுங்கினன்
மாயிரும் புவியுயிர் மடுக்கும் வாயினன்.

மூவாயிரம் ஆண்டுகட்குப் பின் மூலத் தழலால் வெதும்பி வெளிப்பட்ட சகச்சிரார அமுதையுண்டு உறுதியுடன் தவஞ் செய்தான். அவன உடம்பு வச்சிரம் போல் உறுதியாயிற்று. இதைக் கண்டு பிரமாதி தேவர்கள் பெரிதும் கலங்கினர்கள்.

சிவத்திடம் பெற்ற வரம் :

கயமுகனுடைய தவ்த்துக்கு உளம் மகிழ்ந்த உமாநாயகன் விடை மீது வந்து காட்சியளித்தான். கயமுகாசுரன் கால காலனார் திருவடியில் வீழ்ந்து உருகிய சிந்தையுடன் நின்றான். ''அன்ப! உனக்கு என்ன வரம் வேண்டும்; கேள்'' என்றார் இறைவர்.

கயமுகன் ''கருணைக்கடலே! திருமால் பிரமன் இந்திரன் முதலிய எல்லாத் தேவர்களும் என்னிடம் தோல்வி அடைய வேண்டும். எந்த ஆயுதங்களாலும் எனக்கு முடிவு வராது இருக்க வேண்டும்; மனிதர், அவுணர், விலங்கு என்ற எதனாலும் எனக்கு மரணம் வரக்கூடாது. என்னைப் போன்ற ஒருவன் வந்து என்னுடன் போர் புரியினும் அவனுடைய ஆயுதம் எனக்குத் தீங்கு செய்யாதிருக்க வேண்டும். ஒரு வேளை நான் அழியினும் பிறவாப் பேற்றையருள வேண்டும். எல்லா உலகங்களிலும் என் ஆணை செல்ல வேண்டும்'' என்று வரம் கேட்டான். இல்லை யென்னாத எம்பிரான் அவன் விரும்பிய வரங்கள் அனைத்தையும் தந்து நீங்கினர்.

சுக்கிர பகவானும் அசுரர் கோமானும் அவனிடம் வந்து ஆசி கூறினர்கள். கயமுகன் தேவதச்சனைக் கொண்டு மதங்கபுரம் என்ற ஓர் அழகிய நகரை உண்டாக்கி அதில் இருந்து அசுரரும் அமரரும் வணங்க ஆட்சி புரிந்தான்.

அசுர வேந்தன் புதல்வி விசித்திர காந்தியைத் திருமணம் செய்து கொண்டு இன்புற்றான்.

—தொடரும்.



# திருவள்ளூர் அருள்திரு வீரராகவப்பெருமாள் திருக்கோயில்.

திரு. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S.

திருவள்ளூர் என்னும் சிறந்த வைணவத் தலம், சென்னைக்கு வடமேற்கில், சுமார் 40 கி.மீ. தொலைவில் உள்ளது. திருவள்ளூர் இருப்புப் பாதை நிலையத்திற்குச் சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ள திருக்கோயிலில், அருள்திரு வீரராகவப் பெருமாள், கனகவல்லி (வசுமதி)த் தாயாருடன், எழுந்தருளியுள்ளார்.

இத்தலத்திற்குப் புண்ணியாவர்த்தசேத்திரம் என்றும், வீட்சாரணியம் என்றும், பெயர் வழங்கும். இங்குள்ள திருக்குளம் இருத்தாப நாசன புஷ்கரிணி என்னும் பெயர் உடையது. முன்னொரு காலத்தில் இத்திருக்குளத்தின் கரையில் தவம் புரிந்து கொண்டிருந்த சாலி கோத்திர முனிவரிடம், பெருமாள் ஒரு கிழ அந்தணர் வடிவில் வந்து, தாம் படுத்து ஓய்வு கொள்ள எங்கு இடம் (உள்) உள்ளது? என வினவினர். ஆதலின் இதற்குத் திரு எவ்வுள் ஊர் என்று பெயர் ஏற்பட்டது. அதுவே நாளடைவில் மருவித் திருவள்ளூர் என வழங்கி வருகின்றது.

இத்திருக்கோயிலின் உள்ளே நுழைந்ததும், முதற்கண் நமக்குத் தெரிவது, கொடிக் கம்பம் (துவஜஸ்தம்பம்). அதனை யடுத்துள்ள அரங்க மண்டபம் என்னும் மகா மண்டபத்தில் பெரிய திருவடி (கருடாழ்வார்) சந்நிதி உள்ளது. அதனைக் கடந்து சென்றால் திருவுண்ணாழிச் சுற்றுப் பிராகாரம் இருக்கிறது. அதன் சுவர்களில் தலபுராண வரலாறுகள் அழகிய ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. இங்குதான் சிறப்பு நாட்களில் பெருமாள் திருமஞ்சன நீராட்டுக் கொள்வது வழக்கம். அதனையடுத்து அர்த்த மண்டபம் உள்ளது. இதனை மஞ்சக் கட்டு என்பர். இதன்கண் அழகிய, மிக மிக அற்புதமான தெய்வத் திருவுருவங்கள் எழுந்தருளச் செய்யப் பெற்றிருக்கின்றன. இச் சந்நிதிகள், எழில் மிக்க இனிய வெள்ளிக் கதவுகள் அமைக்கப் பெற்றுத் திகழ்கின்றன. நாள்தோறும் இரவில் பெருமாளுக்கு இங்கேயே திரு மஞ்சம் அமைக்கப்படுகிறது.

இதனையடுத்து அந்தராள மண்டபமும், திருவுண்ணாழிகை என்னும் கருவறையும் உள்ளன. கருவறையில் விசயகோடி விமான நடுவில், ஆதிசேடன் ஆகிய அரவணைப் பள்ளியில் அருள்திரு வீரராகவப் பெருமாள் (மூலவர்) சயனத் திருக்கோலத்தில் காட்சி தருகின்றார். சாலிகோத்திர முனிவரின் தலையில் அவர் தம் வலக்கையை வைத்தருள்கின்றார். அவர் தம் இடத் திருக்கையில் ஞான முத்திரையுடன் பிரம தேவனுக்கு நான்மறைகளை உபதேசிக்கின்றார். மற்ற இரண்டு திருக்கைகளுள் ஒன்று அபய முத்திரையும் (அஞ்சேல் என்னும் குறிப்பும்), மற்றொன்று 'அருகே வருக' என்று நம்மை அழைப்பது போன்ற ஆக்வான முத்திரையும் கொண்டு விளங்குகின்றன.

மூலவருக்கு எதிரில், பூபாலராயர் என்னும் பொன் பீடத்தில் திரு எவ்வுள் கிடந்தான் என்னும் உற்சவர், சிறிய திருமேனியுடன் பொற்கலன்களும் கவசமும் பூண்டு, உபயநாச்சியாருடன் கண்கொள்ளாப் பேரழகில் திகழ்கின்றார். இவருக்கே நாள்தோறும் திருமஞ்சனம் முதலிய சிறப்புக்கள் நிகழ்த்தப் பெறுகின்றன. மற்றும், இவருடன் அருள்திரு பலிச் செல்வர், மணவாளன், கண்ணபிரான், சாளக்கிராம மூர்த்திகள் ஆகியோரும் எழுந்தருளியுள்ளனர். கருவறைப்பிராகாரத்தின் தென்மேற்கில் அருள் திரு இலட்சுமி நரசிம்மர் சந்நிதியும், வடமேற்கில் சக்கரத்தாழ்வார் சந்நிதியும் அமைந்து விளங்குகின்றன.

அருள்திரு வீரராகவப் பெருமாள் சந்நிதிக்குத் தென் பக்கம் பெரிய திருச்சுற்றில் கனகவல்லி (வசுமதி)த் தாயார் கோயில் உள்ளது. அங்குத் தாயார், உற்சவத் திருவுருவில், இரண்டு யானைகள் துதிக்கையில் பூவேந்தி அர்ச்சிப்பது போல் நிற்க, வெள்ளிப் பீடத்தில், அனைத்து அணிகலன்களும் அணிந்து கொண்டு (சர்வாபரண பூஷிதையாய்) காட்சி தருகின்றாள். இந்தச் சந்நிதியின் சுவர்களில் திருப்பாவை ஓவியங்கள் பல மிகவும் அழகுற வரையப்பட்டுள்ளன. இதன் பின்புறம் வெள்ளிக் கிழமை மண்டபம் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் மிக்க நான்கு தூண்களுடன் விளங்குகின்றது. பின்புறத் திருச்சுற்றில் இராமர் வேணுகோபாலர் தேசிகர் நம்மாழ்வார் ஆண்டாள் சந்நிதிகளும், வட பக்கத்தில் ஸ்ரீபாத மண்டபமும், திருக்கச்சி நம்பிகள் இராமாநுசர் விசுவக்சேனர் சந்நிதிகளும், அலுவலகம் வாகன மண்டபம் கண்ணாடியறை முதலியவையும் உள்ளன.

திருமழிசை ஆழ்வார் அருளிய நான்முகன் திருவந்தாதியிலும் (36), திருமங்கையாழ்வார் பாடிய பெரிய திருமொழிப் பத்துப் பாசுரங்களிலும், இத்தலமும் திருக்கோயிலும் மங்களாசாசனம் செய்து போற்றிப் புகழ்ந்து துதிக்கப் பட்டுள்ளன.

இத்தலத்திற்கு அமாவாசை தினங்களில் பல்லாயிரக்கணக்கில் பக்தர்கள் வந்து அருள் திரு வீரராகவப் பெருமாளை அன்புடன் வழிபட்டுச் செல்கின்றனர். இத்திருக்கோயில் அகோபில மடத்தின் ஆதீன பரம்பரை அருள் ஆட்சியின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. தொண்டை நாட்டில் ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்று மிகவும் புகழோங்கித் திகழும் திவ்விய தேசங்களுள் ஒன்றாகிய இத்தலத்திற்குச் சென்று கண்டு வழிபட்டு, அன்பர்கள் அனைவரும் இம்மை மறுமை நலங்களைப் பெற்று மகிழ்வார்களாக.

# அருள்திரு
# கொங்காளம்மன் ஆலயம்

**ஈரோடு வட்டம், :: :: கோவை மாவட்டம்**

நேரிசை வெண்பா

சீர் திகழும் ஈரோட்டுச் செல்வியுமை கொங்காளம்மன்
பார்புகழும பாதம் புணியவே — தேர்மகிழும்
சுந்தரி சௌந்தரி மாதங் கியானந்தியருட்
சந்ததமும் வந்துதவுதான்.

ஈரோடு மாநகர் வரும் பக்த கோடிகள்
மேற்படி ஆலயத்திற்கு வருகைதந்து அம்மையின்
அருளாசி பெற வேண்டுகிறேன்.

முக்கிய விசேஷங்கள்

1. ஆடி வெள்ளிக்கிழமைகள்
2. நவராத்திரி உற்சவம்
3. தைப்பூசம் ரதோற்சவம் (தை மாதம்)

**திரு. எம். சுப்பிரமணியம்,**
பி.ஏ.,பி.எல்., எம்.எல்.ஏ.,
தலைவர், அறங்காவலர் குழு

திரு. சி. எஸ். சுப்பிரமணியம்,
செயல் அலுவலர்.
தொலைபேசி எண். 2421

திரு. ஆர் கே. சின்னசாமி,
திருமதி. ஆர். லட்சுமி,
திரு. எ. நெடுமாறன் (எ) ராஜு, எம்.சி.,
திரு. கே. ஆறுமுகம்,
அறங்காவலர்கள்.

# திருவாரூர்க் காமாட்சியம்மை திருக்கோயில்

திரு. என். எஸ். ஐயாக்கண்ணு
பத்தர்

158603

சோழ வள நாட்டின் இதய கமலம்போல் விளங்குவது திருவாரூர். சிவபெருமானுக்கு உரிய பஞ்ச பூதத் தலங்களுக்குள் பிருதிவித் தலமாகச் சிறந்து திகழ்வது திருவாரூர். சோழப் பேரரசர்களின் தலைநகரங்களுள் ஒன்றுக விளங்கியிருந்த திருவாரூரின் தெய்விகச் சிறப்பு,இனைத்தென்றுஅளவிட்டுக் கூறமுடியாது. ''திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்தலத்தின் சிறப்பினைப் புகழ்ந்துள்ளார்.

''உள்ள மார்உரு காதவர்? ஊர்விடை
வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாம்
தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள்,பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள்''.

என்று, திருவாரூரின் அளவற்ற சிறப்பினை மிகவும் வியந்து போற்றி மகிழ்கின்றுர் தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமான்.

இத்தகைய சித்தி முத்தித் தலமாகிய திருவாரூரின்கண் கோயில் கொண்டு விளங்கும் அருள்மிகு கமல வசந்த தியாகேசர் திருக் கோயிலின் திருக்குளத்திற்கு மேற்குப் பாகத்தில் துர்க்கையாலயச் சாலையில், சுமார் 20,000 சதுர அடிப் பரப்பளவில் சுற்று மதில்களும், வடக்கு நோக்கிய மூன்று நிலை மாடங்களைக் கொண்ட சிற்ப வேலைப்பாடு அமைந்ததான இராஜ கோபுரமும், அடுத்துக் கலியாண மண்டபமும், அடுத்து மகா மண்டபமும் அதில் செப்புச் சிலை உற்சவ மூர்த்தமும், அடுத்து கருங் கல்லாலான அர்த்த மண்டபமும், திரிதள சிற்ப வேலைப்பாடு அமைந்த கருவறையில் கண்டோர் உள்ளம் கவரும் அழகே உருவான பாலை ரூபத்தில் சடா மகுடதாரிணியாய்க் காட்சி அளிக்கிருள் அருள்மிகு காமாட்சியம்மை. எறும்பு முதல் எண்பத்து நான்கு லட்சம் யோனி பேதமாகிய சீவராசிகட்கும், சப்த, ரூப, ரச, பரிச, கந்தம் என்னும் ஐம்புல நுகர்ச்சிகளின் உள்ளுணர்வாய், உணர்வியலின் பயனுய், ஈன்றும், காத்தும், அளித்தும், அழித்தும், நம்மில் உள்ளுணர்வாய் இருந்து ஆட்சி புரியும் அருள்மிகு காமாட்சி அம்பாள் திருக் கோயிலும் மேற்படி திருக்கோயிலின் தென் மேற் புரமாக தீர்த்தக் கிணறும், அதை அடுத்து தெற்கு நோக்கிய சந்நிதியாய்க் கொண்ட கரு வறையும், அர்த்த மண்டபமும் கொண்டதான திருக்கோயிலில் அங்குச, பாச, அபய, வரத சடாமகுடதாரிணியாய் காட்சி அளித்து அருள் வழங்கும் அம்மையாம் வரப்பிரசாத வரவினி யோகாம்பாள் திருக்கோயிலும், அதன் எதிர்ப் பாகத்தில் சப்த மாதா திருக்கோயிலும், வட திசை நோக்கி அமைந்துள்ளன.

அதை அடுத்துக் கிழக்குச் சந்நிதியாய்க் கொண்டு மகா மண்டபமும், அம் மண்டபத்தில் செல்வ விநாயகரும், மிக மிகப் பழைமையான இலிங்க பாணம் ஒன்றும், சிங்கார வேலவரும் கிழக்கு நோக்கி வீற்றுள்ளார்கள். தென் சந்நிதி யாகக் கொண்ட கருவறையில் எழுந்தருளும் மூர்த்தமான வள்ளி தேவசேனு சமேதனுய், திரிபங்கவடிவினனுய், காண்போர் உள்ளம் பரவசம் கொள்ளும் தமிழ்க் கடவுளான முருகன், சிங்கார வேலவரின் காட்சி அளப் பரிது.

மகா மண்டபத்தை அடுத்துக் கருங்கல்லால் ஆன அர்த்த மண்டபமும், கருங்கல்லால் அஷ்ட கோண அடைப்புக்கு மேல் கர்ப்பக் கிரக விமான கருவறையில் நளச்சக்கரவர்த்திக்கு கார்க்கோடகன் என்ற அரவத்தால் இழக்கப் பட்ட அழகை, மீட்டளித்த அருள்மிகு அருள் வழங்கும் அம்மை பங்கர், அழகே உருவான இலிங்கத் திருமேனி கொண்ட அழகேசர் கொலு வீற்று உள்ளார்.

மேற்படி ஆலயத்துள் உடை வாளும், கச்சமும் குவித்த கரமும் கொண்ட நளச் சக்கரவர்த்தியின் திருவுருவம் ஒன்றும் உள்ளது. இன்னும் சூரியர் பைரவர், சனி பகவான் (பழைமையான) சிற்பவடிவங்களும் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளன. மேலும் பிரதிட்டை செய்ய வியலாமல் மிகப் பழைமையான இலிங்க மூர்த்தியும், நந்தி, சண்டிகேசரும் உள்ளன.

அழகேசர் திருக்கோயிலில் கருவறையின் மேல்புறம் பின்புறக் குமுதவரிப் பட்டியலில் பழமையான கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவைகளைப் பரிசீலிக்க முயற்சிக்கப்பட்டு வரு கின்றது.

இவ்வாலயத்தின் பின்புறம், மேல் பாகத்தில் ''நள தீர்த்தம்'' என்னும் ஒரு திருக்குளம் சுமார் ஒரு ஏக்கர் பரப்பளவுக்கு உள்ளது. இத்திருக்குளத்தின் வடபாகத்தும், தென் பாகத்தும் இரு அரச மரங்கள் உள்ளன. இத்திருக்குளத்தின் வடபாகத்தில் மிகப் பழமை யான சுவேத விநாயகர் ஆலயம் உள்ளது. இத்தீர்த்தத்தில் நீராடுபவர்களுக்குச் சரும வியாதிகள் தீர்ந்து வந்துள்ளன. இவ்வாலயங் களும், திருக்குளமும் விசுவகர்மச் சமூகப் பரம் பரையாரால் பராமரிக்கப்பட்டு வந்துள்ளது.

சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் ஆர். குருசாமி பத்தர் என்பவருக்கு, பிறந்த குழந்தை கள் யாவும் சரும வியாதியால் பீடிக்கப்பட்டு

இறந்துவிட்ட வேதனை தீர, காசி யாத்திரை செய்ய முயன்று, முடியாமையால் இந் நள தீர்த்தத்தைத் தூர் வாரி வெட்டி, படித்துறைகள் கட்டியும், வடகரையில் திரு விசாலாட்சி சமேத விசுவநாதர் ஆலயம் ஒன்று அமைத்துக் குடமுழுக்கு செய்வித்தும், மூன்று மகன்களையும், ஒரு மகளையும் பெற்றுப் பெரும் பேற்றினை அடைந்தார்.

அருள்மிகு சுவேத விநாயகர்பால் மாருத பக்தியும், அன்பும் கொண்ட அப்பகுதிவாழ் இளஞ்சிறுர்கள் உயர் கல்வியும், உத்தியோகமும், உயர் செல்வமும் பெற்று ஆர்வம் கொண்டு மேற்படி ஆலயத்தையும் விசாலாட்சி சமேத விசுவநாதர் ஆலயத்தையும் புதுப்பித்துத் திருப்பணியும் நடந்து வருகிறது.

மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம் என்னும் முச்சிறப்பும் வாய்ந்ததான இவ்வருள்மிகு காமாட்சி திருக்கோயில் திருப்பணி ரூ. 5,000-க்கு மதிப்பீடு செய்யப்பட்டு, சென்னை இந்து அறநிலைய ஆட்சித் துறை நிதி உதவியோடும் பெருமக்கள் நன்கொடையோடும் 22—8—73-ல் நாகை உயர்திரு உதவி ஆணையர் அவர்களால் திருப்பணி துவக்கி வைக்கப்பட்டு நடந்து வருகிறது. இந்து சமயப் பெருமக்கள் பேராதரவும், பெரும் பொருளும் நல்கி, அருள் வழங்கும் அம்மைபங்கர், அழகேசர் திருவருளும், அன்னை காமாட்சியின் நல்லாசியையும் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேம்.

---

# இறைவனைப் பிரார்த்திப்போம்

**நீதிபதி திரு மு.மு. இஸ்மாயில்**

மழையில்லை என்பதற்காக நாம் பிரார்த்தனை செய்வது, அவசியமே. ஆனுல் அந்தப் பிரார்த்தனையினுல் பலன் கிடைப்பது பிரார்த்திக்கும் உள்ளத்தைப் பொறுத்தது. ஒரு சிறிய உதாரணத்தைப் பார்க்கலாம். ஒரு தாய்க்கு 4 மாதக் குழந்தை ஒன்று இருக்கிறது. அந்தக் குழந்தையைக் கிடத்தி விட்டுத் தாய் வேறு காரியத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிருள். அந்தக் குழந்தை பசியால் அழுகிறது. எங்கிருந்தாலும், என்ன செய்து கொண்டிருந்தாலும், அதை விட்டு விட்டுஅழுகிறகுழந்தைக்குப் பால் கொடுப்பதற்காக ஓடோடியும் வருகிருள் தாய். ஆனுல் ஒரு 4 வயதுக் குழந்தை அப்படிப் பசியால் அழுமானுல் அந்தத் தாய் அவ்வளவு அவசரமாக ஓடோடி வரமாட்டாள். இரண்டும் அவளுடைய குழந்தைகள்தாம். அவைகளினிடையே அவள் வேற்றுமை பாராட்டுகிருள் என்று சொல்ல முடியாது. ஆனுல் இரண்டு குழந்தைகளிடையே வெவ்வேறு விதமாகஅவள் நடந்து கொள்வதற்குக் காரணம் இருக்கிறது. 4 மாதக் குழந்தை, தன்னுல் எதையும் செய்து கொள்ள முடியாத நிலையிலுள்ள குழந்தை; நிர்க்கதியான குழந்தை; எல்லாவற்றுக்கும் பிறரை நம்பியிருக்கும் குழந்தை. ஆகையால் அந்தக் குழந்தையின் தேவையை நிறைவேற்றி வைக்கத் தாய் ஓடோடி வருகிருள். 4 வயதுக் குழந்தை அப்படியல்ல. தாயிருக்குமிடத்தைத் தேடிக் கொண்டு போக அதற்குத் தெரியும். பசியைத் தீர்த்துக் கொள்ளுவதற்காக உணவு எங்கிருக்கிறதென்று தேடிக் கொண்டு போகவும் அதற்கு முடியும். மேலும் பசியைக் கொஞ்ச நேரம் தாங்கிக் கொள்ளவும் அதனுல் முடியும். ஆகையால்தான் தாய் அவசரப்பட்டு ஓடோடி வரவில்லை. இந்த வேறுபட்ட நிலைகள்தாம் தாயின் வெவ்வேறுன போக்குக்குக் காரணம். அது மாதிரியே நம்முடைய இயலாமையையும் நிர்க்கதியான நிலையையும் உணர்ந்து கொண்டு அந்த 4 மாதக் குழந்தை உள்ளத்தோடு இறைவனைப் பிரார்த்திப்போமானுல் நம் பிரார்த்தனையை நிறைவேற்ற இறைவன் தயங்கவே மாட்டான். அதற்கு மாருக நமக்கும் சக்தியிருக்கிறது; திறமையிருக்கிறது; சமாளித்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் பிரார்த்திப்போமானுல் நம்முடைய சக்திகள் எல்லாம் தீர்ந்து வேறு வழியில்லை என்று சரணுகதி நிலைக்கு வருகிற வரையில் அந்தப் பிரார்த்தனைக்குப் பலன் கிடைக்காது. அதற்கு மாருக அந்த நிலையில் பச்சைக் குழந்தைபோல் அவனன்றி வேறு கதியில்லை என்ற உளப்பாங்கொடு இறைவனைப் பிரார்த்தித்தால் நிச்சயமாக மழை பெய்யும். அந்த மனப்பாங்கை அடைவதுதான் கஷ்டம். அதையும் அருள வேண்டுமென்று இறைவனைத்தான் பிரார்த்திக்க வேண்டும்.

[திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த ஆவுடையார் கோயிலில் 23—2—75-ல் தெய்வீகப் பேரவையின் வேண்டுகோளின்படி நடைபெற்ற மழைக்காக ஏற்பாடு செய்யப்பட்ட பிரார்த்தனையை முடித்து வைத்து ஆற்றிய தமிழ் நாடு உயர்நீதி மன்ற நீதிபதி உயர்திரு. ஜஸ்டிஸ் மு.மு. இஸ்மாயில் அவர்களின் உரைச் சுருக்கம்.]

# சைவ சித்தாந்தம்

திரு. க. வச்சிரவேல் முதலியார் B.A., L.T.,
காஞ்சிபுரம்

சைவ சித்தாந்தம் என்பது உலக வாழ்வின் உண்மையை ஒப்புக் கொள்ளும் தெய்வ நெறிக் கொள்கை. அஃது உலக வாழ்வின் உண்மையை ஒப்புக் கொள்வதோடு நடைமுறைக்கு ஏற்ற ஒழுக்க நெறியினையும் மிக உயர்ந்த தத்துவக் கொள்கையினையும் உடையது. அஃது இக் காலத்துத் தமிழகத்திலும் ஈழ நாட்டிலும் உள்ள பெரும்பான்மைத் தமிழ் மக்களால் பின் பற்றப்படுவதாய் உள்ளது. அதனியல்பை எண்ணுவோமாக.

அதில் வழிபடப்படும் பரம்பொருள் சிவம் எனப்படும். எல்லோராலும் வழிபடப்படும் பரமன் ஒருவனே. ஆயினும் அவனைப் பற்றி அவரவர்கள் கொண்டிருக்கும் கருத்தில் வேறு பாடு உண்டு. ஆதலினால் அவரவர் அவனை வேறு வேறு பெயர்களால் வழங்குவர். அவன் உலகத்தைப் படைப்பவன் என்றும், பிறவாதவ னென்றும் கருதுகின்றனர். அவனை அயன் என வழங்குவர். காக்கும் கடவுள் எனவும், எங்கும் நிறைந்தவனெனவும் கருதுகின்றவர்கள் விட்டுணு என வழங்குவர்; மிகப் பெரியதாய் உயிர்களால் அறியப்படாதது எனக் கருதுகின் றவர் பிரமம் என்பர். சைவர்கள் பரமனை மாறுபடாத பேரின்ப வடிவினன் எனவும், அவனைத் தலைப்பட்டு உணர்ந்தவர்கள் பலர் எனவும், இன்றும் அவனை யாரும் தலைப்பட்டு உணர்ந்து பேரின்பம் எய்தக் கூடும் எனவும் கருதுகின்றனர். ஆதலால் அவர்கள் முதல்வனைச் சிவன் என அழைக்கின்றனர்.

சிவன் என்னும் சொல் பேரின்ப வடிவினன் எனவும், தூய இயற்கை உணர்வினன் எனவும், எத்தகைய மாறுதலும் இன்றிச் செம்பொரு ளாய் நிற்பவன் எனவும் பொருள்படும். அம் முதல்வன் பெண், ஆண், அலி என்னும் பகுப்பைக் கடந்து நிற்போனாயினும், அன்பர் கள் விரும்புமாறு ஆணாகவும், பெண்ணாகவும், அல்லதாகவும் இருந்து அருள் புரிவான் எனவும் சைவ நூல்கள் கூறுகின்றன. ஆதலினால் சைவர் கள் முதற் பொருளைச் சிவன் எனவும், சிவை எனவும், சிவம் எனவும் முப்பாலிலும் வழங்கு வர். ''உண்டொர் ஒண்பொருள் என்றுணர் வார்க்கெல்லாம்—பெண்டிர் ஆண் அலி என்ற றியவொண்கிலை'', ''பெண் ஆண் அலி என்னும் பெற்றியன் காண்க''—என்பவை மணிவாசகம்.

சைவம் என்ற சொல் சிவ சம்பந்தம் உடையது எனப் பொருள்படும். சிவ சம்பந்தம் எல்லா உயிர்களுக்கும் உண்டு. சிவபிரான் உயிர்கள்தோறும் தங்கி நின்று அவற்றின் அறி யாமையைச் சிறிது சிறிதாக நீக்கி, அறிவைப் படிமுறையால் வளர்த்து வருகிறான். இக் கருத்தை மாணிக்க வாசகர், ''பாசமாம்பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே'' என்னும் திரு வாசகத்தால் குறிக்கின்றார். பாரித்தல்—வளர்த் தல். உயிர்களின் அறிவைப் படிமுறையால் விளக்கி வளர்த்தல் பற்றியே சிவபிரான், ''அம்மையப்பர்'' எனப்படுகின்றான்.

திருஞானசம்பந்தர் வரலாற்றில் அவர் வேற்றுச் சமயவாதிகள் சிலர்க்கு உண்மை உணர்த்திய ஒரு நிகழ்ச்சி வருகின்றது. அதில் அவர், ''சைவம் அல்லாது மற்றொன்றும்இல்லை'' ''நின்றனவும் சரிப்பனவும் சைவமேயாம்'' எனத் தம்மை வணங்கி நின்ற அம் மதவாதி களுக்கு உபதேசித்தருளுகின்றார்.

சைவத்திற் கொள்ளப்படும் ஒழுக்க நெறியின் அடிப்படையைச் 'சைவ சமயநெறி' என்னும் நூல், ஒரு குறள் வெண்பாவால் எடுத்துரைக் கின்றது. அஃது, ''எவ்வுயிரும் நீங்காது உறை யும் இறை சிவனென்று எவ்வுயிர்க்கும் அன்பாய் இரு'' என்பதாகும். இன்னும், உலகில் உள்ள சமயங்கள் எல்லாம் அவரவர் பக்குவத்திற்கு ஏற்றபடி முதல்வனால் பலர் மூலம் விளக்கப் பட்டவை என்பதே சைவ சமயத்தின் பொது நோக்கின் அடிப்படையாகும். இத்தகைய தெய்வ நெறியின் கருத்தொழுங்கே சைவ சித் தாந்தம் எனப்படும்.

சித்தாந்தம் என்னும் சொல்லின் பொருள் பெற்ற முடிபு என்பதாகும். அஃதாவது தலை யாய பிரமாண நூல்களையும், உண்மை அனு பவம் வாய்க்கப் பெற்ற பெரியோர்களின் அனு வங்களையும் ஆராய்வதன் பயனாகக் கிடைத்த முடிந்த முடிபே சைவ சித்தாந்தம் எனப்படும். இதன்கண் கூறப்படும் சமய உண்மைகளும் கொள்கைகளும் இந்தியாவில் தோன்றிப் பரவி யுள்ள மெய்யுணர்வின் உயர்ந்த படிநிலையாகும் என மேல்நாட்டுப் பெரியோர் கருதுகின்றனர். சைவ சித்தாந்தத்திற்கு ஆதாரமாகக் கொள் ளப்படும் நூல்கள் தமிழ், வடமொழி இரண்டி லும் உள்ளன. இவ்வனுபவ மரபு வடமொழி. தமிழ் மொழி என்னும் இரு மொழிகளின் பய னாக நிலவுவது. இக்கருத்துப் பற்றியே திரு ஞானசம்பந்தர், ''தமிழ்ச் சொலும் வடசொ லும் தாள் நிழல் சேர அம்மலர்க் கொன்றை அணிந்த எம் அடிகள்'' எனச் சிவபிரானைப் போற்றுவார் ஆயினர்.

இனி, சைவ சித்தாந்தத்தின் அடிப்படை உண்மைகளைப் பற்றிச் சிறிது எண்ணுவோம்; என்றும் உள்ள பொருள்களாக இந்த நெறியில்

# அருள்திரு
# பெரியமாரியம்மன்-சின்னமாரியம்மன்
# திருக்கோயில்

**ஈரோடு வட்டம் :: :: கோவை மாவட்டம்**

ஈரோடு வருகை தரும் பக்தர்கள் அருள்திரு பெரியமாரியம்மன் மற்றும் சின்ன மாரியம்மன் ஆலயத்திற்கு வருகைதர கோருகிரேம். வருடாந்திர உற்சவம் பிரதி வருடம் பங்குனி மாதம் முதல் வாரம் ஆரம்பித்து அதே மாதக் கடைசியில் முடிவடைகிறது.

## சீட்டுக் கட்டண விவரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | அபிஷேகம் சீட்டு | 1க்கு | .... | 1.25 | காசு |
| 2. | நிவேத்தியம், தேங்காய் | 1க்கு | .... | 0.10 | ,, |
| 3. | அர்ச்சனை | 1க்கு | .... | 0.40 | ,, |
| 4. | முடி | 1க்கு | .... | 0.50 | ,, |
| 5. | பாவாடை | 1க்கு | .... | 0.25 | ,, |
| 6. | கண் மலர் | 1 ஜோடிக்கு | .... | 0.20 | ,, |
| 7. | உருவகரம் | 1க்கு | .... | 0.20 | ,, |
| 8. | வெள்ளி கண்மலர் | 1 ஜோடிக்கு | .... | 0.50 | ,, |

**மேலே கண்ட கட்டணங்கள் செலுத்தி சீட்டுப் பெற்றுக் கொள்ள கோருகிரேம்.**

தொலைபேசி
ஆபீஸ் நெ. 2421
ஈரோடு.

**சி. எஸ். சுப்பிரமணியம்,**
செயல் அலுவலர்.

கொள்ளப்படுபவை, இறை, உயிர், தளை என்னும் மூன்றுமாகும். இவற்றுள் இறை என்பது கடவுள். அது ஞானனந்த வடிவாய் எப்பொருள்களிலும் நிறைந்ததாய் எப்பொருள்களுக்கும் பரம ஆதாரமாய் நிற்பது. தானே உணர்ந்து உயிர்களை அறிவிப்பது அஃது ஒன்றே ஆகும்.

உயிர் என்பது அறிவிக்க அறிவதாய், உடம்பு தோறும் வேறு வேருய் உள்ளது. இரு வினைகளைச் செய்து அவற்றின் பயனை நுகர்ந்து வருவதாய்ப் பிறப்பு இறப்புகளுக்குட் பட்டுச் சுழல்வதாய் உள்ளது.

தளை என்பது இவ்வுயிர்களைக்கட்டுப்படுத்தி நிற்பது. அஃது ஆணவம், மாயை, கன்மம் என மூன்று வகைப்படும். அவற்றுள் ஆணவம் என்பது உயிர்களின் அறிவையும், முயற்சியையும் நிகழவொட்டாமல் தடுத்து நிற்பது. மாயை என்பது, உயிர்களுக்கு உடம்பு, மெய், வாய், மனம் முதலிய கருவிகள், உலகம், உலகத்திலுள்ள பொருள்கள் என்னும் நான்கு வகையாகக் காரியப்பட்டு நின்று, உயிர்களின் அறிவை விளக்குவது. இதனல் இஃது ஆணவத்திற்கு எதிராக நின்று உயிர்களுக்கு உதவி செய்வதென்றே கொள்ளப்படும். இக் கொள்கையில் சித்தாந்த சைவத்திற்கும் ஏனைய சமயங்களுக்கும் அடிப்படையில் உள்ள கருத்து வேறுபாடு நன்கு சிந்தித்தற்குரியது. சைவர்கள் அல்லாத பிற சமயத்தவர் உயிரைப்பற்றியுள்ள ஆணவம் என்ற ஒன்றை மாயைக்கு வேருக உள்ளதெனக் கொள்வதில்லை. ஆனல், நமக்குள்ளே நடைமுறை அனுபவத்தை எண்ணினல் உடம்பு முதலிய மாயையின் காரியங்கள் நம் அறிவு வளர்ச்சிக்கு உதவியாக இருத்தல் எளிதில் விளங்கும். ஒரு குழவி தான் பிறக்கும் போது பெரும்பாலும் அறியாமையால் அழுந்தி உள்ளதென்றே கொள்ளலாம். பின் அது வளர, வளர உலகத்தோடு தொடர்பு கொள்வதனல் அதன் அறிவு பெருகி வருதலைத் தெளிவாகக் காண்கின்ருேம். நாம் உடம்போடு தொடர்பு கொண்டு நிற்கும் நனவு நிலையில் உலகத்தை நன்கு அறிகின்ருேம். கனவு, உறக்கம் என்னும் நிலைகளில் நம் அறிவு, மெய், வாய், கண், மூக்குச் செவி என்னும் பொறிகளோடு தொடர்பு கொள்வதில்லை. அதனல் நம் அறிவு கனவு உறக்கங்களில் நன்கு விளங்குவதில்லை. உறக்கத்தில் நம் மனமும் தொழிற்படுவதில்லை. அப்பொழுது நமக்குள்ள அனுபவம் அறியாமையாகவே இருக்கிறது. அவ்வறியாமையை நமது இயற்கையான குணம் என்று நாம் ஒப்புக் கொள்ள இசையோம். ஒருவனைப் பார்த்து உனக்கு அறிவில்லை என்று சொன்னல் அவனுக்குக் கோபந்தானே வரும்! ஆதலால் நமது இயற்கைக் குணம் அறிவுதான் என்று சைவ சித்தாந்தம் கூறுகின்றது. அறியாமை செயற்கையால் வந்தது; அவ்வறியாமையை விளைவிப்பது ஆணவம் என்னும் தளை.

ஒரு செப்புப் பாத்திரத்தின் இயல்பான தன்மை ஒளி உடைமைதான். ஆயினும் அதில் களிம்பு மேன்மேலும் சேர்தலினல் அவ்வொளி விளங்குவதில்லை. புளியும் சாம்பலும் தண்ணீருங் கொண்டு அப்பாத்திரத்தைத் துலக்கினல் அதன் இயற்கை ஒளி நன்ருகப் புலப்படும். அது போல நம்முடைய இயற்கையான அறிவை மறைப்பதாக ஆணவம் அல்லது மூலமலம் எனப்படும் ஒரு பொருள் இருக்கிறது. அது தான் நாம் எதையேனும் ஒன்றைக் கற்றுணர்ந்தாலும் அவ்வுணர்வைப் பின் இழந்து மறக்கும்படி செய்கின்றது. அப்பகைப் பொருளை இருள் போன்றது என்று சைவம் கூறுகின்றது. அது செம்பில் உள்ள களிம்பு போன்றது. புளியும் சாம்பலும் போல அவ்வறியாமையை நீக்கி அறிவை விளக்குபவை உடம்பு முதலியவை. உடம்பு முதலியவற்றைத் தனு, கரணம், புவனம், போகம் எனக் கூறுவர். தனு என்பது நம் உடம்பு, கரணம் என்பவை மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம் முதலிய கருவிகள், புவனம் என்பது உலகம்; போகம் என்பது நுகர்ச்சிப் பொருள். இந்த நான்கிற்கும் காரணமாக உள்ள அருவப் பொருள் மாயை எனப்படும். மாயையை உள்பொருள் என்றும், உலகங்களின் காரணமான சக்தி சமூகம் (Creative-Force) என்றும் பல்லாண்டுகளுக்கும் முன் சைவம் உணர்ந்து கூறி வருகின்றது. இம்மாயை ஆணவத்தின் வலியைக் கெடுப்பதாய் உள்ளது. இருளுக்கு மாருன ஒளி போன்றது.

உயிரின் இயல்பு நம் கண்ணின் இயல்பு போன்றது. மூலமலம் கண்ணின் படலம் அல்லது புற இருள் போன்றது. தனு கரண புவன போகங்கள் விளக்குப் போல உள்ளவை.

அக இருளுக்கும் புற இருளுக்கும் உள்ள ஒரு வேறுபாட்டைச் சைவ நூல்கள்கூறுகின்றன. புற இருள் எல்லாப் பொருள்களையும் மறைக்கும்; ஆனல் தன்னை மறைக்காது. இருள் உள்ளபோது அதன் இருப்பு எல்லோராலும் உணரப்படும். ஆனல் அகவிருள் எந்தப் பொருளையும் காட்டாது. இருள் உள்ளபோது அதனைப் போக்கிப் பொருள்களைக் காண்பதற்கு விளக்கை நாடி நிற்கின்ருேம். அதுபோல நமக்குள்ள அறியாமையை நீக்கிக் கொள்ள வேண்டும் என்னும் எழுச்சி நமக்கு இயல்பாக உண்டாவதில்லை அல்லவா? ''ஒரு பொருளும் காட்டாது இருள் உருவம் காட்டும்; இரு பொருளும் காட்டாது இது'' என்று உமாபதி சிவம் என்னும் ஓர் ஆசிரியர் கூறுகிருர். இங்கு இஃது என்றது அக இருளாகிய மலத்தை. நாம் பிறவியில் இருக்கும் வரை இந்த அக இருள் நம்மறிவை விளங்க வொட்டாமல் தடுக்கின்றது. அதனல்நாம் நம்மையே இன்னுரென்று உணராமலிருக்கின்ருேம். சிலர் ஆன்மாவே இல்லை என்றும், வேறு சிலர் அஃது உண்டென்ருே இன்றென்ருே சொல்லொணுதது என்றும் கூறுகிருர்கள் அல்லவா? அப்படியே கடவுள் இருப்பையும், மறு பிறப்பின் உண்மையையும் இரு வினையின் உண்மையையும் நம்மால் எளிதில் உணர முடியவில்லை. ஆனல் இவையெல்லாம் உள்ளன என்று மெய்யுணர்ந்த பெரியோர்கள் அறிந்து கூறுகின்ருர்கள். நாமும் சிறிது சிந்தித்தால் அவை உள்ளன என்று உணரலாம்.

இரவில் விளக்கு உதவுவதுபோல இப் பிறப்பு நிலையில், தனு, கரண, புவன, போகங்

கள் நமக்கு அறிவை விளக்குதற்கு உதவுகின்றன. அத் தனு, கரண, புவன போகங்கள் நாம் செய்த வினைக்கீடாக வருகின்றன. ''விடிவாம் அளவும் விளக்கு அனைய மாயை—வடிவாதி கன்மத்து வந்து'' என்கிறார் உமாபதி சிவனார். மாயா காரியங்கள் உடம்பு முதலியனவாகக் கன்மத்து ஈடாக வந்து அறிவை விளக்குகின்றன; அவை இரவில் இருளைத் துரந்து உதவுகின்ற விளக்குப் போன்றவை—என்பது இப் பாட்டின் பொருள். இதுவரையில் மூன்று தளைகளில் ஆணவம் மாயை என்பனவற்றின் இயல்புகள் விளக்கப்பட்டன.

மூன்றாவது தளை கன்மம் எனப்படும். அது நாம் மன மொழி மெய்களால் செய்கின்ற செயல்களால் தோன்றுவது. நம் புத்தியைப் பற்றி நின்று நம் இன்பதுன்ப மயக்கங்களுக்குக் காரணமாய் உள்ளது. நாம் செய்கின்ற செயல்கள் நல்லனவும் தீயனவுமாக இருத்தலினால், இக்கன்மம் நல்வினை தீவினை எனவும், இருவினை எனவும் சுட்டப்படும். நல்வினை தீவினைஎன்னும் இரண்டுமே பிறவிக்குக் காரணமாக உள்ளவை. ஆதலினால் இரு வினையும் தீர்த்தற்குரிய வழியைத்தேடிக் கொள்ள வேண்டும் என்று கருதுகின்றார் திருவள்ளுவர்; இவ்விரு வினைகளும் மூல மலம் காரணமாகத்தான் உண்டாகின்றன என்றும் கூறுகின்றார். அவை தீர்த்தற்குரிய வழி, இறைவனுடைய மெய்ம்மையான புகழை எப்பொழுதும் விரும்பிச் சொல்லுதல் என்றும் உரைக்கின்றார்.

''இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

என்பது திருவள்ளுவர் வாய்மொழி. இதில் இறைவன் பொருள்சேர் புகழ்என்றது தேவாரம், திருவாசகம் போன்ற திருவருட் செம் பாடல்களையே என்பது நுணுகி உணர்ந்து கொள்ளத்தக்கது. மலமாகிய நோயால் துன்புறும் உயிர்களுக்கு மருந்து போல மாயை கன்மங்களை இறைவன் கொடுத்துள்ளான். உலகம் ஒரு மருத்துவ விடுதி. நோய் தீர்த்த உயிர்கள் முதல்வனைத் தலைப்பட்டுணர்ந்து பேரின்பம் எய்தும்.

இதுவரையில் நாம் கண்ட அடிப்படை உண்மைகளைத் திருஞானசம்பந்தர் பாடியுள்ள ஒரு பாட்டின் முதலிரண்டு அடிகளால் நினைவு கூரலாம். அவ்வடிகள், ''விளையாததொர் பரிசில்வரு பசுபாச வேதனை ஒண்தளையாயின தவிரவ்வருள் தலைவன்னது சார்பாம்'' என்பவை. இவற்றில் கடவுளைத் தலைவன் என்று சம்பந்தர் குறிக்கின்றார். உயிரைப் பசு என்று கூறுகின்றார். பசு என்னும் சொல் கட்டுற்றது என்று பொருள்படும். உயிர்களைக் கட்டிநிற்கும் தளைகளைப் பாச வேதனை, ஒண் தளையாயின என்று குறிக்கின்றார். பாசம் என்றது உயிர்க்கு நேர் பகைப் பொருளாய், அதன் அறிவைத் தடுத்து நிற்கும் மூலமலத்தை. வேதனை என்றது இன்ப துன்ப மயக்கங்களை, இங்கு அச்சொல் இன்ப துன்ப மயக்கங்களுக்குக் காரணமாகிய கன்மத்தைக் குறிக்கின்றது. ஒண்தளை என்றது உயிர்களுக்கு அறிவை விளக்கி நிற்கும் மாயையை. பசுவும், பாச வேதனை ஒண்தளைகளும், தலைவனும் அநாதி நித்தியப் பொருள்கள். அவை ஒரு காலத்தில் தோன்றியவை அல்ல. ஆதலால் அவற்றை, ''விளையாததொர் பரிசில் வரும்'' என்னும் அடையைக் காட்டிக் கூறுகின்றார். பசு எனப்படும் உயிர், பாசம் வேதனை ஒண் தளை என்னும் மூன்று மலங்களால் மாசுற்றுப் பிறந்து இறந்து வருகின்றது. அம்மாசு நீங்கித் தன்னுடைய திருவடியை உணர்ந்து பேரின்பம் நுகரும்படி உதவுகின்ற தலைவன் சிவபிரான் என்பது அந்த அடிகளின் பொருள்.

பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினைச் சார்தலே வீடுபேறு எனப்படும். உயிர்கள் பாசத்தின் நீங்கும்போது வியாபக உணர்வு உடையனவாய் முதற் பொருளைச் சார்ந்து அதன் தன்மையைப் பற்றி நின்று பேரின்ப அனுபவத்தைப் பெறும். இந்நிலையை அடைந்த உயிர் தனக்கு உள்ள சிவ சம்பந்தத்தை உணர்ந்து சிவமாய் அமரும். இக்கருத்தைத் திருஞானசம்பந்தர், ''சேர்வார் தாமே தான் ஆகச் செயுமவன்'' என்று குறிப்பிடுகின்றார். ''சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச் சார்தரா சார்தருநோய்'' என்ற திருவள்ளுவர் கருத்தும் இதுவே ஆகும்.

சிவதன்மம் சிவயோகம் என்னும் சாதனங்களை மேற்கொண்டு, ஒழுகின் முதற் பொருளின் உண்மையியல்பை உணர்ந்து அதன் அருட்குணங்கள் நம்மாட்டு மேற்பட்டு நிகழும்படி நிற்கும் மோனநிலை கிட்டும்; பாசப்பற்று அறும். அந்நிலையே பேரா இயற்கை எனப்படும் பரமுத்தி நிலை ஆகும்.




தவத்திரு. முத்துக்குமாரசுவாமித்தம்பிரான்
சுவாமிகள், திருப்பனந்தாள்

''மல்குக வேத வேள்வி ;
வழங்குக சுரந்து வானம்;
பல்குக வளங்கள்; எங்கும்
பரவுக அறங்கள்; இன்பம்
நல்குக உயிர்கட் கெல்லாம்;
நான்மறைச் சைவம் ஓங்கிப்
புல்குக உலகம் எல்லாம்;
புரவலன் செங்கோல் வாழ்க.

என்பது பரஞ்சோதி திருவிளையாடற் புராணத்தின் முதல் வாழ்த்துச் செய்யுள். ''வேதத்தில் கூறப்பெறும் வேள்விகளைச் செய்தால் வானம் சுரக்கும்; வானம் சுரந்தால் வளங்கள் பல்கும்; வளங்கள் பல்கினால் அறங்கள் பரவும்; அறங்கள் பரவினால் உயிர்கட்கெல்லாம் இன்பம் ஏற்படும்; இன்பம் நிலைத்தால் செம்பொருள் ஆகிய சைவம் ஓங்கும்; சைவம் ஓங்கினால் செங்கோல் வாழும்'' என்று இச்செய்யுளுக்குத் தொடர்ச்சியாகப் பொருள் கொள்ளல் வேண்டும். இதனால் வேத வேள்விகளால் மழை பொழியும் என்பதும், மழை பொழிந்தால் பிற எல்லா நலன்களுமே சித்திக்கும் என்பது பெறப்படுகின்றது.

**மேகம்**

காளிதாசன் இயற்றிய மேக சந்தேசம் —மேகவிடு தூது—''மேகம் என்பது புகை, அசல், நீர், காற்று ஆகியவற்றின் சேர்க்கை' என்று தெரிவிக்கிறது. அப்பகுதி வருமாறு :'

வேத வேள்விகளில் நெய், சமித்துக்களால் உண்டாக்கப் பெறும் புகை மேகமாக உருவமடைந்து மழை பெய்து உலகைப் புரக்கிறது, என்று அதர்வண வேத மந்திரம் ஒன்று கூறுகிறது. இக்கருத்தைத்தான் பரஞ்சோதி 'மல்குக வேத வேள்வி' 'வழங்குக சுரந்து வானம்' என்பதால் உணர்த்தினார்.

எனவே வான்முகில் வழாது பெய்வதற்கு வேதங்களில் எத்தகைய வேள்வி வரையறுக்கப் பெற்றிருக்கிறது எனக் கண்டு அம்மார்க்கத்தைப் பின்பற்றி நலம் பெற வேண்டியது நம் கடமையாகிறது.

**இருக்கு வேதத்துள்**

நான்மறையுள் முதன் மறையாகிய இருக்கு வேதம் 'தீருவாஸூத்வாஸ்' என்கிற நாற்பத்திரண்டு அட்சரங்களைக் கொண்டவருண மந்திரத்தால் ஓமங்கள் செய்து மழை பெய்யுமாறு கட்டளையிடுகிறது. மேலும் மிகு மழை பெறுவதற்காக என்று அறிவிக்கிறது. ''இந்திரியங்களை வென்று மந்திரங்களை அறிந்தவன் ஆற்று நொச்சியால் உண்டான—பாலில் நனைக்கப்பெற்றதான—ஸமித்துக்களாலே மூன்று தினங்கள், மழை பெறுவதற்காக ஹோமம் செய்ய வேண்டும்.' என்பது, இப்பகுதியின் பொருளாகும். அங்ஙனம் ஹோமம் செய்யுங்கால் மேற்கண்ட ஸூக்தத்தைக் கொண்டு வேதசம் எனப்பெறும் பத்தாயிரம் ஆற்று நொச்சி ஸமித்துக்களால் செய்ய வேண்டும் என்றும் விரிவு பேசப்பெற்று உள்ளது.

இதே போல 'வீருஷ்டிப்ரதவாருண ருக்விதானம்' என்று வேறு ஒரு கல்பமும் இம்மறையுள் அறிவிக்கப்பெற்றுள்ளது.

ஆக, வேதசம் என்னும் ஆற்று நொச்சி ஸமித்துக்களைக் கொண்டு செய்யப் பெறும் ஹோமத்தால் மிகுமழை பொழியும் என்பது தெளிவாகிறது.

**யஜுர் வேதத்துள்**

யஜுர் வேதத்துள்ளும் மழை பெறுவதற்கு ஜெப ஹோமங்கள் கூறப் பெற்றுள்ளன. 'மாருதமன்' என்ற நான்கு அநுவாகம்—பிரிவுகள்—அறிவிக்கும் ஜெப ஹோமங்களைச் செய்ய மழை பொழியும் என்பது உறுதி.

**மல்குக வேத வேள்வி**

மனு ஸ்மிருதியுள் 'அக்நௌ ப்ராஸ்தாஹுதி:' என்னும் ஸ்லோகத்தில் அக்னியால் செய்யப் பெறும் ஹோமம் சூரியனிடம் சேர்ந்து அவனால் மேகம் உண்டாகி மழை பொழிகிறது எனக் கூறப் பெற்றுள்ளது.

'யக்ஞாத் பவதி பர்ஜன்ய:' என்று கீதை உபநிஷத் வாக்கியமும் வேள்விகளால் மழை உண்டாகி உலகம் தழைப்பதை உரைக்கிறது.

மந்திர சாஸ்திரங்கள் உள்ள 'பிரபஞ்ச சாரம்', 'சாரதா திலகம்' முதலிய கிரந்தங்களில் 'அவரவர்கள் உபாசிக்கும் தெய்வங்கட்குரிய மந்திரங்களாலும் வேதசம் எனப் பெறும் ஆற்று நொச்சி சமித்தைக் கொண்டு ஹோமம் செய்ய மழை பொழியும் என்று கூறப் பெற்று உள்ளது. உதாரணமாக ஸ்ரீ மகா கணபதி மந்திரத்தை ஜெபிப்பார்கள்.

'ஸிவர்ணுப்த்யை மதுநா . . .மந்த்ரீபுந: வேதஸை: ஹோமத்தில் ஒவ்வொரு திரவியத் திற்கும் பலன் சொல்லும் போது வேதசம் என்னும் ஸமித்துக்கு மழை பலனைச் சொல்லப் பெறுகின்றது.

கடந்த ஓராண்டு காலமாக மேகம்பொய்த் தமையினல் நாட்டில் வறட்சி நிலைமை தோன்றி யுள்ளது. பசி, பட்டினி, பஞ்சம் முதலிய கொடுமைகள் விரிவடைகின்றன. இப்பஞ்ச நிலைமை அதிகமானுல் பக்தி உணர்வு மங்கக் கூடும். கொலை, களவு முதலிய தீமைகள் மலிவடையலாம்; பசிக் கொடுமை எதையும் செய்யத் தூண்டும்தானே?

எனவே ஒழுக்கம், பண்பாடு, அறங்கள், கலை, கலாச்சாரம் பெருகி மன்னுயிர் தழைத்து மாநிலம் வாழ, ஆத்திக நல்லன்பர்கள் பாலில் நனைத்த ஆற்று நொச்சி சமித்துக்களைக் கொண்டு இருக்கு வேதத்தில் கூறப் பெற்றுள்ள படி 'திருவாஸுத்வாஸ்' என்ற நாற்பத்திரண்டு அட்சரங்களைக் கொண்ட மந்திரத்தைஜெபித்து ஹோமம் செய்தலையாவது, அல்லது யஜுர் வேதத்தில் 'மாருதமஸ்' என்கிற நான்கு அநு வாகங்களில் கூறப் பெற்றுள்ளபடி ஜெப ஹோ மங்கள் செய்தலையாவது, அல்லது இஷ்ட தேவதைகளுக்குரிய மந்திரங்களைக் கொண்டு வேதஸ சமித்துக்களால் ஜெப ஹோமங்களைச் செய்தலையாவது மேற்கொண்டு மழை வளம் சுரக்கச் செய்ய முயல வேண்டும்.

இக்காரியங்கள் தனியொரு மனிதரால் முடிக்கக் கூடியவை அல்ல. பலரின் ஒருங்கி ணைந்த முயற்சி அவசியமாகும். ஊர்கள் தோறும் உள்ள செல்வந்தர்கள் உதவியுடன் ஆத்திக அன்பர்கள் திரண்டு மேற்கூறிய ஜெப ஹோமகங்களைச் செய்யின் பலன் பெறுதல் உறுதியாகும். நிதி மிகுந்தவர், சமய நிறுவனங் களின் தலைவர்கள், ஆத்திக சங்கங்கள்; இந்நன் முயற்சியில் விரைந்து ஈடுபடச் செந்திலாண் டவன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

''வான்முகில் வழாது பெய்க;
மலிவளம் சுரக்க; மன்னன்
கோன்முறை அரசு செய்க;
குறைவிலாது உயிர்கள் வாழ்க;
நான்மறை அறங்கள் ஓங்க;
நற்றவம் வேள்வி மல்க ;
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகம் எல்லாம்.''

—கந்த புராணம்


# அருள்திரு
# சாலைக்குமாரசுவாமி திருக்கோயில்
## திருநெல்வேலி சந்திப்பு

திக்கெலாம் புகழும் தென் தமிழ்நாட்டின்கண் நெல்லையம்பதியில் பாளையஞ் சாலையில் அமைந்துள்ள இத்திருக்கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் கந்தசட்டி திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறும். இக் கோயிலில் குடி கொண்டுள்ள முருகனின் அருளைப் பெற நாளும் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் வந்து இறைவனை வணங்கிச் செல்லுகிறார்கள். இத்திருக்கோயிலுக்கு ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 50,000/- வரை வருமானம் வருகின்றது. மாதக் கார்த்திகை தினத்தன்று சிறப்பு அபிஷேகமும், அலங்காரமும், ஒவ்வொரு திங்கள், வெள்ளிக் கிழமைகளில் சந்தன, விபூதிக் காப்பும் சிறப்பாக நடைபெறும். பக்தர்கள் திரளாக வந்து குமரனின் அருள்பெற்றுக் காணிக்கை செலுத்தக் கேட்டுக் கொள்கிறோம்.

**நிர்வாக அதிகாரி.**



# ஆணவாசுரன்

திரு. டி. ஆர். சுப்பிரமணியன்,
திருச்செந்தூர்

''இடிக்குந்து ணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்?''

தான் தவறு செய்தவிடத்துத் தனது தவறைச் சுட்டிக் காட்ட வல்ல துணைவரைப் பெற்றவரை யாராலும் கெடுக்க முடியாது என்ற திருவள்ளுவர் கூற்று, சூரபன்மன் வாழ்வில் பொய்த்து விட்டது என்றுதான் கூற வேண்டும். சூரபன்மன் சபையிலே இடித்துக் கூறும் துணையார் பலர் இருந்தனர். இருந்தும் கெட்டான் சூரன். இடித்துக் கூறும் துணையாரையும் அடக்கி அவனைக் கெடுத்தது—ஆணவம்.

''பொருள் சேர்ப்பதில் என்னை எவன் மிஞ்ச முடியும்?'' இது ஓர் ஆணவம். 'என்னை எவனல் அறிவில் வெல்ல முடியும்?' இது ஓர் ஆணவம். 'என்னைவிட வலிமை யுடையவன் எவன்?' இது ஓர் ஆணவம். ஆணவமே தலையாய எதிரி. ஆணவத்தைக் கிள்ளி யெறிந்திட வேண்டும். இல்லையெனில் அது நம்மை நசுக்கி விடும்.

பெறுதற்கரிய வரங்கள் பலவும்பெற்றவன் சூரபன்மன். ஆனல் அந்த வரங்கள் அவனைக் காக்கவில்லை. காரணம், அவனது ஆணவம்!

சூரபன்மனை அழிவிலிருந்து காக்க முனைகிருர் வீரபாகுத் தேவர். 'சூரபன்மா, தேவர்களை வேத நெறிக்குப் புறம்பாக நீ சிறையில் வைத்துள்ளாய். இது மாபெரும் குற்றம். திருந்தி விடு. திருந்தா விட்டால் முருகப் பெருமானல் நீ அழிந்துபடுவது திண்ணம்' என்கிருர். சூரபன்மனின் வலிமை என்ன? கேட்பானு வீரபாகுவின் புத்திமதியை? கேட்கத்தான் விடுமா அவனது ஆணவம்?

'மேலை ஆயிரத் தெட்டெனும்
அண்டமும் வென்றே
ஏலு கின்றதோர் தனியிறை
ஆகிய எனக்குக்
கோல வாஎல்எயிறு இன்னமும்
தோன்றிலாக் குதலைப்
பாலனே கொலாம் இனையன
புந்திகள் பகர்வான்?''

என்று சூரபதுமன் கர்ச்சிக்கிருன். நான் ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கும் தலைவன். பல் முளைக்காத பாலகனு எனக்குப் புத்தி சொல்ல ஆள் அனுப்புவது? என்று தருக்குற்றுப் பேசுகிருன்.

வீரபாகுத் தேவர் தான் பகைவனின் தூதன்! சிங்கமுகன் உடன் பிறந்த தம்பி யாயிற்றே. அவன் பேச்சையாவது கேட்டிருக்கலாம். சூரபன்மனு கேட்பான்? கேட்கவிடாது அவனது ஆணவம். ''அண்ணு! முருகன் வேதங்கள் கூட அறிந்து கொள்ள முடியாத முதற் பொருள். தேவர்களை விடுதலை செய்து அழியாமலிருக்கவழி தேடிக்கொள்'' என்கிருன் சிங்கமுகாசுரன். 'நேற்றைப் பாலனையோ பரம் பொருள் என நினைத்தாய்' என்று சூரன் இகழ்கின்ருன்.

'நாம் தேவர்களைச் சிறை செய்தது பாவம். முருகன் முழு முதற்கடவுள்' என்று எடுத்துரைக்கிருன். 'முருகனின் ஆற்றலைப் பற்றி என்னிடம் புகழ்ந்து பேசுமளவிற்கு உனக்கு யார் போதனை செய்தது, சொல் அவர்களைக் கொல்கிறேன்' என்று வெகுண்டெழுகிருன் சூரன்.

இரணியனுக்குப் பின் பானுகோபனும் உண்மை அறிகிருன். 'அப்பா, முருகன் நினைத்தால் அண்டங்கள் அனைத்தையும் அழிப்பான். தேவரைச் சிறை விடுத்து உய்வு பெறுவோம்' என்கிருன். சூரனுக்குத்தான் ஆணவத்தால் அறிவு மங்கி விட்டதே. பெற்ற பிள்ளையின் பேச்சும் வேம்பாகக் கசந்தது. 'உயிரை வேண்டுமானுலும் விடுவேன். பணிய மாட்டேன். நான் சூரன். சூரத் தனத்தை விட மாட்டேன்'. என்று வீராப்புப் பேசுகிருன்.

தூதன் இடித்துரைத்தான்; தம்பி எடுத்துக் கூறினன்; பிள்ளைகளும் கூறினர்; ஆனுலும் ஆணவத்தின் வயப்பட்ட சூரபன்மனை அழிவிலிருந்து யாராலும் காக்க முடியவில்லை. ஆகவே தான் ஆணவத்தை 'மலம்' என்றனர் ஞானிகள்.

செந்தூர் முருகன் நமது ஆணவ மலத்தை நீக்கி அருளட்டும்.

*

# அருள்திரு வைகுண்டபதி திருக்கோயில், தூத்துக்குடி.

## திருநெல்வேலி மாவட்டம்

தல வரலாறு

அரியும் சிவனும் ஒன்றே என்ற அமைப்பில் இந்தத் திருமந்திரநகர் என்ற தூத்துக்குடியில் சிவாலயத்தை ஒட்டியே மேற்புறம் பெருமாள் சந்நிதியாகிய ஸ்ரீவைகுண்டபதி திருக்கோயில் அமைந்துள்ளது. திருச்செந்தூரிலிருந்து வடக்கே 24-வது மைல் தொலேவில் இராமேசுவரம் செல்லும் சாலேயில் இந்தத் திருத்தலம் அமைந்துள்ளது. அருள்மிகு பெருமாள் நெல்லி மரத்தடியில் சிவ பூசை செய்ததான சம்பிரதாயத்தில் கார்த்திகை மாதத்தில் இந்த விழாவை முன்னிட்டு மக்கள் பெருவெள்ளமாக பெருமாளேச் சுற்றி வணங்கி மாதக் கடைசியில் அருகாமையில் அமைந்துள்ள சிவன் கோவில் நந்தவனத்திலுள்ள நெல்லி மரத்தடியில் பூசை செய்து பிரசாதங்கள் பல படைத்து வழிபட்டு வருகின்ருர்கள். இராமேசவரத்தில் இராமபிரான் சிவ பூசை செய்ததை முன்னிட்டு இவ்விடம் அருகாமையிலுள்ள சிவன் கோவிலில் சங்கர ராமேஸ்வரமும், பாகம் பிரியாளும் எழுந்தருளியுள்ளார்கள். இவ்வழியே இராமேசுவரம் செல்லும் பக்தர்கள் இந்நகரில் அரியும், சிவனும் ஒரே தலத்தில் அமைந்துள்ள எம்பெருமானேத் தரிசித்து வழிபட்டு வருகிருர்கள்.

**எஸ். அப்பாவுத் தேவர்,**
**கே. எஸ். கந்தசாமி,**
அறங்காவலர்கள்.

**எஸ். சுந்தரலிங்கம், B.Com , F.C,A.,**
தலேவர், அறங்காவலர் குழு.

# அருள்திரு சங்கரராமேசுவரர் திருக்கோயில்

## தூத்துக்குடி (திருநெல்வேலி மாவட்டம்)

தலவரலாறு :—

எல்லாவற்றையும் கடந்த பரம்பொருளாகிய இறைவன் உலகத்திலுள்ள பல உயிர்களும் துன்பம் நீங்கி இன்பம் பெற்று உய்யும் வண்ணம் தன் கடந்த நிலேயான அருவநிலேயிலிருந்து இறங்கி இவ்வுலகத்தில் ஆங்காங்குள்ள பல தலங்களில் உருவத் திருமேனி கொண்டு எழுந்தருளிய தலங்களில் மிகச் சிறந்தது இந்நகர். முருகன் திருமணம் கண்டு களிக்க அம்மையப்பர் இங்கு வந்து சோலேயில் தங்கி, முருகன் தன்னுடைய அம்மை, அப்பனே வணங்கி மந்திரம் ஓதித் தர வேண்டுமென்று கேட்கக் கடல் அலே ஒலியும், பனே ஓலே ஓசையும், குயவன் மண் பாண்டம் தட்டும் சப்தமும் இடையூருக இருந்ததை அமர்த்தி ஆண்டவன் அம்மைக்கு ஐந்தெழுத்தாகிய மூல மந்திரத்தை உபதேசித்தருளியதனுல் ''திரு மந்திர நகர்'' எனப் பெயர் பெற்றது, தூத்துக்குடி என்னும் இத்திருத்தலம். இத்திருத் தலத்தில் காசிபமுனிவர், புண்ணிய தீர்த்தமாடி இருந்த காலத்துக் குணமெனும் குன்றேறி நின்ற முனிவர்களான கௌசிகர், கௌதமர் பரத்துவாசர், அத்திரி முதலியவர்கள் இந்தச் சோலேயில் ஒரு சிவலிங்கம் ஸ்தாபிக்கக் கேட்டுக் கொண்டதனுல் காசிபரும் இசைந்து சிவலிங்கம் ஸ்தாபிதம் செய்து அனேவரும் வழிபட்ட புண்ணிய மூர்த்தியும், பாண்டியன் என்னும் குறுநில மன்னன் பூசித்து மக்கட்பேறு பெற்று அவராலே அமையப் பெற்ற இந்தத் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ''ஸ்ரீபாகம் பிரியாள் சமேத ஸ்ரீ சங்கரராமேஸ்வரரை'' மக்கள் அனேவரும் வந்து தரிசித்துப் பேரின்ப மடையுமாறு வேண்டுகின்ருேம்.

இத்திருத்தலம் திருச்செந்தூரிலிருந்து வடக்கே சுமார் 31 கி.மீ. தொலேவில் உள்ளது.

**ஜே. சொக்கலிங்கம்,**
நிர்வாக அதிகாரி.

**கே. ராமசாமி நாடார்,**
அறங்காவலர் குழுத்தலேவர்.

**ஏ. வி. அருணுசலம் பிள்ளே, ஓ. வி. இராசா, எம். சி.,**
**எஸ். அப்பாவு தேவர், எஸ். செல்லேயா.**
அறங்காவலர்கள்.

# நினைப்பது நிறைவேறும்

கே. எஸ். ஜெகன்னுதன்

இயல்பாகவே ஆசைக்கும் சுகத்திற்கும் ஆட்பட்டவன் மனிதன்.

அவன் விரும்பும் ஆசையும், சுகமும் வாழ்க்கையில் அவனுக்குப் பிடிப்பை ஏற்படுத்துகிறது.

வாழ்க்கையில் மனிதனுக்குப் பிடிப்பு ஏற்படும்போது நம்பிக்கை மிகுந்தவனுகிருன்.

நம்பிக்கைதான் மனிதனுடைய இகவாழ்வுக்கு வண்டியின் அச்சாணி போன்றதாக அமைகிறது.

அவன் நம்பிக்கையை இழக்கும்போது தன்னைத் தானே மாய்த்துக் கொள்ளும் அளவுக்கு மன வலிமையை இழந்துவிடுகிருன்.

மன வலிமையை இழக்காது தோல்விகளைத் தாங்கிக் கொண்டு மீண்டும் வாழவேண்டும் என்ற துடிப்போடு இயங்குகின்றவர்களும் உண்டு.

இப்படிப்பட்ட இரு சாரார்களுமே வாழ்க்கை வாழ்வதற்கே என்ற அடிப்படைத் தத்துவத்தைப் புரிந்து கொண்டவர்களில்லை.

இந்த அடிப்படைத் தத்துவத்தைப் புரிந்து கொண்டால் இக வாழ்வில் வெற்றியைக் கண்டு பெருமிதம் அடையாமலும், தோல்வியைக் கண்டு துவளாமலும் மிதமாக வாழக் கற்றுக் கொள்வான்.

மிதமான வாழ்க்கை சீராகச் செல்லும்.
சீராகச் செல்லும் வாழ்வில் துன்பமில்லை.
துன்பமில்லாத வாழ்வில் தோல்வியில்லை.
தோல்வி இல்லாத வாழ்வு இன்பமயமாகும்.

இந்த இன்பமயமான வாழ்வைப் பெறுவதற்கு மனிதன் மன உறுதியுடன் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

மன உறுதியுடன் இருக்க ஞான வாழ்க்கையைப் பின்பற்ற வேண்டும்.

ஞான வாழ்க்கையை அவன் பின்பற்றத் தொடங்கும் போது ஒரு கையால் உலகத்தையும் மறு கையால் இறைவனையும் பற்றுகிருன்.

பேரின்பத்தையும், சிற்றின்பத்தையும் சேர்த்துப் பற்றவும் அவன் எப்போதும் முயல்கிருன்.

உலக இன்பங்களில் உள்ள இனிமையினுல் அவனுக்கு அவைகளை விட மனம் வருவதில்லை.

அவைகளை விடுவதினுல் தன் வாழ்வே பாழாகி விடும் எனத் தோன்றுகிறது.

இப்படிப்பட்ட எண்ணங்கள் மனதிலே எழுந்து அந்த எண்ணங்கள் தன்னையே வஞ்சிப்பதைப் பாவம் அவன் உணர்வதில்லை.

உணராத காரணத்தால்தான் இவன் தன் கண்களை மூடிக்கொண்டு இறைவனது உண்மைகளை அறியாது நிற்கிருன்.

எவன் ஒருவன் இறைவனது உண்மைகளை, அடியார்க்கு அருளும் வள்ளல் தன்மையை அறிந்து இறைவனை அடி தொழுகிருனே அவன் இறைவனின் அன்புக்கு இலக்காகிருன்.

உலகப் பொருள்களால் இன்பம் அடையலாம் என்ற தவருன கருத்து நீங்க வேண்டும்.

அது கானல் நீரைக் குடித்துத் தாகத்தைத் தீர்க்க நினைப்பது என்கின்ற எண்ணம் மனத்தில் உதயமாக வேண்டும்.

இப்படிப்பட்ட எண்ணம் மனதில் உதயமாகும் போது, ''எல்லாம் உன் செயல்'', 'நீயே கதி; அடியேன் உன் அடைக்கலம்; காத்தருள்க'' என்று ஒருவன் உண்மையாக இறைவனிடத்தில் சரணடைவான்.

அவன் சரணடையும்போது இறைவன் அவனை அவரது அன்புக்கும் அருளுக்கும் உகந்தவனுக்கிக் கொள்கிருர்.

அவனது அருளே நம்மை ஆட்டி வைக்கும்.

அதை உணராது போக முடியாது.

பிறவிக் கடலில் நாம் மூழ்கும்போது அவர் நம்மைக் கைதூக்கி விட்டார்.

இந்த நினைவு நெஞ்சில் எழும்.
அப்போது அன்பு பெருகும்.
நன்றி நம்மை உயர்த்திக் காட்டும்.

இப்போது இறைவனை எப்போது நினைக்க வேண்டும் என்ற எண்ணத்தைப் பிறர் கூற வேண்டும் என்ற அவசியம் எதற்காக வருகிறது?

இறைவனை இதயத்துள் வைத்திருக்கும் போது எப்படி மறந்திட முடியும்.

இதயத்துள் இறைவன் இருக்கின்ருன் என்ற உணர்வு புதிய உற்சாகத்தை ஏற்படுத்துகிறது.

நாம் எண்ணுவதெல்லாம் நடக்கும்என்ற நம்பிக்கை எழுகிறது.

உத்வேகமாக இறைவனிடத்தே அன்பு கொள்ளச் செய்கிறது, நினைப்பதெல்லாம் நிறைவேறும் என்கின்ற எண்ணம். *

# இதற்குமேல் ஒரு பணி இருக்க முடியாது

அருள்மொழியரசு
திருமுருக கிருபானந்தவாரியார்

இறைவன் கருணையே வடிவானவன். இறைவன் வேறு கருணை வேறு அல்ல.

இறைவனே அம்மா அப்பா இல்லாத அனாதை தான்!

அந்த அனாதைக்கு முன்பு, பெரியோர்கள் கோயில் வைத்தார்கள்.

இப்போது அம்மா அப்பா இல்லாத அனாதைச் சிறுவர்களுக்கு இவர்கள் கோயில் வைக்கிறார்கள்.

அந்த அடிப்படையில் இரண்டும் ஒரு வேலை தான்.

தனமும், மனமும் படைத்தவர்கள் அனாதைக் குழந்தைகளுக்கு ஆதரவு காட்ட வேண்டும். ஏழைச் சிறுவர்களுக்கு ஏதாவது நன்மை செய்கிறவர்கள், அவர்களுக்கு ஒரு பரிசு கொடுத்தால், அது ஒரு பவுனுக்குச் சமமாகும்!

அனாதைக் குழந்தைகளை நினைத்தால் நெஞ்சுருகும். அனாதைகள் இருக்கும் வரை நாட்டிற்குச் சேமம் வராது. ஊரார் வீட்டுக் குழந்தையை ஊட்டி வளர்த்தால்தான் தன் பிள்ளை தானாக வளரும்.

தனம் உள்ளவர்கள் இந்தப் பணியைச் செய்யாததால் டாக்டர் கலைஞர் இந்தப் பணியைச் செய்கிறார்.

இந்த அருமையான திட்டம் நாட்டுக்கு இன்றியமையாதது.

திருவள்ளுவர் கனவை நினைவாக்கக் கூடிய சிலருக்கு, கருணை கொஞ்சமாக இருக்கிறது.

சிலர் கருணையின் நிதியாக இருக்கிறார்கள். கருணை கொஞ்சமாக இருப்பவர்களால் எதுவும் செய்ய முடியாது.

கருணை நிதியாக இருந்தால்தான்—''கருணாநிதி''யாக இருந்தால்தான்—இதைச் செய்ய முடியும்.

நாடு இனி நன்றாக இருக்கும்.

படிப்பில், சாதியில், செல்வத்தில் பெரியவனாக இருக்க முடியாது.

தனக்காக வாழ்கிறவன் சிறியவன், பிறருக்காக வாழ்கிறவன்தான் பெரியவன்! நீண்ட காலமாக நம் முதல்வர் இதுபற்றிச் சிந்தனை செய்தார்.

முதல்வரின் மற்ற திட்டங்களைப்போலவே இத்திட்டமும் மிகச் சிறந்ததாக இருக்கிறது. தாய்—தந்தையற்ற, திக்கில்லாத குழந்தைகளுக்கு வாழ்வு தரும் இந்தச் செயல் முடி மணி போன்றதாகும். இது தேசத்திற்குச் செய்த தொண்டு ஆகும்.

இந்தப் பணி ரொம்பவும் உயர்ந்த பணி. இதற்கு மேற்பட்ட ஒரு பணி இருக்க முடியாது. இந்தப் பணியை அரசே செய்வதென்றில்லாமல் கோயில்களிலும் இணைத்திருப்பது பாராட்டத் தக்கது.

கருணை இல்லத்திலுள்ள குழந்தைகளைப் பார்த்தேன். அவர்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள். தனியார் இல்லங்களில் ஓரளவுதான் நன்மை செய்ய முடியும். ஆனால் அரசாங்கம் பெரிய அளவில் இந்த நன்மையைச் செய்கிறது.

இது போன்ற நல்ல திருத்தொண்டை எல்லோரும் செய்ய வேண்டும். அரசாங்கம் செய்வதைப் பற்றி எல்லோருக்கும் எடுத்துச்சொல்ல வேண்டும்.

திக்கற்ற குழந்தைகளே தெய்வக் கோயில்களாம். அதற்கு இப்போது திருத்தொண்டு செய்கிறார்கள். கோயில் பணத்திலிருந்து வாண வேடிக்கைகளும் வீண் செலவும் செய்யப் படுகிறது. அதை இதுபோன்ற நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டும்.

முதல்வர் செய்யும் இது போன்ற நல்ல காரியங்களைப் பார்த்து, ''நல்ல காரியம் செய்தாரப்பா முதல்வர்'' என்று எம்பெருமானே மகிழ்வார். இப்படிப்பட்ட அற்புதமானசேவை இந்த நாட்டுக்குத் தேவை. முதல்வர் கலைஞர் அதைச் செய்ததால் எனது பிரத்தியேகமான அன்பைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

[சென்னைத் திருமயிலைக் கபாலீசுவரர் திருக்கோயிலின் சார்பில் அமைக்கப் பெற்றுள்ள ''கருணை இல்லம்'' நமது தமிழக முதல்வர் தமிழவேள் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களால், 2–6–75 அன்று திறந்து வைக்கப்பெற்றபோது, அவ்விழாவிற் கலந்து கொண்டு, 'அருண்மொழியரசு' திருமுருக. கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவர்கள் நிகழ்த்திய பாராட்டுச் சிறப்புரை.]

—ஆசிரியர்.

# சித்தாந்த சைவம்

திரு. சி. அருணைவடிவேல் முதலியார்
தருமபுரம்

### சைவத்தின் சிறப்பு

மக்களை மாக்கள் நிலையினின்றும் வேறுபடுத்தி மக்களாகச் செய்வது சமயமே. இது, மக்களது தரத்திற்கு ஏற்பப் பலவாகி விளங்குகின்றது. அவை அனைத்திலும் தலையாயதுசைவ சமயமே. ''சைவ சமயமே சமயம்'' என்றும், ''சைவத்தின் மேற் சமயம் வேறிலை ; அதில் சார்சிவமாம் தெய்வத்தின் மேல் தெய்வம் இல்லெனும் நான்மறைச் செம்பொருள் வாய்மை'' என்றும் எழுந்த ஆன்றோர் வாக்குகள் இதனை நன்கு வலியுறுத்துகின்றன.

### சைவத்தின் வகை

''சைவம் சிவத்தொடு சம்பந்த மாவது'' என்ற திருமூலர் வாக்குப்படி சிவபரம் பொருளை வழிபடும் சமயம் எதுவும் சைவ சமயமே. எனினும், வழிபாடு முதலிய ஒழுக்கங்களிலும், தத்துவக் கொள்கையிலும் சைவத்திற்கு உள்ளேயும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவ்வேறுபாடுகளும் மக்களது தரத்தால் அமைந்தனவே. இவை அனைத்திற்கும் நூல்கள் உள்ளன. அந்நூல்களுள் சிறந்து விளங்குவன, 'திவ்வியாகமங்கள்' எனப்படுகின்ற சைவாகமங்கள். இவை 'காமிகம்' முதல் 'வாதுளம்' ஈறாய் இருபத்தெட்டாகச் சொல்லப்படும். இவற்றைச் சார்ந்து 'உபாகமங்கள்' என்று இருநூற்றேழு உள்ளன. இவை அனைத்தும் உயரிய ஒழுக்கங்களை வகுத்து, உயரிய தத்துவக் கொள்கையைக் கூறுவன. அதனால் இவற்றைச் 'சுரௌதம்' (சுருதி வழியன) என ஆன்றோர் போற்றுவர். இத்தகைய சிறப்பு இல்லாத நூல்களை 'அசுரௌதம்'' (சுருதிக்கு ஒவ்வாதவை) என அவர் விலக்குவர். அவைகட்கு 'தந்திரங்கள்' என்பது பெயர். இவற்றின் வழியவாயசமயங்கள் 'தாந்திரிகம்' எனப்படும்.

### அகப்புறச் சமயங்கள்

சிவபெருமானைக் கடவுளாகக் கொண்ட போதிலும், உயரிய ஒழுக்கமும், தத்துவக் கொள்கையும் இல்லாதவை, 'பாசுபதம், மாவிரதம், காபாலிகம், வைரவம்' முதலியவை. அதனால் இவை, 'அகப்புறச் சமயங்கள்' எனப் புறச்சமயங்களோடு ஒருபுடை சார்த்தி விலக்கப்படுகின்றன.

சைவாகமங்களின் வழி நிற்கும் சமயங்களே 'சைவம்' என்று சிறப்பித்துச் சொல்லப்படும். எனினும், இவைகட்குள்ளே தத்துவக் கொள்கையில் சிறிது சிறிது வேறுபாடுகள் உள.

### ஐக்கிய வாத சைவம்

சைவாகமங்கள், ''உண்மைப் பொருள்கள் ஆறு; அவை, பதி, பசு, ஆணவம், கன்மம், விந்து (சுத்த மாயை), மாயை (அசுத்த மாயை) என்பன'' எனக் கூறும். இந்த ஆறு பொருள்களுள் 'ஆணவம்' என்ற ஒன்றை ஒரு தனிப் பொருளாகக் கொள்ளாமல், 'ஞானத்தினது இன்மையே அஞ்ஞானம்—ஆணவம்'' எனக் கூறுவது, 'ஐக்கிய வாத சைவம்' என்கின்ற ஒன்று. எல்லா அனத்தங்கட்கும் மூலமாகிய 'ஆணவம்' என்ற ஒரு பெருந்தீமைப் பொருளை 'இல்லை என மறுத்தலால் இதனை முன்னர்க் கூறிய அகப்புறச் சமயங்களோடே சேர்த்து எண்ணுகின்றனர் அறிஞர்.

ஐக்கிய வாத சைவர் மேற்கூறியவாறு தத்துவக் கொள்கையில் வேறுபடுதலோடு ஒழுக்க முறையிலும் வேறுபடுகின்றனர். முதலாவதாகச் சிவலிங்கத்தைத் 'திருநீறு, உருத்திராக்கம்' என்னும் சிவ சின்னங்களைப் போல உடம்பில் தரித்திருத்தல், திருநீறு உருத்திராக்கங்களாவது சில வேளைகளில் உடம்பில் இல்லாமல் இருக்கலாம்; சிவலிங்கம் ஒரு நொடி நேரமும் உடம்பில் இல்லாதிருத்தல் கூடாது. இந்த 'அங்கலிங்க ஐக்கியம்' அவர்கட்கு முதன்மையானது. அதனால் இலிங்கத்தை இடக்கையில் வைத்தே இவர்கள் பூசை செய்வர். 'சிவனைத் தவிரப் பிற கடவுளரை வழிபடுதல் கூடாது.'' என்பதை இவர்கள் மிக அதிகமாகக்கடைப்பிடிப்பர். சிவ பூசையில் பரிவாரங்களையே கொள்வதில்லை. சிவாலயங்களிலும் பிற தெய்வங்களை—முதன்மையாக விட்டுணு மூர்த்தியை வழிபடுதல் இல்லை. இக்காரணங்களால் இவர்கள் தங்களை 'வீரசைவர்' எனக் கூறி, ஆகமங்களில் வீராகமம் தங்களுக்குச் சிறந்தது என்கின்றனர். சிவ மூர்த்திகளில் வீரபத்திரரை முதன்மையாக வணங்குதல் இவர்களது வழக்கம்.

வீர சைவம் முதற்கண் தோன்றியது கன்னட தேயத்தில். ஆகவே, அந்நாட்டு வீர சைவமே மேற்கூறிய வகைகளை எல்லாம் மிக உறுதியாகப் பின்பற்றுவது. சிவலிங்க தாரணம் செய்து கொள்வதை விரும்பிய வகையில் தமிழ் நாட்டிலும் வீர சைவ மடங்கள் தோன்றின. தமிழ்நாட்டு வீர சைவம், கன்னட நாட்டு வீர சைவத்தினின்றும் சிறிது வேறுபட்டே காணப்படுகின்றது.

### ஆகமச் சமயங்கள்

ஐக்கிய வாத சைவம் தவிர, வேறு சில சைவங்களும் உள்ளன. அவை தத்துவக் கொள்

கையில் வேறுபடாமல், முக்தி நிலையில் மட்டும் கருத்து வேறுபாடு கொள்கின்றன.

### 1. பாடாண வாத சைவம்

அவைகளைப் பின்பற்றுவோரில் ஒருசாரார், 'முக்தியில் ஆன்மா எந்த ஒன்றையும் அறிதலோ அனுபவித்தலோ இன்றிப் பாடாணம் போல் கிடக்கும்'' என்பர். அதனால் இவர்கள் 'பாடாண வாத சைவர்' எனப்படுகின்றனர். பாடாணம்—கல்.

### 2. பேத வாத சைவம்

மற்றொரு சாரார், ''இரச குளிகையால் களிம்பு முற்றிலும் நீங்கப் பெற்ற பின்னர்ச் செம்பு பொன்னேயாய் மாற்றொளி பெற்றுத் திகழ்தல் போல, முக்தியில் ஆன்மா சிவனது அருளால் மலம் முழுவதும் நீங்கப் பெற்றுச் சிவமாந் தன்மையைப் பெற்று, நித்த சுத்த வத்துவாய் வேறே நிற்கும்; சிவத்தோடு ஒன்றுதல் இல்லை'' என்பர். ஆன்மா முக்தியில் வேறாகவே இருக்கும் என்பதனால் இவர்கள், 'பேத வாத சைவர்' எனப்படுகின்றனர்.

### 3. சிவ சமவாத சைவம்

மற்றொரு சாரார், ''வேட்டுவன் என்னும் வண்டினால் எடுக்கப்பட்ட புழு பின்பு அவ்வேட்டுவனேயாய் அது செய்யும் செயலெல்லாம் செய்தல் போலச் சிவனால் ஆட்கொள்ளப்பட்ட ஆன்மா பின்பு சிவனேயாய் முக்தியில் சிவனைப் போலவே ஐந்தொழில்களைச் செய்து நிற்கும்'' என்பர். 'சிவனோடு சமமாய் ஆன்மா ஐந்தொழில் செய்யும்' என்பதனால் இவர்கள், 'சிவ சமவாத சைவர்' எனப்படுகின்றனர்.

### 4. சிவ சங்கிராந்த வாத சைவம்

மற்றொரு சாரார், ''கண்ணாடி மாசு நீங்கப் பெற்ற பின்னர் அடுத்துள்ள பொருளின்உருவம் தன்னுள் இனிது விளங்க நிற்றல் போல, முக்தியில் ஆன்மா மலம் நீங்கித் தூய்மை பெற்றுவிடுதலால் சிவனது தன்மை முழுவதும் தன்னுள் இனிது விளங்கத் தனது கரணங்கள் பசு கரணங்களாய் நில்லாது சிவகரணமாய் மாறிவிடச் சிவமேயாய் நிற்கும்'' என்பர். சிவனது தன்மை ஆன்மாவில் சங்கிரமித்தலோடு (கலத்தலோடு) நிற்றலால் இவர்கள் 'சிவ சங்கிராந்த வாத சைவர்' எனப்படுகின்றனர்.

### 5. ஈசுர அவிகார வாத சைவம்

மற்றொரு சாரார், 'மல மறைப்பினால் உண்டான அஞ்ஞானம் காரணமாகப் பிறப்பு இறப்புக்களில் அகப்பட்டு உழன்ற ஆன்மா, மலம் பரிபாகம் உற்ற பொழுது சிவன் ஞானத்தைக் கொடுக்க, இருளில் கிடந்தவனுக்கு விளக்குக் கிடைத்தது போல் ஆகி, வெயிலில் நின்றவன் நீரையும், நிழலையும் தேடி அடைதல் போலச் சாதனங்களால் சிவனை அடைந்து முக்தியின்பத்தைப் பெறும்'' என்பர். 'ஈசுரன் இருந்தபடியே விகாரம் இன்றியிருக்க, ஆன்மாவே அவனைச் சென்று அடையும்' என்று கூறுவதால் இவர்கள், 'ஈசுர அவிகார வாத சைவர்'' எனப்படுகின்றனர்.

### 6. சிவாத்துவித சைவம்

மற்றொரு சாரார், ஏகான்ம வாதிகளைப் போலவே 'அத்துவிதம்' என்பதற்கு 'ஒன்று' என்றே பொருள் கொண்டு, 'உலகமும், உயிர்களும் சிவனில் வேறல்லர்; சிவனது சக்தியே ஒரு கூற்றில் உலக மாயும், உயிர்களாயும் பரிணமிக்கும்; இதனை உணர்ந்து உயிர் தன்னை வேறாகக் கருதி நிற்பதே பந்தம். பரிபாகத்தால் உயிர் தன்னைச் சிவமாக உணர்ந்து நிற்பதே முத்தி'' என்பர். ''சிவன் அத்துவிதம்—தனக்கு வேறாய் யாதொரு பொருளும் இல்லாதவன்'' என்றும், சிவனது அத்துவிதத் தன்மையை உணர்தலே முத்தி என்றும் கூறுதலால் இவர்கள் 'சிவாத்துவித சைவர்' எனப்படுகின்றனர். மேலும் இவர்கள், 'உலகிற்கு நிமித்த காரணனாய் உள்ள சிவன் உபாதான (முதற்) காரணமாகவும் நின்று பரிணமிக்கின்றான்' எனக் கூறுதலால், 'நிமித்த காரண பரிணாம வாத சைவர்' எனவும் சொல்லப்படுகின்றனர்.

பாடாண வாத சைவம் முதலாகக் கூறிய ஆறும் தத்துவக் கொள்கையில் வேறுபடாமல் முத்திநிலை அத்துவித நிலை இவைகளில் மட்டுமே வேறுபடுதலால் இவை, 'அகச் சமயம்' எனப்படுகின்றன.

'சுத்த சைவம்' என்ற ஒன்றும் உண்டு. அஃது, 'ஆன்மா முத்தியில் சிவனோடு ஒன்றாய் விடுமேயன்றி, வேறாயிருத்தல் இல்லை' என்று மட்டும் கூறும். அதனால், அதை ஒரு தனிச் சைவமாக வேறுபடுத்திக் கூறுதல் பெரும்பாலும் இல்லை.

அகச் சமயிகளுங்கூட பொருளியல்பைப் பெத்தத்தில் ஒரு வகைப்படவும் முத்தியில் வேறொரு வகைப்படவும் முன்னுக்குப் பின் முரணக் கூறுதல் நுணுகி நோக்கினால் புலனாகும். அதுவன்றியும், 'முத்தி நிலை எல்லையில்லாத இன்ப அனுபவம்' என்பதை விடுத்து, அவ்வின்பத்தை இழக்கக் கூறுதலையும் காணலாம்.

### சித்தாந்த சைவம்

இவை அனைத்திற்கும் அப்பாற்பட்டதே சித்தாந்த சைவம். இதன் கொள்கையே, 'சைவ சித்தாந்தம்—சித்தாந்தம்' எனப்படுகின்றது. இது பொருளியல்புகளை முன்னர்க் கூறியதற்குப் பின்னர் மாறுபடக் கூறாமல், எங்கும், எப்பொழுதும் ஒரு பெற்றிப்படவே கூறும் சிறப்புடையது. ஏனைச் சமயத்தவர்கள் அங்கங்கு ஏகதேசமாகக் கண்டு கூறும் உண்மைகள் அனைத்தும் தனது கொள்கையில் அடங்க, தனது கொள்கை அவைகளில் அடங்காது நிற்கும் பெருமையுடையது.

''முத்தியிலும் மூன்று முதலும் மொழியக்கேள்:
சுத்த அனுபோகத்தைத் துய்த்தல் அணு;—மெத்த வே
இன்பங் கொடுத்தல் இறை; இத்தைவிளை வித்தல் மலம்
அன்புடனே கண்டுகொள்அப் பா.''

என்று, 'முப்பொருளும் அநாதி' என முதலிற் கூறியவாறே முடிவிலும் கூடி, முத்தியில் பெறுவானும், பேறும், பெறுவிப்பவனும் ஆகிய முப்பொருளும் கெடாதே நிலை பெற்றிருக்க, உயிர், நிரதிசய இன்பமாகிய 'பேரா, ஒழியாப் பிரிவில்லா—மறவா நினையா, அளவில்லா, மாளா இன்ப மாகடலில், (1) திளைத்திருத்தலும் அத்தகைய எல்லையில் இன்பம் இறைவனது திருவடி இன்பமே யாதலும் ஆகிய அரிய பெரிய உண்மைகளை அங்கை நெல்லிக் கனியென இனிது விளங்க உணர்த்துவது 'சித்தாந்த சைவம்' ஒன்றே. ''சைவ சமயமே சமயம்'' ''சைவத்தின் மேற் சமயம் வேறிலை'' என்றெல்லாம் சிறப்பித்துச் சொல்லப்படும் சைவம் சித்தாந்த சைவமே.

''வாழ்வெனும் மையல் விட்டு
வறுமையாம் சிறுமை தப்பித்
தாழ்வெனும் தன்மை யோடும்
சைவமாம் சமயம் சாரும்
ஊழ்பெறல் அரிது.'' (2)

என்றதும் சித்தாந்த சைவத்தைக் குறித்தே என்பது சொல்ல வேண்டுவதில்லை.

## தமிழ்நூற் சிறப்பு

இத்தகைய இச்சித்தாந்த சைவத்தின் உண்மைகள் சைவ மூலாகம உபாகமங்களிலும், பிற வட நூல்களிலும் பரந்து பட்டுக் கிடப்பினும், மெய் கண்ட சந்தானத்திலும், அதனோடு ஒத்த பிற சந்தானங்களிலும் தமிழில் தோன்றி விளங்கும் நூல்களிலேதான் ஐயந்திரிபற இனிது விளங்கி நிற்கின்றன. இந்நூல்கள் கிடைக்கப் பெறுத காரணத்தால் வடமொழியில் சைவ பாடியம் எழுதிய நீலகண்ட சிவாசாரியர் உள்ளத்தில் சித்தாந்த சைவ விருப்புடையாராயினும், சொல்லால் அதனைச் சாதிக்க மாட்டாமல், மேற்கூறிய அகச் சமயங்களில் ஒன்ருகிய சிவாத்துவித சைவத்தையே கூறி விட்டார்.

சிவஞான சித்தியார்க்கு உரை எழுதிய அறுவருள் 'ஞானப்பிரகாசர்' என்பவர் இத் தமிழ் நூல்களை உணர்ந்திருந்தும் விடாப்பிடியாகச் சிவஞான சித்தியார்க்குத் தமது சிவ சமவாத உரையையே வலியப் புகுத்தி எழுதினர். இவ்வுரையை மாதவச் சிவஞானயோகிகள் தமது மாபாடியத்திலும், தனித்த மறுப்பு நூல்களிலும் மிக விரிவாக மறுத்திருத்தலைத் தமிழுலகம் நன்கறியும். இதனை நோக்க ''சைவமாம் சமயம் சாரும் ஊழ் பெறல் அரிது'' என்ற அருணந்தி தேவரது வாக்கு எத்துணை உண்மையானது என்பது நன்கு புலனுகும்.


# அருள்திரு தியாகராஜசுவாமி திருக்கோயில்

## திருவாரூர்

தென்னாட்டிலே தொன்மை வாய்ந்த பதிகளில் திருவாரூர் மிகப் பழமையுற்ற ஊர் ஆகும். அதைப் பிருதிவித் (மண்) தலம் என்பர். இப் பெயருக்கு ஏற்ப இவ்வூரில் கோயில் கொண்டுள்ள அருவுருவத் திருமேனி தாங்கிய இறைவர் வன்மீக நாதராக (புற்றிடங் கொண்டார்) உள்ளார். இப்பெருமான் அமர்ந்துள்ள கருவறையே பூங்கோவில் எனப்படுகிறது. ''பூங்கோவில் உள்ளிருந்து போகாதிருந்தாரே'' என்பது அப்பர் சுவாமிகளின் அருள் வாக்கு.

தேவாரம் பாடிய மூவரும், மாணிக்க வாசகரும், குமரகுருபரரும், சேரமான் பெருமாள் நாயனுரும், அருணகிரியாரும் இத்தலத்தைப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

இக்கோவிலின் பரப்பு ஐந்து வேலியாகும். இக்கோவில் சிற்பக் கலையிலும், ஓவியக் கலையிலும் தலைசிறந்து விளங்குவது. இத்தலத்துக்கு மேலும் பெருமை தருவன ஐந்து வேலிப் பரப்பினையுடைய கமலாலயம் என்னும் திருக்குளமும், திருத்தேருமாகும்.

இக் கோயிலில் ஸ்ரீ கமலாம்பாள் ஆடிப்பூர உத்ஸவமும், மார்கழியில் திருவாதிரையும், பங்குனியில் உத்திர விழாவும், அதை யொட்டிய மூன்று நாட்களுக்குத் தெப்போத்ஸவமும் மிகச் சிறப்புடைய நிகழ்ச்சிகள் ஆகும்.

திரு. சோ. சுப்பையா,
நிர்வாக அதிகாரி.

## அருள்தரும் சந்தனமாரி அம்பாள் திருக்கோயில்

தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டம்

தலவரலாறு :-

எல்லைக் காவல் தெய்வமாக இந்நகர் வடக்கு எல்லையில் அருள்தரும் சந்தனமாரி அம்மன் கொலு வீற்றிருந்து இந்நகர் மக்களைக் காத்து வருகிறாள். நகர் மக்களும் சுற்றிக் கிராமங்களிலுள்ள மக்களும் பிரதி வெள்ளி செவ்வாய்க் கிழமைகளில் பெரு வெள்ள மாகக் கூடி அம்பாளை வழிபட்டு வருகிறார்கள். புரட்டாசி மாதத்தில் நவராத்திரி தசரா உற்சவம் இந்நகரில் சிறப்பாக விமரிசையாக மைசூர் தசரா உற்சவத்திற்கு ஒப்ப நடைபெறும். சித்திரை மாதம் கடைசி செவ்வாய்க் கிழமை கொண்ட உற்சவம் சிறப்பாக நடைபெறும். இந்தத் திருக்கோவிலின் நூதனக்கல் திருப்பணி 1972-ஆம் ஆண்டு செய்யப்பட்டு அம்பாளுக்கு மகா கும்பாபிஷேகமும் விமரிசையாக நடத்தப்பட்டிருக்கிறது. பக்தர்கள் அருள்தரும் சந்தனமாரி அம்பாளைத் தரிசித்து அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

ஜே. சொக்கலிங்கம்,
நிர்வாக அதிகாரி

கே. ஆர். சங்கர்,
தலைவர், அறங்காவலர் குழு

ஏ. மாணிக்க நாடார், எஸ். தபசித்தேவர், பி. வி. முத்தையா, ஏ. பாலகிருஷ்ணன்
அறங்காவலர்கள்

# அருள்தரும்
# பத்திரகாளி அம்பாள் திருக்கோயில்

தூத்துக்குடி

வரலாறு :—

அருள்தரும் பத்திரகாளி அம்பாள் திருக்கோயில், தூத்துக்குடி அருள்திரு சங்கர ராமேசுவரர் திருக்கோயிலுடன் இணைந்துள்ள காவல் சக்தி கோயிலாகும். தூத்துக்குடி மேலூர் ரயில் நிலையத்திற்கு அருகில் வடபுறமுள்ள இந்தத் திருக் கோயிலுக்கு மக்கள் பிரதி செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் கூட்டம் கூட்டமாக வந்து வழிபட்டு வருகிறார்கள். பிரதான சிவன் கோயில் உற்சவ காலங்களில் இந்த அருள்தரும் பத்திரகாளி அம்பாளைப் பிரார்த்தித்தே திருவிழா நடத்தப்படும். அம்பாளுக்கு மக்கள் மாவிளக்கேற்றி வழிபட்டு வருகிறார்கள். பக்தர்கள் இந்தத் திருக்கோயில் பத்திரகாளி அம்பாளைத் தரிசித்து அருள் பெற்றுய்யுமாறு வேண்டப் படுகிறது.

ஜே. சொக்கலிங்கம்,
அறங்காவலர்.

# உமாபதிசிவமும் சைவசித்தாந்தமும்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

**முன்னுரை :**

சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர்களில் நான்காமவராகத் திகழ்பவர், உமாபதி சிவம். ஏனேயோர் மெய்கண்ட சிவம், அருள் நந்தி சிவம், மறைஞான சம்பந்தர் என்பவர்கள் ஆவர். உமாபதி சிவம், தில்லை வாழ் அந்தணர் களின் திரு மரபைச் சேர்ந்தவர். தில்லைத்திருச் சிற்றம்பலப் பெருமானின் திருமேனியினைத் தீண்டிப் பூசிக்கும் பெருமையும், உரிமையும் பெற்றுப் பிறங்கியவர். தில்லையின் கீழ்த் திசை யில், இப்போது அண்ணுமலைப் பல்கலைக் கழகம் அமைந்துள்ள அண்ணுமலை நகரின் ஒரு பகுதி யில், பண்டு 'கொற்றவன் குடி' எனப் பெயர் பெற்று விளங்கிய இடத்தில், இவர் வாழ்ந்து வந்தார். அங்கேயே இவர்தம் சமாதிக்கோயி லும், விருத்தாசலம் குமாரதேவர் திருமடத் தின் அருளாட்சியின் மேற்பார்வையில், அமைந் துள்ளது. ஆதலின், கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர் எனவும், இவர் வழங்கப்படுவது உண்டு.

''சிற்றம் பல்மன்னும்
சின்மயராம் தில்லை நகர்க்
கொற்றங் குடிமுதலைக்
கூறும் நாள் எந்நாளோ?'' (1)

''குறைவில் அருள் ஞான முதல்
கொற்றங் குடி அடிகள்
நறைமலர்த்தாட்கு அன்பு பெற்று
நாம் இருப்பது எந்நாளோ?'' (2)

—தாயுமானவர்.

**உமாபதி சிவம் :**

இன்று தமிழ் நாட்டிற் பாரதியார், பாரதி தாசர், கம்பர், திருவள்ளுவர், இளங்கோவடி கள் முதலிய ஒரு சில சான்றேர்களை மட்டுமே, பரவலாகப் பொதுமக்கள் ஓரளவேனும் அறிந் துள்ளனர். ஆனல், உமாபதி சிவம் போன்ற சான்றேர்களைப் பற்றிப் பொதுமக்கள் பெரிதும் அறிந்திருக்க வாய்ப்பு இல்லை. அறிந்தவர்களுள் பெரும்பாலோர் அவரைத் தெய்விக நிலை எய்திச் சிறந்திருந்த ஒரு பெரியார் என்று மட்டுமே கொண்டு, அவ்வளவில் அமைந்து விடுவர்.

உமாபதி சிவம் 'வானுறையும் தெய்வத் துள் வைக்கப்படுவர்' எனினும், வையத்து வாழ் வாங்கு வாழ்ந்தவர். உயர்ந்த பல குறிக்கோள் களைக் கடைப்பிடித்து ஒழுகியவர்; சிறந்த பல உண்மைகளை விளக்கியவர்: அரிய பல நூல்களை ஆக்கி அளித்திருப்பவர்; நமக்குப் பல நலங்களை விளைவித்திருப்பவர்; நாம் பெரிதும் வியந்து நன்றியுடன் போற்றிப் பாராட்டத்தக்கவர். இங்ஙனமெல்லாம் நெஞ்சிற்கு அணியராகவும், இனியராகவும், மனித நிலையில் இவரை நாம் அறிந்துணர்ந்து பாராட்டுவதில்லை. (1)

உமாபதி சிவம், தமிழகத்தில் தோன்றி யருளிய தலைசிறந்த தத்துவ வித்தகர்களுள் ஒருவர். சங்கரர் (கி.பி. 788—820), இராமா நுசர் (கி.பி. 1017—1137), மத்வர் (கி.பி. 1199—1278) போன்ற தத்துவ உலகச் சான் ருேர்களின் வரிசையில் வைத்து எண்ணத்தக்க வர். சங்கரரும் இராமாநுசரும் மத்வரும் பிறரும் வடமொழியிற் பேருரைகள் வகுத்துப் புகழ்மிக்குத் திகழ்பவர்கள். அக்காலத்தில் தத்துவக் கருத்துக்களை வட மொழியில் எழுது வதுதான் பெரிதும் வழக்கமாகவும், நல்ல நாக ரிகப் பங்காவும் இருந்து வந்தது. உமாபதி சிவம் வடமொழியிற் பெரும் புலமை கைவந்த வர். 'பவுஷ்கரம்' என்னும் ஆகமத்திற்கு வட மொழியில் விருத்தியுரை ஒன்றை, உமாபதி சிவம் இயற்றியுள்ளனர் எனவும் தெரிகின்றது. இதனுல், உமாபதி சிவம் 'வட நூற்கடலை நிலை கண்டு உணர்ந்தவர்'; 'தென் சொற் கடல் கடந்து வடசொற்கு எல்லை தேர்ந்தவர்' என் பது தெளிவாம்.

**தாய்மொழிப் பற்று :**

ஆயினும், உமாபதி சிவாசாரியர் ஏனை யோர் பலரும் செய்தது போலப் பிரமசூத்திரம் போன்ற பெரு நூல்களுக்கு வடமொழியிற் பாஷ்யங்கள் எழுதத் தலைப்பட்டிலர். சமய தத்துவக் கருத்துக்களைத் தாய்மொழியின் வாயி லாகவே பொது மக்களுக்குப் பரப்ப வேண்டிய இன்றியமையாமைகளை, உமாபதி சிவம் நன் கினிது உணர்ந்திருந்தார். சமய உலகின் மா பெருந்தலைவர்கள் எல்லாம், தத்தம்தாய்மொழி களிலேயே தாம் கண்டுணர்ந்த சமய நுண் பொருள்களை விளக்கியருளியிருக்கக் காண்கின் ருேம். புத்தர் பிரான், தமது உபதேசங்களைப் பாலி மொழியிலேயே செய்தருளினர். மகாவீர

(1) Some of the founders of religion were astonishing individuals, but all their glory vanishes in my eyes when I cease to think of them as human beings. What impresses me and gives me hope is the growth of the mind and spirit of man, and not his being used as an agent to convey a message."

—JAWAHARLAL NEHRU,
"*The Discovery of India*".

வர்த்தமானர் தமது கருத்துக்களை அர்த்தமாகதி மொழியின் வாயிலாகவே பரப்பினர். இயேசு நாதர் அரமைக் என்னும் மொழியில் தமது அருளுரைகளை வழங்கினர். நபிகள் நாயகம் அரபி மொழியிலேயே தமது உயரிய கொள்கைகளை வெளியிட்டார். இங்ஙனமே மற்றுமுள்ள சமயத் தலைவர்கள், ஆசாரியர்கள் அனைவருமே செய்துள்ளனர். நாயன்மார்களும் ஆழ்வார்களும் தமது தாய்மொழியாகிய 'ஞானத் தமிழ் மொழியின்' வாயிலாகவே தங்கள் அருளனுபவ நலங்களை யெல்லாம் அழகுற விளக்கியிருக்கின்றனர். ஆதலின் உமாபதி சிவமும், தம் தாய் மொழியாகிய தமிழ் மொழியின் மூலமாகவே தம் கருத்துக்களைத் தெளிய வடித்தெடுத்துச் சிறப்புற நல்கியுள்ளார்.

மக்களிற் பெரும்பாலானோர் 'நீர்வழிப்படூஉம் புணை' போலக் கால வெள்ளத்தின் சுழலிற் பட்டு, அதன் போக்கிலேயே தாமும் சென்று ஒழிவர். ஆனால் மிகச் சிறந்த சான்றாண்மைப் பெருந்தலைவர்களோ, கால வெள்ளத்தின் வயப் படாமல் எதிர் நீச்சல் இட்டு, அதன் வழியில் தாம் ஓடாமல், அது தம் வழியில் தம்மைத் தொடர்ந்து ஓடி வருமாறு செய்துவிடுவர். காந்தியடிகள் போன்றசான்றோர்கள், இதற்குத் தக்க எடுத்துக் காட்டு ஆவர். இவ்வுண்மைக்கு ஏற்ப, தத்துவ ஞான வெள்ளத்தினைத் தமிழ் நாட்டில் தமிழ் மொழியின் மூலம் பெருக்கெடுத்தோடிப் பாயுமாறு செய்தருளிய பெருந்தகையார்களுள், உமாபதி சிவம் ஒருவர் என்பது நாம் உணர்ந்து போற்றுதற்கு உரியது.

**சித்தாந்த அட்டகம் :**

தமிழிற் பலதுறைக் கலைகளும் வளர வேண்டும் என நாம் பெரிதும் விரும்புகின்றோம். தமிழ்ச் சான்றோர்கள் ஒவ்வொருவரும் தத்தமக்கு ஏற்ற இனிய ஒவ்வொரு துறையிற் பணி புரிந்துள்ளனர். நமது உமாபதி சிவம் தமிழில் தத்துவத் துறையில் மிகச் சிறந்த பெரும் பணி ஆற்றியுள்ளார். ஆதலின் சைவரும், சைவ சித்தாந்தக் கொள்கையினரும் மட்டுமே யன்றி, தமிழ் நலம் போற்றும் அனைவருமே உமாபதி சிவத்தினைத் தக்காங்கு இனிது போற்றப் பெரிதும் கடப்பாடுடையர் ஆவர்.

சிவப்பிரகாசம்
திருவருட் பயன்
வினாவெண்பா
போற்றிப் பஃறொடை
கொடிக்கவி
நெஞ்சுவிடு தூது
உண்மை நெறி விளக்கம்
சங்கற்ப நிராகரணம்

என்னும் தத்துவ விளக்க நூல்கள் எட்டினை, உமாபதி சிவம் இயற்றியருளி யிருக்கின்றார். இவ்வெட்டு நூல்களையும் 'சித்தாந்த அட்டகம்' என அறிஞர்கள் பெரிதும் போற்றிக் குறிப்பிடுவர். இவைகளைப் பற்றிய சில சிறு குறிப்புக்களை மட்டுமேனும், ஈண்டுக் காண்டல், இயைபும் பொருத்தமும் உடையதாகும்.

*(1)* சிவப்பிரகாசம் : இந்தச் செந்தமிழ்ச் சிவநெறித் தத்துவ நூல், சிவஞான போதம் ஆகிய முதல் நூலுக்கும், சிவஞான சித்தியார் ஆகிய வழி நூலுக்கும், சார்பு நூல் ஆக அமைந்தது. சிவஞான போதம் போல மிகச் சுருக்கமாக அமைந்து விடாமலும், சிவஞான சித்தியார் போல மிக விரிவாக இல்லாமலும், மிக்க சுருக்கமோ மிக்க விரிவோ இல்லாத இடை நிலையில் நூறு விருத்தச் செய்யுட்களால் இயன்றுள்ளது. மெய்கண்டார் நமக்குச் சிவஞானத்தைப் போதித்த நூல் சிவஞான போதம் ; அருள்நந்திசிவம் நம்மனோர்க்குச் சிவஞானம் சித்திக்குமாறு செய்தருளிய நூல் சிவஞான சித்தியார்; உமாபதி சிவம் நம்மிடையே சிவம் பிரகாசிக்குமாறு செய்துதவிய நூல் சிவப்பிரகாசம் எனலாம்.

*(2)* திருவருட் பயன் : ஆசிரியர் திருவள்ளுவர் அருளிய திருக்குறளைப் பின்பற்றி, அதன் சொற் பொருள் யாப்பு முறை அமைதிகளைத் தழுவி, பதிமுதுநிலை உயிரவைநிலை பாசநிலை அருளதுநிலை அருளுருநிலை அறியும்நெறி உயிர்விளக்கம் இன்புறுநிலை ஐந்தெழுத்தருள் நிலை அணைந்தோர்தன்மை என்னும் பத்துத் தலைப்புக்களில், ஒவ்வொன்றற்கும் பப்பத்தாக நூறு குறள் வெண்பாக்களால் எளிமையும், இனிமையும் தெளிவும் சுருக்கமும் தோன்ற விளக்குவது.

*(3)* வினா வெண்பா : உமாபதி சிவம் தமது ஆசிரியர் ஆகிய மறைஞான சம்பந்தர்பால், தாம் தம் அறிவாராய்ச்சி ஐயப்பாடுகளை விண்ணப்பித்துக் கொள்ளும் முறையில் அமைத்துச் சிக்கலான தத்துவக் கருத்துக்களை நாம் சிந்திக்குமாறு தூண்டி, அவற்றின் சிக்கறுத்து அழகாகவும், தெளிவாகவும் பதின்மூன்று வெண்பாக்களால் விளக்குவது. வினா நிகழ்த்தும் முறையில், வெண்பாக்களால் அமைந்தமையின், வினா வெண்பா எனப் பெயர் பெற்றது.

*(4)* போற்றிப் பஃறொடை : இறைவன் உயிர்களின் மீது கொண்ட பெருங் கருணையினால் அவைகள் பாசத்திற் கட்டுண்டு கிடக்கும் கேவலம் சகலம் சுத்தம் என்னும் பல நிலைகளிலும் மலவலியைக் கெடுத்து ஆண்டு கொண்டருளும் முறையினைப் பல வகையானும் தொடுத்துக் கூறிப் போற்றும் நூல். போற்றுதல், பாதுகாத்தல். இறைவன் உயிர்களைத் தன் அருளாற் போற்றிப் பாதுகாத்தலைப் பலவகைகளில் தொடுத்துக் கூறுதலால், இது போற்றிப் பஃறொடை என்று வழங்கப்பெறும்.

*(5)* கொடிக் கவி : ஒரு சமயம் தில்லையில் திருவிழா நிகழ்ச்சியின்போது வழக்கமாகஏற்றப் படும் கொடியானது, இறைவனின் திருவருட் குறிப்பால் ஏறப்பெறாமல் தடைப்பட்ட பொழுது, அக்கொடி ஏறுமாறு இறையருளை முன்னிட்டு உமாபதி சிவம் பாடியருளிய நூல். கொடியேறுதல் குறித்துப் பாடப்பெற்ற கவியாதலின் கொடிக் கவி என்னும் பெயர்த்தாயிற்று. ''அருளாளா! நீ புரவா வையமெலாம் நீ அறியக் கட்டினேன் கோபுர வாசற் கொடி'' என்று வருதல் காணலாம். இதன்கண்,

அஞ்செழுத்து—சிவாய நம
எட்டெழுத்து—ஓம் ஆம் ஔம் சிவாய நம
ஆறெழுத்து—ஓம் நமசிவாய
நாலெழுத்து—ஓம் சிவாய
பிஞ்செழுத்து—பகாரம் ஆகிய பராசக்தி
பெருவெழுத்து—சிகாரம் ஆகிய சிவம்.

என்னும் மந்திரங்களைப் பற்றிய குறிப்புக்கள் வருதல் அறிந்து பயன் கொளற் பாலது.

(6) நெஞ்சுவிடு தூது : தலைவன் தலைவியர்களுள் ஒருவர் மற்றொருவர்பால் தமது பிரிவாற்றுப் பெருங் காதல் நிலையினைப் புலப்படுத்திக் கிளி அன்னம் மயில் குயில் வண்டு தென்றல் முதலிய பொருள்களைத் தூது சென்று வருமாறு விடுக்கும் அகப்பொருள் இலக்கண மரபு நெறி தழுவி, உமாபதி சிவம் தமது ஞானாசிரியர் ஆகிய மறைஞான சம்பந்தர்பால் தம்முடைய நெஞ்சினைத் தூது சென்று வருமாறு விடுக்கும் நிலையிற் பாடியருளியது. ஆதலின் இதற்கு 'நெஞ்சுவிடு தூது' எனப் பெயர் அமைந்தது.

(7) உண்மை நெறி விளக்கம் : சத்தி நிபாதம் என்னும் திருவருட் பதிவு நிலைகைவரப் பெற்ற உத்தமர்கள், முறை முறையே அருள் இன்பப் பேறு தலைப்படும் படிநிலைகள், தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவ ரூபம், சிவ தரிசனம், சிவ போகம், சிவயோகம் எனப் பத்து வகைப்படும். இவற்றைத் 'தச காரியம்' என்பர். 'பத்துக் கொலாம் அடியார் செய்கை தானே' என்று திருநாவுக்கரசர் பெருமான் குறிப்பிடுவது காணலாம். வீடு பேறு தலைப்படுதலில் நெறிமுறைப் படிநிலைகளின் உண்மையினை விளக்குதலால், இஃது உண்மை நெறி விளக்கம் எனப் பெயர் பெற்றது. திருவதிகை மனவாசகங் கடந்தார் இயற்றியருளிய 'உண்மை விளக்கம்' என்னும் நூலினின்று இதனைப் பிரித்தறிதற்கும் இப்பெயர் துணை புரிகின்றது.

(8) சங்கற்ப நிராகரணம் : உமாபதிசிவம் அருளிய சைவ சித்தாந்த நூல்களில் மிகவும் தலைசிறந்ததொன்று. பலவேறு தத்துவக் கொள்கைகளையும், அவற்றைப் பற்றிய பல்வேறு தத்துவ நுட்பங்களையும் ஆராய்ந்து காட்டி, அவற்றின் குறை நிறைகளைத் திட்ப நுட்பமுற விளக்கியுணர்த்தும் அறிவாராய்ச்சித் திறனில், உமாபதி சிவம் ஒப்புயர்வற்ற சிறப்பினராதலை, இந்நூலினால் நாம் நன்கு தெளியலாம். சிந்தனைத் திறனும், ஆராய்ச்சி நுண் அறிவும், இந்நாளில்தான் பெரிதும் வளர்ந்து விட்டிருப்பதாக எண்ணிக் கொண்டிருப்பவர்கள், பல நூற்றாண்டுகட்குமுன்னரே நம்முடைய பழம் பெருஞ் சான்றோர்கள் எவ்வளவு நுட்பமாகச் சிந்தனை செய்து, சிக்கலான செய்திகளிலும் தெளிவு கண்டிருக்கின்றார்கள் என்று அறிந்து மகிழ, இந்நூலைப் பயிலுதல் இன்றியமையாதது.

மாயா வாதம்
ஐக்கிய வாதம்
பாடாண வாதம்
பேத வாதம்
சிவசம வாதம்
சங்கிராந்த வாதம்
ஈசுர அவிகார வாதம்
நிமித்த காரண பரிணாம வாதம்
சைவ வாதம்

என்னும் பல்வேறு கொள்கைகளையும் சுருக்கமாக நன்கு தொகுத்துக்கூறுவதுடன், அவற்றின் பொருந்தாத் தன்மைகளையும் அழகுற விளக்கிக் காட்டுவது இந்நூல். சங்கற்பம்—கொள்கை. நிராகரணம் : மறுத்தல்.

இதன்கண் இவர் பிற சமயக் கொள்கைகளை எடுத்துக் கூறி மறுத்திருப்பது, சமயக் காழ்ப்புடைமை பற்றி யன்று; கருத்தியல் விளக்கத்தின் பொருட்டேயாகும்.(2)

பல்வேறு சமயக் கொள்கைகளைப் பற்றியும் எடுத்துக் கூறுங்கால், வடமொழியில் வாசஸ்பதி மிசிரர் என்பவரைப் போல (3), அவ்வச் சமயக் கொள்கைகளைச் சார்ந்தவர் போன்றே நலம் பெறக் கூறிச் செல்கின்றார். இத்தகைய நடுவு நிலை திறம்பா நல்லுள்ளம் கொண்டிருந்தமை, உமாபதி சிவத்தின் உயரிய பண்பு நலத்தினை உணர்த்துவதாகும்.

சர்வ சித்தாந்த சங்கிரகம்
சர்வ தர்சன சமுச்சயம்
விவேக விலாசம்
சர்வ தர்சன சங்கிரகம்

போன்ற பல சிறந்த வடமொழி நூல்களைப் போல, அவற்றிற்கு ஒரு வகையில் இணையாகத் தமிழில் அமைந்த நூல், சங்கற்ப நிராகரணம் ஆகும் என்பது மிகையாகாது. தத்துவக் கொள்கைச் சிந்தனைகளினால், அறிவுத் திறனை நுட்பமும் கூர்மையும் ஆக்கிக் கொள்ள விரும்புபவர்களுக்குச், சங்கற்ப நிராகரணம் ஒரு சாணைக்கல் (Whetstone) போன்றதெனலாம்.

**பழமையும் புதுமையும் :**

உமாபதி சிவம், புதுமை யுணர்வும் முற்போக்குக் கொள்கையும் உடையவர் என்பது, நாம் அறிந்து மகிழ்தற்குரியது. மக்களுட் சிலர் பழமையினையே விரும்புவர். வேறு சிலரோ புதுமையினையேவிரும்பிப் போற்றுவர். 'புதியன கண்ட போழ்து விடுவரோ புதுமை காண்பார்' எனக் கம்பர் பாடுவது போல, மக்களுட் பெரும்

(2) "All partitions of knowledge should be accepted, rather for lines to mark and distinguish than for sections to divide and separate, so that the continuance and entirety of knowledge be preserved."

—FRANCIS BACON.

(3) "Vachaspathi Misra, who commented on almost all the systems of Hindu thought, wrote on each, as if he believed in its doctrines."

—DR. S. RADHAKRISHNAN.

பாலோர்க்குப் புதுமையில் ஒரு வகை வியப்பும் மோகமும் நிகழ்தல் உண்டு. இந்நாளில் ஒரு சிலர், ஏதோ தாங்கள்தான் புதுமைக் கருத்தும் முற்போக்கு நோக்கமும் உடையவர்கள் போல நினைத்துக் கொள்ளுதலைக் காண்கின்றோம். ஆனல், இற்றைக்கு ஏறத்தாழ 600 ஆண்டுகளுக்கு முன்பே, உமாபதி சிவம் மிக்க முற்போக்கு மனநிலை உடையவராக விளங்கியிருந்தார். பழமையைத் தழுவுவதோடு மட்டும் அமைந்து விடாமல், புதுமைகளைப் போற்றுவதிலும் உமாபதிசிவம் மிக்க ஆர்வமும் ஊக்கமும் உடையவராகத் திகழ்ந்திருந்தார்.

''பழமையான நூல்கள் அனைத்துமே நல்லன அல்ல. இந்நாளில் தோன்றுகின்ற புதிய நூல்கள் யாவுமே தீயனவாகிவிடமாட்டா. பழையன சிலவற்றுள் குற்றமும், புதியன பலவற்றுள் நற்றமும் அமைந்திருப்பது இயற்கை. நல்லிலக்கணங்கள் அமையப்பெற்ற ஒரு மணியினைப் புறத்தே மாசு படிந்து பொதிந்திருப்பினும், தலையாயவர்கள் அதன் உண்மை மதிப்பு அறிந்து விரும்பி ஏற்றுக் கொள்வார்கள். இடைப்பட்ட தன்மையுடையவர்கள், அம்மணியின் பழமையையும் அழகையும் ஆராய்ந்து பார்த்து அணிந்து கொள்வர். ஒரு பொருளின் குணத்தையோ குற்றத்தையோ ஆராய்ந்தறியும் திறனில்லாத கடைப்பட்டவர்களே, பலர் ஒன்றைப் புகழ்ந்தால் தாமும் கண்மூடிக் கொண்டு அதனைப் புகழ்வர்; பலர் ஒன்றை இகழ்ந்தால் தாமும் கண் மூடிக்கொண்டு அதனை இகழ்வர். இங்ஙனம் தமக்கென ஒரு திறனே கொள்கையோ இல்லாமல், ஏனைப் பெரும்பாலோர் சென்ற வழியினையே தாமும் பின்பற்றி ஒழிதல், அறிவில்லாத கடை மக்களின் பண்பு'' எனச் சிவப்பிரகாசம் என்னும் நூலில், உமாபதி சிவம் உரைத்தருளுமாற்றல், அவர் தம் இனிய உள்ளப் பாங்கை யாவரும் தெள்ளிதின் உணரலாம்.

''தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா; இன்று தோன்றிய நூல் எனும் எவையும் தீதாகா; துணிந்த நன்மையினர், நலங்கொள்மணி பொதியும் அதன் களங்கம் நவையாகாதென உண்மை நயந்திடுவர்; நடுவாம் தன்மையினர், பழமை அழகாராய்ந்து தரிப்பர்; தவறு நலம் பொருளின்கட் சார்வு ஆராய்ந்து அறிதல் இன்மையினர், பலர் புகழில் ஏத்திடுவர்; ஏதிலர் உற்று இகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர்; தமக்கென ஒன்றிலரே''

என்பது உமாபதி சிவத்தின் இனிய அருளுரை. இச்செய்யுட் பொருள் எத்துணை விழுமியது என்று சொல்லுதலும் வேண்டுமோ? இத்தகையதொரு கருத்து, காளிதாசர் இயற்றிய மாளவிகாக்நி மித்திரம் என்னும் நூலில் வந்திருப்பதும் இங்கு நாம் ஒப்பிட்டு மகிழ்தற்குரியது. (4)

(4) "Kalidasa in his Malavikagnimitra says: Everything is not good simply because it is old; no literature should be treated as unworthy simply because it is new. Great men accept the one or the other after due examination. Only the fool has his understanding misled by the beliefs of others."

—DR. S. RADHAKRISHNAN, "*Recovery of Faith*."

**புதுவகை விளக்கம் :**

உமாபதிசிவம் நல்ல பெருஞ் சிந்தனையாளர். எதனையும் தெளிவுற எளிதின் விளக்கும் திறனுடையவர். அவர் பொருள்களை விளக்கும் முறைகளில் ஒரு புதுமை நலம் பொலிந்து காணப்படும். தாம் விளக்கும் செய்தி ஒரு வகையிற் பழமையுடையதாகவே இருந்தாலும் அதனைப் புதிய முறைகளில் வெளியிடுதல் அவர்க்குரிய இயல்பாகும். மக்கள் மனம் ஒரே வகையில்தான் சிந்தித்தல்வேண்டும் என்று கருதாமல், ஒரு பொருளையே பலவேறு கோணங்களில் ஆராய்ந்தறியலாம் என்று, சிந்தனைக்கு உரிமையும் வாய்ப்பும் அளித்தவர் உமாபதிசிவம். இதனை மெய்ப்பிக்கும் ஒரு சில இனிய சான்றுகளை மட்டும் சுருக்கமாக ஈண்டுக் காண்போம்.

(1) சைவ சித்தாந்தத்தில் பதிபசுபாசம் எனப் பொருள்கள் மூன்றே என்பது வழக்கம். பதிபசு பாசம் ஆகிய முப்பொருள்களையே, இவர் ஆறு பொருள்களாகக் குறிப்பிடுதல், இதற்குத் தக்க எடுத்துக் காட்டாகும். ''இறைவன் உயிர்கள் ஆணவம் கன்மம் சுத்தமாயை அசுத்தமாயை எனப் பொருள்கள் ஆறு. இவைகள் அநாதியேயுள்ளன'' என உமாபதி சிவம் உணர்த்துகின்றார்.

''ஏகன் அனேகன் இருள்கருமம் மாயை இரண்டு
ஆகஇவை ஆறு;ஆதி யில்''.

என்பது திருவருட் பயன். அற்றேல், இங்ஙனம் சைவ சித்தாந்த தத்துவ உண்மையொடுமுரணுமாறு இவர் கூறியிருத்தல் பொருந்துமோ எனின், ஒரு பொருளைக் குறித்தே பலவகையிற் பல கோணங்களில் சிந்தித்துணர்தலும் உணர்த்துதலும் இன்றியமையாதன என்னும் கருத்தினராதலின், இங்ஙனம் கூறினர். ஆயினும் உண்மைக்கு முரணுமலும், தக்க சான்றுகள் கொண்டுமே கூறியிருக்கும் திறம், இவர் தம் சிறப்பியல்புகளைப் புலப்படுத்தும்.

''சுவாயம்புவம் முதலியவற்றிற் பொருள்கள் ஏழு என்றலும், பவுட்கரம் மதங்கம் முதலியவற்றின் ஆறு என்றலும், பராக்கியை முதலியவற்றின் ஐந்து என்றலும், சர்வஞ் ஞானேத்தரம் முதலியவற்றின் நான்கு என்றலும், இரௌரவம் மிருகேந்திரம் முதலியவற்றின் மூன்று என்றலும் காணலாம். அவை யெல்லாம் மூன்று என்றதனுள் அடங்குதலின் முப்பொருள் என்றலே எல்லா ஆகமங்கட்கும் துணிபு.''

எனச் சிவஞான சுவாமிகள், தமது சிவஞான போதப் பேருரையிற் குறிப்பிட்டிருத்தல் ஈண்டு எண்ணியுணரற்பாலது. முப்பொருள்களையே ஆகமங்கள் வெவ்வேறு வகையில் விரித்து உணர்த்துதல் உண்டு என்று அறிவித்தற்கே, உமாபதி சிவம் பொருள்களை ஆறு என்றும் குறிப்பிடுவாராயினர்.

(2) அருள் நந்தி சிவம், தம் நூலிற் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டை என ஞானம் நான்கு வகைப்படும் என்று குறிப்பிட்டார்.

''கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை
கிளத்தல்என ஈர்இரண்டாம் கிளக்கின்ஞானம்''

என்பது சிவஞான சித்தியார் செய்யுள் (276). உமாபதி சிவம் இதனையே வேறொரு வகையால் இரண்டு என்றுகூறுகிறார். ஒன்று திருவருளோடு கூடி இரண்டற நின்று அனுபவிக்கின்ற ஞானம். மற்றொன்று சிவாகமங்களை ஓதியுணர்ந்து அறியும் ஞானம். முன்னையது முதலிகள் மூவர்க்கும் நிகழ்ந்தது. பின்னையது திருநந்தி தேவர் முதலான சந்தான குரவர்கள், உபதேசத்தினுற் பெற்றது. இவற்றை முறையே பரஞானம் அபரஞானம் என்பர்.

''உயர்ஞானம் இரண்டாம்; மாறு
மலம்அகல அகலாத மன்னுபோதத்
திருவருள் ஒன்று; ஒன்றுஅதனைத் தெளியஓதும்
சிவாகமம்என் றுலகறியச்செப்பும் நூலே''

—சிவப்பிரகாசம் (10)

ஞானம் பற்றிய இப்பாகுபாடுகள் ஒரு வகையிற் பெரிதும் முதன்மை வாய்ந்தன. ஏனெனில் இவற்றை அடிப்படையாகக் கொண்டு, ''சிவனடியே சிந்திக்கும் திருப் பெருகு சிவஞானம்'' எனத் தொடங்கும் பெரிய புராணப் பாடலிற் குறிக்கப் பெறும் ஞானத் திறங்கள் எவை என்பது பற்றிச் சைவ உலகின் மாபெரும் சான்றோர்கள் ஆகிய சென்னை சீலத்திரு சோம சுந்தர நாயகர், யாழ்ப்பாணம் வடகோவைச் சபாபதி நாவலர், மதுரை மகாவித்துவான் சபாபதி முதலியார் போன்ற பேரறிஞர்களிடையே இற்றைக்கு 70—80 ஆண்டுகளுக்கு முன்னர் மாபெருஞ் சொற் போர்கள் நிகழ்ந்துள்ளன; மறுப்புரை நூல்கள் (Polemical phamplets) பல வெளிவந்துள்ளன.

(3) உமாபதி சிவம் நிரம்ப நூல்கள் இயற்றிய ஒரு சிறந்த பெருங்கவிஞர் (Prolific poet). சித்தாந்த சாத்திரங்களில் எட்டுச் சிறந்த நூல்களை இயற்றியதேயன்றி,

கோயிற் புராணம்
சேக்கிழார் புராணம்
திருமுறைகண்ட புராணம்
திருத்தொண்டர் புராணம்
திருப்பதிக் கோவை

என்னும் பிற நூல்களையும் இவர் பாடியிருக்கின்றார். ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு தனி நடையும் சிறப்பும் பெற்று மிளிர்கின்றது. விருத்தம், வெண்பா, கலிவெண்பா, குறட்பா, கட்டளைக் கலித்துறை ஆகிய பல்வேறு பாவினங்களையும் கையாண்டுள்ளார். நூற்பொருட் பாகுபாடுகளிலும் அவர் புதிய முறையினைப் பின்பற்றியிருக்கின்றார். திருவருட் பயனின் பத்துத் தலைப்புக்களும் இதற்கு நல்ல எடுத்துக் காட்டு. மற்றும் சிவப்பிரகாசம் என்னும் நூலில், தமக்கு முதனூலும் வழி நூலும் ஆகிய சிவஞானபோதம் சிவஞான சித்தியார் என்பவை, பன்னிரண்டு சூத்திரங்களாக அமைந்திருக்க, இவர் பெத்தம் முத்தி என்று இரு பாகுபாடு செய்துகொண்டு, முதல் ஐம்பது பாடல்களில் பெத்த நிலையினையும், பின்னை ஐம்பது பாடல்களில் முத்தி நிலையினையும் பற்றி விளக்குகின்றார். ''பெத்த முத்திகள் மதித்தாம் அன்றே'' என்பது, சிவப் பிரகாசச் செய்யுள் (99). முத்தி நிலைபற்றிய பகுதியில், தாம் கூறலுறும் செய்தியினை

1. ஆன்ம இலக்கணம்
2. ஐந்தவத்தைகளின் இயல்பு
3. கேவல நிலையில் உயிர்களுக்கு இறைவன் உணர்த்தும் முறைமை.
4. ஞான வாய்மை
5. ஆன்ம தரிசனம்
6. ஆன்ம சுத்தி
7. ஆன்ம லாபம்
8. ஐந்தெழுத்தருள் நிலை
9. அணைந்தோர் தன்மை.

எனத் தாமே ஏற்றபெற்றி பொருட் பாகுபாடு செய்துகொண்டு விளக்கியிருக்கின்றார்.

இங்கிவை பொது இயம்பும்
என்பர்கள்; இதன்மேல் ஆன்மா,
தங்கிய ஐந்த வத்தை,
தன்னுண்மை உணர்த்தும் தன்மை,
பொங்கொளி ஞான வாய்மை,
அதன்பயன், புனிதன் நாமம்,
அங்கதின் அணைந்தோர் தன்மை,
அறைகுவன் அருளி னலே.

—சிவப்பிரகாசம், 651.

என இவர் அருளிச் செய்திருத்தல் காணலாம். இங்ஙனம் இவர் தமக்கென ஒரு நெறியினை வகுத்துக் கொண்டு கருத்துக்களை விளக்குவராயினும், தம் முன்னையோர் வகுத்தருளிய பன்னிரண்டு சூத்திர அமைப்பு முறையினையும் நழுவவிடாமல் தழுவிப் போற்றியே, சிவப்பிரகாசம் என்னும் சிறந்த நூலினை இயற்றியிருத்தல், உரைகாரர்களால் விளக்கப் பெற்றிருத்தல் அறிந்து மகிழத் தக்கது.

## திருவருட் பயன் :

(4) உலகிற் சிறந்த சமய ஆசிரியர்கள் என விளங்கியிருந்த அனைவரும், ''உழுத சால் வழியே உழுவான் பொருட்டு இழுதை நெஞ்சம் இதென் படுகின்றதே'' எனத் திருநாவுக்கரசர் பாடுமாறு போலப் பழமையினையே போற்றிக் கொண்டு செல்லாமல், தமக்கேயுரிய இயல்பிற் பலப்பல புதுமைப் போக்குகளையும் புகுத்தியருளி உலகுக்கு நலம் புரிந்துள்ளனர் (5). அம்முறையில், உமாபதி சிவாசாரியர் சித்தாந்தக் கருத்துக்களை விளக்கும் முறையில், ஒரு புதுமையும் இனிமையும் பொலிதலைப் பின்வரும் சில உதாரணங்களால் உணரலாம் :

(அ) பொருள்களை ஞானக் கண்ணினல் காணப் பெருத உயிர்களுக்கு ஞான மெல்லாம் அஞ்ஞானம் போலவே தோன்றும். எங்ஙன

---

(5) "The great religious teachers of the world preach something different from the traditions they inherit. The seers of the Upanishads, Gauthama the Buddha, Zoroaster, Socrates, Jesus, Muhammed, Nanak and Kabir had to undergo in their lives an inevitable breakaway from the traditional views."

—Dr. S. Radhakrishnan,
"*Recovery of Faith.*"

மெனில், பகலில், கண் தெரியாத கூகை என்னும் பறவையின் கண்களுக்கு இருளை நீக்கும் ஞாயிற்றின் ஒளியும் இருளாகவே அமைதல் போல,

> ஊமன்கண் போல, ஒளியும் மிக இருளே
> யாம்; மன்கண் காணு தவை.

(ஆ) ஆணவம் மிகவும் கொடியது. இருள் போன்றது. இருளாவது வேறு பொருள்களை யெல்லாம் மறைத்தாலும், தன் உருவத்தைக் காட்டி நிற்கும். ஆனல், ஆணவ மலமோ பிற பொருள்கள் அனைத்தையும் மறைப்பதோடு அன்றித், தன்னையும் கூடக் காட்டாமல் முற்றிலுமே மறைத்துவிடும்.

எல்லா உயிர்களையும் எக்காலத்தும் புணர்ந்து நின்ருலும், தான் புணர்ந்து நிற்கும் உயிராகிய கணவனுக்கும் கூடத் தன்னைக்காட்டி வெளிப்படுத்திக் கொள்ளாத ''கற்புத்தன்மை'' ஆணவ மலம் ஆகிய அரக்கிக்கு உண்டு.

"ஒருபொருளும் காட்டாது இருள், உருவம்காட்டும்; இருபொருளும் காட்டாது இது''

''பலரைப் புணர்ந்தும் இருட்பாவைக்கு உண்டு என்றும்
கணவற்கும் தோன்ருத கற்பு.''

(இ) திருவருள் துணையினல் வாழும் உயிர்கள் அத்திருவருளை அடைந்து இன்புருமல், மயக்கமாகிய பிறவிக் கடலில் விழுந்து புலன் வழிகளிலேயே உழன்று அலையா நிற்கும்; எதுபோல எனில், பாற் கடலிலே வாழ்கின்ற மீன்கள் பாலைக் குடித்து இன்புற்று வாழாமல், அதன்கண் உள்ள அழுக்குகளையே தேடி அலைந்துண்டு வாழ்தல் போல.

''பால்ஆழி மீன்ஆளும் பான்மைத்து; அருள்உயிர்கள்
மால்ஆழி ஆளும் மறுத்து.''

(ஈ) உயிர்கள் தம்மைத் தாங்கி நலஞ் செய்யும் திருவருளின்பத்தைப்பெறுவதைவிட்டு உலகியல் நுகர்ச்சிகளை விரும்பியுழன்று, திருவருளையும் இழந்து, உலக நுகர்ச்சியும் விரும்பிய வாறு கைகூடப் பெருமல், வருந்தி அலைகின்றன. எது போலும் எனில், உறியின் மீதிலுள்ள பாற் பானையின் மேல் தாவிச் சென்று அமர்ந்துள்ள பூனையானது பாலைப் பருகுதலை விட்டு, அங்கே கூரையின் மேல் ஓடிச் சென்று மறைய முயலும் ஓர் எலியைக் கண்டு அதன்மேற் பாய்ந்து, அவ்வெலியையும் பிடிக்க முடியாமல், உறியிலுள்ள பாலையும் கவிழ்த்து, தானும் கீழே விழுந்து, துன்புறுதலைப் போலும்.

''பரப்பமைந்து கேண்மின் இது; பாற்கலன் மேற் பூசை
கரப்பு அருந்த நாடும் கடன்''

[பூசை—பூனை; கரப்பு—எலி.]

(உ) ஆசாரியன் ஒரு வகையில் இறைவனிலும் சிறந்தவன் ஆவான். நஞ்சு தீண்டப் பெற்ற ஒருவனின் கழுத்தில் கீரிப் பிள்ளையையே கொண்டு வந்து கட்டினுலும் நஞ்சு தீராது; கீரிப் பிள்ளையைப் போலத் தன்னைப் பாவித்து மந்திர சித்தி கைவந்த ஒருவன் இடும் கயிற்றினுலேயே, நஞ்சு தீண்டப் பெற்றவன் உயிர் பெறுதல் இயலும். அதுபோல, ஆணவ மலத்தினின்று உயிர்களை இறைவன் நேரே விடுவிக்க மாட்டான்; இறையருள் பெற்ற ஞானசிரியர்களே உயிர்களைப் பற்றியுள்ள மலவலியைப் போக்க வல்லவர் ஆவர். நஞ்சு ஆணவம். கீரி இறைவன்; பாவகன் மந்திரம் வல்லவன். உயிர் பெறுதல்—வீடுபேறு அடைதல்.

''விடம்நகுலம் மேவினும் மெய்ப்பாவகனில் மீளும்
கடனில், இருள்போவது இவன்கண்''

> நகுலம்—கீரிப்பிள்ளை
> பாவகன்—மந்திர சித்தி பெற்றவன்
> கடனில்—முறைபோல

(ஊ) அருள் புரியும் இறைவன் என்றும் உள்ளான். அருள் பெறுதற்குரிய உயிர்களும் என்றும் உள்ளன. ஆயினும் உயிர்களுக்குஅருட் பேறு எளிதில் வாய்த்து விடுவதில்லை. உயிர்களுக்கும் இறையருளுக்கும் இடையே போந்து, இறையருளைத் தான் பெற்றுத் தன் வழியே உயிர்கள் இறையருளைப் பெறுதலில் துணை புரிவதற்கு ஒரு ஞான ஆசிரியன் இன்றியமையாதவன் ஆவன். எதுபோல எனில், சூரியனும் உள்ளான். அவனுக்குத் தீக்காலும் தன்மையும் உள்ளது. எனினும் தீப்பற்றும் இயல்புடைய பஞ்சு தீப்பிடிப்பதில்லை. சூரியனுக்கும் பஞ்சுக்கும் இடையே ஒரு சூரிய காந்தக்கல் (Lens) இருந்தால்தான் பஞ்சில் தீப்பற்றும். அதுபோல் என்பது. சூரியன் இறைவன். பஞ்சு உயிர். சூரிய காந்தக்கல் ஞான ஆசிரியன். நெருப்பு ஞான ஒளி.

''ஞானம் இவன் ஒழிய நண்ணியிடும்; நற்கல்அனல்
பானு ஒழியப் படின்.''

> நற்கல்—சூரிய காந்தக்கல்
> பானு—சூரியன்
> அனல்—நெருப்பு

இங்ஙனம் எளிய இனிய சிறந்த உவமைகள் (Homely similes) கொண்டு, அரிய பெரிய கடினமான பொருள்களை விளக்குதல் உமாபதி சிவத்தின் தனிப் பெரும் சிறப்பியல்பாகும்.

**சிறப்பியல்புகள் :**

உமாபதி சிவம் திருமுறைகளிலும் நாயன்மார்களிடத்திலும் மிக்க ஈடுபாடு கொண்டவர். சிறப்பாகச் சேக்கிழார் திருவள்ளுவர் போன்ற சிறந்த செந்தமிழ்ச் சான்ருேர்களை உமாபதி சிவம் பெரிதும் மதித்துப் போற்றியுள்ளார். திருவாசகத்தின்பால் அவருக்குச் சிறந்த ஈடுபாடு இருந்தது. திருவாசகப் பாடல்களை அவர் தம்முடைய நூல்களில் மேற்கோளாக எடுத்துக் காட்டியிருக்கின்ருர்.

இந்திய நாட்டு ஆசிரியர்கள் வேறு பிறர் எவரிடத்தும் காணப்பட்டாத வரலாற்றுணர்ச்சி (Sense of History & Chronology), நம் உமாபதி சிவத்தின்பால் நன்கினிது அமைந்திருந்தது. சாலிவாகன சகாப்தம் 1235 (கி.பி. 1313) ஆம் ஆண்டில், தாம் சங்கற்ப சிராகரணம் இயற்றிய செய்தியினை,

''ஏழஞ்சு இருநூறு எடுத்த ஆயிரம்
வாழும்நற் சகனம் மருவா நிற்ப''.

என்னும் வரிகளில் உமாபதி சிவம் குறிப்பிட்டு இருப்பது, கால ஆராய்ச்சிக்கும் வரலாற்று வளர்ச்சிக்கும் பெரிதும் துணை புரிந்துள்ளது. இந்தக் காலக் குறிப்பின் துணை கொண்டே, பிற சைவ சித்தாந்த நூல்களின் காலம் முதலிய வற்றை நாம் அறிய முடிகின்றது. பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை அவர்கள், தம்முடைய 'திருஞான சம்பந்தர் கால ஆராய்ச்சி' என்னும் நூலில் உமாபதி சிவம் உதவியிருக்கும் இக்காலக் குறிப்பினை மிகவும் வியந்து பெரிதும் போற்றியுள்ளார்.(6).

தில்லைவாழ் அந்தணர் திருமரபில் உதித்த உமாபதி சிவம், பல்லக்கில் இவர்ந்து பரிவாரங் கள் ஒளி விளக்கு ஏந்தி வரச் சென்று கொண் டிருந்த தம்மைக் கண்டு, ''பட்ட மரத்திற் பகற் குருடு போவதைப் பாரீர்'' என்று பக்க வில் இருந்தோர்க்குச் சுட்டிக் காட்டிக் கூறிய மறை ஞான சம்பந்தரைக் குருவாக ஏற்றுக் கொண்டதும், நெசவு வேலை செய்வோர் பாவோடுங்கால் வார்த்த கூழினைக் குடித்து முழங்கை வாரவிட்ட அவர்தம் மிச்சிலை யுண்டு மகிழ்ந்ததும்,

''அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதிய கைச்சீட்டு—படியின்மிசைப்
பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை.''

என இறைவன் விடுத்த திருமுகப் பாடலின்படி, பெற்றான் சாம்பான் என்னும் அன்பருக்குத் தீக்கை புரிந்தருளியதும் ஆகிய செய்திகள், உமாபதி சிவம் ''சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்'' இயல்பினர் அல்லர் என்பதனை யுணர்த்தும்.

**சைவசித்தாந்தம்:**

இனி இறுதியாக ஒன்று சிந்தித்து அமை தல் சாலும். மனிதர்களுக்குக் கொள்கை என்பது, ஆழ்ந்து ஆராய்ந்து சிந்தித்துப் பல் லாற்றானும் நல்லதெனத் தெளிந்த நெறி முறையினை வாழ்க்கையிற் கடைப்பிடிப்பது. அங்ஙனம் தாம் கடைப்பிடிக்கும் கொள்கையில், அவரவரும் ஒரு பெருமிதமும் பற்றும் அழுத்த மும் ஆர்வமும் உடையவராதல் கடமை. அம் முறையில் மறைஞான சம்பந்தரால் ஆட்கொள் ளப்பெற்றுச் சைவ சித்தாந்தச் சான்றோராக விளங்கிய உமாபதி சிவம், இச்செந் நெறியின் கண் அழுந்திய தெளிவும் பற்றும் ஆர்வமும் உடையவராகத் திகழ்ந்தார்.

''சைவ சித்தாந்தம் வேதாந்தம் என்பத னோடு மாறுபட்டதன்று. அதனது தெளிவாக வும் விரிவாகவும் திகழ்வது. வேதத் தலைதரு பொருளாய் விளங்குவது. 'ஓரும் வேதாந்தம் என்ற உச்சியிற் பழுத்த ஆரா இன்ப அருங்கனி பிழிந்து, அதன் சாரங் கொண்டது' சைவ சித் தாந்தம். ஏகான்மவாதம் என்னும் கொள் கையினை ஒரு சிலர் வேதாந்தம் எனக் கூறுவர் (7). வேதாந்தம் என்பது வேதத்தின் முடிவு களாகிய உபநிடதங்களையே குறிக்கும். பல பொருள் படும் சூத்திரத்தை அங்ஙனம் படாமைத் தெளிவித்துரைக்கும் பாடியம் போல உபநிடதங்கள் ஆகிய வேதாந்தத்தின் பொருளைத் தெளிவித்து ஐயமற விளக்குவதே சைவ சித்தாந்தம்.

சைவ சித்தாந்தம் சற்காரிய வாதம் என் னும் அறிவியலுண்மையினை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. முன்னுக்குப் பின் முர ணாமல், 'மலைவறும் உணர்வு' என நிலவுவது. உலகாயதம் புத்தம் சமணம் மீமாம்சம் மாயா வாதம் முதலிய புறச்சமயக் கொள்கையாளர் கள் உணர்வரியது; சைவம் பாசுபாதம் காளா முகம் வயிரவம் வாமம் மாவிரதம் என்னும் அகச்சமயக் கொள்கையாளர்கள் அறுவர்க்கும் விளங்கத் தக்கது; தருக்க நெறி முறைகளிற் பிறழாமல் அவற்றிற்கு இலக்கியம் எனலாம்படி இலங்குவது.

''இறைவனும் உயிர்களும் பொன்னும் மணி யும்போல அபேதம் என்னும் ஏகான்மவாதிகள், சொல்லும் பொருளும் போற் பேதாபேதம் என்னும் பரிணாம வாதிகள், இருளும் ஒளியும் போல் பேதம் என்னும் துவைதிகள் ஆகிய மூவகையினருக்கும் அப்பாற்பட்டது.

''கலப்பினால் உடலின் உயிர்போல் ஒன்றாய், பொருட்டன்மையாற் கண்ணின் அருக்கன் போல வேறாய், உயிர்க்குயிராதற் றன்மையால் கண்ணொளியின் ஆன்மபோதம் போல உடனாய், இறைவன் உயிர்களொடு அத்துவிதமாய்ப் பிரிவின்றி இயைந்து நிற்பன்.

இவ்வத்துவிதம் அபேத சம்பந்தம் ஆகிய ஐக்கியமும் அன்றிப் பேதாபேத சம்பந்தம் ஆகிய தாதான்மியமும் அன்றிப் பேதசம்பந்தம் ஆகிய சையோகமும் அன்றிக் கலப்பாதலும் உட னாதலும் வேறாதலுமாகிய மூன்றும் தன்கண் தோன்ற நிற்றல் பற்றி அம் மூன்றற்கும் பொது வாய், அம்மூன்றுமே தன்கண் தோன்ற நிற்கும். இங்ஙனம் இறைவனோடு உயிர்கட்குள்ள அத்து வித இயைபினை அழகுற விளக்கும் சிறப்புடை யது சைவ சித்தாந்தமே யாகும்.''

---

(6) Here then is a date which may prove a veritable lodestar to guide us through the conjectural cloudland of current chronology."

—PROF. P. SUNDARAM PILLAI, M.A.,
*The age of Thirugnana Sambandha*, p. 23.

(7) "It is the most unfortunate thing in India and in Indian Religion that the same books and the same texts furnish the authority and the sanction for every existing phase of belief and thought, and when this fact is coupled with such a blind ignoring of what is past and what is modern, and when the materials for applying such an historical test are not very considerable, the task of deciding which is the true interpretation and which is false, is rendered very difficult though not impossible."

—J. M. NALLASWAMI PILLAI,
*Studies in Saiva Siddhanta*, p. 242.

''புறச்சமயத்தவர்க்கு இருளாய், அகச்சமயத்து ஒளியாய்ப், புகல் அளவைக்கு அளவாகிப், பொற் பணிபோல் அபேதப் பிறப்பிலதாய், இருள்வெளி போல் பேதமும், சொற்பொருள்போல் பேதா பேத மும் இன்றிப், பெருநூல் சொன்ன அறத்திறனுல் விளைவதாய், உடல்உயிர் கண்அருக்கன் அறிவொளி போற் பிறிவரும் அத்துவிதம் ஆகும் சிறப்பினதாய், வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத் திறன் இங்குத் தெரிக்கலுற்றும்.''

—சிவப்பிரகாசம், 7.

என்றெல்லாம் சைவ சித்தாந்தச் செந் நெறி யின் தனிப் பெருஞ் சிறப்பினை மிகவும் வலி யுறுத்திப் பறைசாற்றிப் பரப்பிய பெருமை, உமாபதி சிவத்திற்கு உரிய தெனலாம். தமிழ்ப் பெருஞ் சான்றோர்களுள் ஒருவராகிய உமாபதி சிவத்தின் அருமை பெருமைகளை அறிந்து, தமிழர் அனைவரும் போற்ற வேண்டுவது, தமிழ ரின் தலையாய கடமைகளுள் ஒன்றாகும்.

**வாழ்க உமாபதிசிவம்!**


**வளர்க சைவசித்தாந்தம்!**

செந்தமிழ் நாட்டுச் சிந்தனைத் தெளிவிற்
செழித்தநல் விழுப்பெரும் பொருளே
நந்தம துயர்ந்த சைவசித் தாந்த
நலந்தரு தத்துவம் ஆகும்!
அந்தநன் னெறியினை எண்பெரு நூலால்
அழகுற அறிவுறுத் தருளும்
எந்தையாம் தில்லை உமாபதி சிவனர்
எழில்மலர்த் தாளிணை பணிவாம்.

—ந. ரா. மு.

[தருமபுர ஆதீனத்தில் நிகழ்ந்த ''திரு நெறிய தெய்வத் தமிழ்'' மாநாட்டின் சார்பில் நடைபெற்ற சமயப் பயிற்சி வகுப்பில் நிகழ்த் திய சொற்பொழிவின் தொகுப்புச் சுருக்கம்]

158603



சென்னை கோடம்பாக்கம் வடபழனி அருள்திரு வடபழநியாண்டவர் திருக்கோயில் திருக்குளத்தில் தூர் எடுக்கும் விழாவில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தல்.



சேலம் அருள்மிகு சுகவனேசுவரர் திருக்கோயிலில் நடைபெற்ற 'பாவை மாநாடு' இதில் கலந்து கொண்ட நிர்வாக அதிகாரி, திரு. ஆறுமுகம், பி.ஏ., உதவி ஆணையர் திரு. பி. கந்தசாமி, பி. எஸ்ஸி., அறங்காவலர் குழுத்தலைவர், திரு. பி.எஸ். மாணிக்கம், எம்.சி., முதலானோர்.

# காதி கிராப்ட்

அளிக்கிறது சுவையும், வெண்மையும்.




ஆடைகள் பளிச்சிட கோபுரம் மார்க் சோப்.

ஆரோக்யம் தரும் சுத்தமான தேன், கதர்த்துணி, பட்டுப்புடவைகள், ரெடிமேட் ஆடைகள், சுத்தமான எண்ணெய், கலையழகு கொஞ்சும் கைவண்ணப் பொருள்கள், பொம்மைகள், பனை வெல்லப் பொருள் மற்றும் தரமேன்மையான பற்பல பொருட்களையும் வாங்கலாம்.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களில் 200க்கும் மேலான காதி கிராப்ட்கள் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்றன.




| தொலைபேசி | சென்னை | திருச்சி | கோவை |
|---|---|---|---|
| | 29684 | 3814 | 35051 |
| | 81954 | | |


வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.